விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 31 வியாழக்கிழமை (14.05.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 146

# கோத்தபாயவை கைது செய்ய நீதிமன்றம் இடைக்காலத் தடை



(கொழும்பு)
முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வின் அடிப்படை உரிமை மனு மீதான விசாரணை நிறைவு பெறும்வரை அவர் கைது செய்யப்படுவதை தடுக்கும் வகையில் உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது. முன்னாள் பாதுகாப்பு செயலாளர் தாக்கல் செய்த மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டதை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தஅடிப்படைஉரிமைமனுவை பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்ட மூவரடங்கிய நீதியரசர்கள் குழாமில் இருந்து நீதியரசர் புவனேக அலுவிஹாரே நேற்று விலகிக் கொண்டார். இதற்கமைய, உயர் நீதிமன்ற நீதியரசர்களான ஈவா வனசுந்தர 24ஆம் பக்கம் பார்க்க....

## வீரதுங்கவிடம் வாக்குமூலம்

(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்கவிடம் பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவு நேற்று வாக்குமூலம் பதிவு செய்தது.

2006 ஆம் ஆண்டு ஜனாதிபதி செயலகத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ராடா நிறுவனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பில், முன்னாள் ஜனாதிபதி செயலாளரிடம் நேற்று வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டதாக பொலிஸ ஊடகப் பிரிவு தெரிவித்தது. (எ-11)

## அடுத்த பாராளுமன்றமூடாக வட-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு

### அமைச்சரவை பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)
பாராளுமன்றத் தேர்தலுக்கு பின்னர் அமைக்கப்படுகின்ற பாராளுமன்றத்திலேயே வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

மேலும் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கு பின்னர் நாட்டுக்கு புதிய அரசியலமைப்பு ஒன்றும் அறிமுகப்படுத்தப்படும். அதற்கான வேலைத்திட்டங்களை அடுத்த பாராளுமன்றத்தில் முன்னெடுப்போம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் செயற்பாடுகள் எவ்வாறு அமையவுள்ளன என்றும் அதற்கு எவ்வாறான அணுகுமுறையை அரசாங்கம் முன்னெடுக்கும் என்றும் வினவியதற்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் ராஜித சேனாரட்ன இந்த விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

வடக்கு, கிழக்கு அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகாணும் செயற்பாட்டை நாங்கள் விட்டு விடவில்லை. அதற்கான நடவடிக்கைகள் அடுத்த பாராளுமன்றத் தேர்தலின் பின் 24ஆம் பக்கம் பார்க்க....



## அமைச்சரவைக்கு முழு சுதந்திரம்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)
அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது முதுகெலும்புடன் செயற்படக் கூடிய வகையில் அமைச்சரவைக்குத் தான் முழு சுதந்திரத்தையும் வழங்கியுள்ளதாக ஜனாதிபதி மைததிரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு அரச தாதியர் சங்கம் அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 10 வருடங்களாக பல்வேறு அடக்குமுறை 24ஆம் பக்கம் பார்க்க....

## நீதிமன்ற நீதியரசர் பதவி விலகல்!

(கொழும்பு)
முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை விசாரிக்கும் நீதிபதிகள் குழுவில் இருந்து உயர் நீதிமன்ற நீதியரசர் புவனேகா அலுவிகார விலகியுள்ளார். 24ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த பிரதமராகிய பின் யானைக்கு விசேட மருந்து

### ஹெட்டிகம எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)
யானைக்கு உண்மையான மருந்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கிய பின்னரே கொடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்துஹெட்டிகம தெரிவித்துள்ளார்.

காலி யக்கமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெண்ணைப் போல நடந்து கொள்வதாகவும், ரணில் விக்கிரமசிங்கவிற்கு எவ்வித ஆளுமைகளும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

பெண்ணைப் போன்று நடந்துக் கொள்ளும் ரணில் விக்ரமசிங்கவுடன் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்புகளை பேணுவது 24ஆம் பக்கம் பார்க்க....

## புதனன்று பாராளுமன்றம் கலைக்கப்படலாம் !

(கொழும்பு
பாராளுமன்றம் எதிர்வரும் புதன்கிழமை கலைக்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுவதாக கொழுமபு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதேவேளை, எதிர்வரும் 22-ம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றம் கலைக்கப்படலாம் என்றும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல் முறை மாற்றம் தொடர்பான 20-வது திருத்தச்சட்டம் நேற்று அமைச 23ஆம் பக்கம் பார்க்க....

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி

(கரணவாய்)
மின்சார திருத்த வேலைகளுக்காக ஏணியில் ஏறிய பொழுது மின் தாக்குதலுக்கு இலக்காகி நிலத்தில் தூக்கி வீசப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இத்துயரச் சம்பவம் நேற்று மதியம் 12.30 மணியளவில் துன்னாலை கலிகைச் சந்திப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் அண்ணாசிலையடி கரணவாயைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான மின் சாரசபை 24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி, பிரதமருக்கு எதிராக லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு

(கொழும்பு)
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிராக லஞ்ச ஊழல் மோசடி குற்றச்சாட்டு சுமத் தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டினால் பிரதமர் பதவியை வழங்குவதாக அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன உறுதியளித்தமை ஓர் லஞ்சம் வழங்குதலாகும் என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்புப் பிரிவில் 24ஆம் பக்கம் பார்க்க....

## வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு அரசினால் விளக்கமளிப்பு

### 100 நாள் வேலைத்திட்டம் குறித்து

(கொழும்பு)
இலங்கையில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள முயற்சிகள் குறித்து வெளிவிவகார அமைச்சு வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு தெளிவுபடுத்தியுள்ளது.

கடந்த நான்கு மாதகாலப்பகுதியில் அரசாங்கம் சாதித்த விடயங்கள் குறித்து வெளிவிவகார அமைச்சர் மங்களசமரவீர 24 நாடுகளின் தூதுவர்களுக்கும், நான்கு அதிகாரிகளுக்கும் தெளிவுபடுத்தியுள்ளார்.

அரசாங்கத்தின் எதிர்கால திட்டங்கள் குறித்தும் அவர் இதன் போது தெளிவுபடுத்தியுள்ளார்.

அரசமைப்பு, நிர்வாக மற்றும கலாசார மாற்றங்கள் ஊடாக ஜனநாயகத்தை ஏற்படுத்தும் அரசாங்கத்தினது முயற்சிகள் குறித்து தெளிவுபடுத்தியுள்ள அவர், பன்முகத்தன்மை கொண்டாடப்படும் உண்மையான பல்லின சமூகமொன்றை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் 24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பயங்கரவாதிகளுக்கு அஞ்சலி செலுத்த தடை

## அமைச்சர் கரு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் பயங்கரவாதிகளுக்காக அஞ்சலி செலுத்த முடியாது என பௌத்த சாசன அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

எனினும் போரில் உயிரிழந்த தங்களின் சொந்தங்களுக்காக அஞ்சலி செலுத்த வடக்கு மக்களுக்கு உரிமையுண்டு என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது பாரியளவில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. இந்த விடயங்கள் குறித்து விரைவில் அறிக்கையொன்று வெளியிடப்படும்.

பதவிக் காலம் பூர்த்தியான உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் எவ்வாறான நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து நடைபெறும் அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார். (எ-11)

# யாழ்.மேலதிக அரச அதிபருக்கு திடீர் இடமாற்றம்

## பிரதேச செயலர்களும் இடம்மாறுகின்றனர்

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் வடக்கு மாகாண சபைக்கு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறி நல்லூர் பிரதேச செயலராகவும் வேலணைப் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலர் எஸ்.ஜெயகாந் நெடுந்தீவு பிரதேச செயலராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வட மாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் மருதங்கேணி பிரதேச செயலராகவும் மருதங்கேணி பிரதேச செயலராக கடமையாற்றும் நா.திருலிங்கநாதன் வடக்கு மாகாண சபைக்கும் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ந-9)

# முன்னாள் ஜனாதிபதியால் மைத்திரிக்கு ஆபத்து

## விக்கிரமபாகு எச்சரிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது சகாக்களும் இணைந்து தற்போதைய அரசாங்கத்தைத் தோற்கடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆபத்துக் காத்திருப்பதாக நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படு இயக்கத்தின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அங்கு கருத்து தெரிவித்த விக்கிரமபாகு கருணாரட்ன, தோற்ற பிறகும் மகிந்த அதிகாரத்தில் இருப்பவர் போல் நடந்து கொள்கின்றார். குற்றவாளிகள் கைது செய்யப்படும் போது, அவ்வப்போது வெளிப்பட்டு, மக்களைத் தூண்டிவிட்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் என்பவற்றை செய்து வருகின்றார். இவரது, அடாவடிகள் குறித்து ஜெனிவாவில் முறையிட வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (எ-11)

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-8284) (சி-963)

# 37 இந். மீனவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக்கும் காரைநகருக்கும் இடைப்பட்ட இலங்கை கடற்பரப்பில் சட்ட விரோத மீன் பிடியில் ஈடுபட்டதாக கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 37 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மாதம் 4ஆம் திகதி எல்லை தாண்டி சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்டதாக நாகை மற்றும் காரைக்கால் பகுதியைச் சேர்ந்த 37 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு அவர்களின் 5 படகுகளும் கைப்பற்றப்பட்டன.

இந் நிலையில் இந்த மீனவர்களின் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு இந்த மாதம் 27ஆம் திகதி வரை 4ஆவது தடவையாக விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (எ-9)

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த மகிந்த அரசு செயற்படவில்லை

## பிரதமர் குற்றச்சாட்டு

தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் இதய சுத்தியுடன் செயற்படவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

2009ம் ஆண்டு யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும், மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் மெய்யான நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள சிரத்தை காட்டவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழர் பிரதேசங்கள் உள்ளிட்ட நாட்டின் ஏனைய பகுதிகளை புனர்நிர்மானம் செய்யும் பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை.

யுத்தம் அல்லது கிளர்ச்சி மூலமான வெற்றியானது சமாதானத்தை இழக்க செய்யும் என்பதே எமது கால அரசியல் யதார்த்தம்.

ஈராக்கில் துரித கதியில் சதாம் ஹுசெய்னுக்கு எதிராக இராணுவ வெற்றியீட்டிய போதிலும், உள்நாட்டு கிளர்ச்சிகள் வெடித்ததாகத் தெரிவித்துள்ளார்.

சிரியா, யேமன், லெபனான் போன்ற நாடுகளிலும் சிவில் யுத்தங்கள் இடம்பெற்று வருகிறது.

தசாப்தங்களாக நீடித்த யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டு அரை தசாப்தம் கடந்துள்ள நிலையில், இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முயற்சிக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தாமும் சமாதானத்தை நிலை நாட்ட அர்ப்பணிப்புடன் முயற்சித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அரைகுறையாக யுத்தம் நீடித்து வர வேண்டுமெனவும், தமிழ் மக்கள் ஒதுக்கப்பட வேண்டுமெனவுமே மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கருதியதாகவும் அதன் ஊடாக ஆட்சியை தக்க வைத்துக்கொள்ளவே விரும்பியதாகவும் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார். புதிய அரசாங்கம் நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டியுள்ளதாகவும்,

நாட்டின் அனைத்து பிரஜைகளையும் அச்சத்திலிருந்து மீட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். நாட்டை மீளக் கட்டியெழுப்ப சர்வதேச சமூகத்திடமிருந்து போதியளவு உதவிகள் கிடைக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரியசந்தர்ப்பம் தவறவிடாதீர்கள். விமான நிலையம் (துனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை. சம்பளம் 18000/= - 35000/= வரை. தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும். (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள்.

(477)

தொடர்புகளுக்கு:-0766398366

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1984 - 02 - 20

இறப்பு 2013 - 05 - 14



## தவராசா பவுண்ராஜ்

தங்கப் பவுணனே ஈராண்டு காலம் நிறைவுறும் வேளையிலும்
உன் சோகம் எம் மனதினில் நிறைந்துள்ளதே பவுணா...
நிறைந்துள்ள சோகத்தை நிறைவு செய்வதற்கு முயன்ற வேளையிலும்
உன் அன்பான மழலைப் பேச்சும் பண்பான அரவணைப்பும்
எம் மனதையிட்டு அகலாது பவுணா... எம் ஊர் மக்களின் மனங்களிலும்
நிறைந்த உன் பரிவான வள்ளல் குணங் கொண்ட செயலும்
உன் புன்னகை பூத்த முகமும் எல்லோர் மனதையும் விட்டு
பிரியாதையா பவுணா... உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி... ஓம் சாந்தி...

சுப்பர்மடம்
பருத்தித்துறை.

உன் அன்பான
அப்பா, அம்மா
குடும்பத்தினர்.

(சி-956)

## துயர் பகிர்கின்றோம்

அமரர் பாலசுந்தரம் சிவானந்தசுந்தரம்
(அப்பு அண்ணா)



யா/திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகக் கொண்டவரும் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தின் மூத்த உறுப்பினரும் எமது சங்கத்திற்கு இன்றுவரை எல்லா வகையிலும் ஒத்துழைப்பு நல்கிய **பாலசுந்தரம் சிவானந்தசுந்தரம்** அவர்கள் 11.05.2015 திங்கட்கிழமை காலமானதையிட்டு ஆழ்ந்த துயர்அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருநெல்வேலி
இந்து வாலிபர் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மனங்களை நோகடிக்கக்கூடிய போர்வெற்றியை கொண்டாடமாட்டோம்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

**நாட்டில் ஒரு பிரிவு மக்களின் மனங்களை நோகடிக்கும் விதத்தில் போர் வெற்றிக் கொண்டாட்டங்கள் இடம்பெறமாட்டாது என அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**



நேற்றுக்காலை இடம்பெற்ற வானொலி நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எப்படியிருப்பினும், விடுதலைப் புலிகள் இயக்கத்தை போர் மூலம் தோல்வியடைய செய்வதற்கு தம்மை அர்ப்பணித்த இராணுவ வீரர்களை நினைவுகூரும் முகமாகவும், போரில் பாதிக்கப்பட்ட அனைவரையும் நினைவுகூரும் வகையில் எதிர்வரும் மே மாதம் 19 ஆம் திகதி மாத்தறையில் நிகழ்வொன்று நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் பிரிவினைவாதத்தை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். பிரிவினைவாதம் முழுமையாக தோற்கடிக்கப்பட வேண்டும்.

எனவே, நமது நாட்டிலேயே ஒரு பிரிவு மக்களுக்கு எதிராக போர் ஒன்று முன்னெடுக்கப்படுவதை அனுமதிக்க முடியாது.

இதனால் பிரிவினைவாதிகளான விடுதலைப் புலிகளை போர் மூலம் வெற்றிகொள்வதற்கு தம்மை அர்ப்பணித்த இராணுவ வீரர்களையும், இந்த யுத்தத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களையும் நாம் நினைவுகூர வேண்டும் என்பதனால் தற்போதைய அரசாங்கம் இம்முறை அரச நிகழ்வொன்று ஏற்பாடு செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## பாக். ராணுவ பிரதானியின் இலங்கை விஜயம் இரத்து

பாகிஸ்தான் இராணுவ பிரதானி ஜெனரல் ரஹீல் ஷெரிப், இலங்கை விஜயம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கராச்சியில் இடம்பெற்ற தீவிரவாத தாக்குதலையடுத்தே பாகிஸ்தான் இராணுவ பிரதானியின் இலங்கை விஜயம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக மேஜர் ஜெனரல் அசிம் சலீம் பஜ்வா தனது டுவிட்டர் தளத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வாவின் அழைப்பின் பேரிலேயே அவர், இலங்கைக்கு நேற்று மாலை விஜயம் செய்யவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)


## இரு தடவைகள் மௌன அஞ்சலி

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாதாந்த கூட்டத்தில் இரண்டு தடவைகள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

வழமைக்கு மாறாக இரண்டு தடவைகள் அஞ்சலி செலுத்தப்பட்டமை தொடர்பாக பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப் பினார்.

அதற்குப் பதிலளித்த தவிசாளர் இந்த மண்ணில் உயிர்நீத்த உறவுகளுக்காக அஞ்சலி செலுத்தப்பட்டதாகதவிசாளர்தெரிவித்தார்.(இ-3-60)

## வெள்ளத்தால் பாதிப்பு



உரிய முறையில் வடிகால் அமைக்கப்படாத காரணத்தினால் கந்தர்மடத்தில் உள்ள பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதோடு வீடுகளிற்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளது.

கந்தர்மடம் மணற்தரை லேனில் வடிகால்கள் அமைக்கப்படாத நிலையில் பிரதான வீதியிலிருந்து வருகின்ற வாய்க்காலை குறித்த லேனிற்குள் திருப்பிவிடப்பட்டுள்ளது.

குறித்த கெற்றப்போல் சந்தி ஏற்கனவே தாழ்ந்த நிலமாக காணப்படுகின்ற நிலையிலும் கந்தர்மடம் பழம் வீதியினூடாக வழிந்தோடுகின்ற வெள்ளமும் மணற்தரை லேனுக்குள்ளேயே வழிந்தோடுகின்றது.

பலாலி வீதியின் கழிவுகள் அனைத்தும் வெள்ளத்தினால் குறித்த லேனுக்குள் அடித்துச் செல்லப்படுவதனாலும் மேற்படி லேனுக்குள் பெரும் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளதோடு டெங்கு நுளம்பு பெருகும் அபாயமும் காணப்படுகின்றது. இது தொடர்பில் யாழ்.மாநகர சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றுக்கு தெரியப்படுத்தப் பட்ட போதிலும் நீண்டகாலமாக நடவடிக்கையெதுவும் எடுக்கவில்லை என அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக இப்பிரச்சினை தொடர்பில் கவனமெடுத்து நடவடிக்கையெடுக்குமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-4)

## நல்லவர்கள் என்றால் பயப்படக்கூடாது

### அமைச்சர் ஹரிசன் தெரிவிப்பு

(கொழும்பு)

என் வாழ்நாளில் ராஜபக்ஷவினர் சிறை செல்வார்கள் என நினைக்கவில்லை. நல்லவர்கள் என்றால் தங்களுக்கு எதிராக சுமத்தப்படும் முறைப்பாடுகளுக்கு ஒரு போதும் பயப்படக்கூடாதென சமூக சேவைகள் மற்றும் நலத் துறை அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கைகளில் விலங்கு போட்டுக்கொண்டு விளக்கமறியல் செல்வார் என நாங்கள் யாரும் எதிர்பார்க்க வில்லை.

ராஜபக்ஷவின் சகோதரன் கைகளில் விலங்கு மாட்டிக்கொண்டு எங்கள் கண்களுக்கு முன் விளக்கமறியல் செல்வார்கள் என நாங்கள் யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டோம். இதனை அவர்களும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

தற்போது திருடர்களை பிடிக்கும் போது சிலர் குறித்த திருடர்களை காப்பாற்றுமாறு கூட்டத்திற்கு செல்கினறார்கள். இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் இலஞ்சம் பெற்றுள்ளார்கள் என முறைப்பாடு செய்தால், சந்தேக நபர்களிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ள முயற்சிக்கும் போது ஆணைக்குழுவின் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றார்கள்.

வாக்குமூலம் வழங்குவதற்கு ஏன் இவர்கள் இப்படி பயப்படுகின்றார்கள் என அமைச்சர் பீ.ஹரிசன் கேள்வியெழுப்பியுள்ளார். (இ-5)

## இராசி பலன்

14.05.2015

(சித்திரை 31, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு

ஏகாதசி மாலை 6.05 மணிவரை

உத்தரட்டாதி பின்னிரவு 3.06 மணிவரை

இராகுகாலம் 1.23-2.53 மணிவரை

சுபநேரம் 7.23-8.53மணிவரை

ஏகாதசி விரதம்

வளவன்

**மீனம்** வழிபாட்டால் திருப்திகாண வேண்டிய நாள், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அச்சுறை காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**மேடம்** தொழில் நலன்கருதி வெளியூர் பயணமொன்று இடம்பெறலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**இடபம்** குடும்பத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்** தொட்ட காரியங்கள் வெற்றி பெறும் நாள், அரசு வழியில் அனுகூலமுண்டு, வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும்.

**கும்பம்** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பண வரவு திருப்திதரும், எதிர்பார்ப்புகள் எளிதில் ஈடேறும் நாள்.

**கடகம்** கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும் நாள், உடல்நலம் சீராகும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்நாள்.

**சிம்மம்** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபடவேண்டிய நாள், விரயங்கள் தவிர்க்க இயலாமல் போகலாம், சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும் நாள், திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள் சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்** தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், பொதுவாழ்வில் புகழ்கூடும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**துலாம்** உடல் நலன்சீராகி உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும், செய்தொழில் மேன்மையுண்டு.

**கன்னி** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும், நட்பு வட்டம் விரிவடையும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 198**

## பொறாமையிலிருந்து விடுதலை!

...உங்கள் மூளை தான் காணும் அனைத்தையும் சேமித்து வைத்துக்கொண்டு நீங்கள் ஒரு தர்க்க ரீதியற்ற வகையில் எதிர்ச்செயல் புரிவதற்கு ஒரு உடனடி அட்டவணையாக உதவுகிறது. அதே சமயத்தில் உங்கள் உள அறிவுக்கூர்மையோ விடயங்களை உள்ளது உள்ளவாறே நோக்கி மேலே செல்கிறது.

நீங்கள் உங்களுக்கு அருளப்பட்ட ஆற்றலைப் புரிந்துகொள்ளாத போது நீங்களே உங்களுக்குப் போதுமானதாக இருக்கிறீர்கள் என்பதைக் கண்டுபிடிக்காத போது தானாகவே உங்களுக்குள்ளிருக்கும் வஸ்துவின் மீது நம்பிக்கையற்று மற்றவர்களைப் பின்பற்ற ஆரம்பிக்கிறீர்கள்.

சார்பின்றி எதுவுமில்லை என்று புத்தர் சொல்கிறார். ஒரு புதிய கோவிலில் நீங்கள் மட்டுமே இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் உயரமானவரா அல்லது குள்ளமானவரா? அசிங்கமா அல்லது அழகா? பணக்காரரா அல்லது ஏழையா? சொல்லுங்கள்! நீங்கள் உங்களை எதுவென்றும் அழைத்துக் கொள்ள முடியாது. சரிதானே? நீங்கள் வெறுமனே நீங்களாகவே இருப்பீர்கள்! அவ்வளவுதான். புரிந்து கொள்ளுங்கள்.... நீங்கள் இந்தக்



கோவிலில் இருக்கும் பொழுதும் இது தான் உண்மை.

ஒவ்வொரு தன் மனிதரும் தனித் தன்மையுடையவர். உங்களால் ஒரு சிங்கத்தையும் குதிரையையும் ஒப்பிட முடியுமா? நாம் எப்பொழுதாவது நம்மை மலர்களுடனோ அல்லது பறவைகளுடனோ அல்லது மலைகளுடனோ ஒப்பிட்டுக்கொள்கிறோமா? நாம் வெறுமனே அவற்றின் அழகை அனுபவிக்கிறோம். இல்லையா?

அதேபோல் நீங்கள் ஏன் மற்ற மனிதர்களைக் கண்டும் மகிழ்ச்சியடையக்கூடாது. மனிதர்கள் ஒரே மாதிரிக் காட்சியளித்தாலும் ஒவ்வொருவரும் தனித்துவம் வாய்ந்ததும் வெவ்வேறு பாதைகளில் பயணித்துக்கொண்டும் இருக்கிறார்கள். நீங்கள் உங்கள் பாதையில் முழுக் கவனத்துடன் பயணித்துக்கொண்டிருக்கும் வரை ஒவ்வொரு நிமிடமும் மன நிறைவை அனுபவிப்பீர்கள். இன்னொரு மனிதரின் பாதையைப் பார்ப்பது என்றால் என்ன என்பது கூட உங்களுக்குத் தெரியாது.

ஒரு சின்னக் கதை....

நிட்டி முதலியார் தெரு விளக்குகள் இல்லாத ஒரு இருளான கிராமச் சாலையில் வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தார். ஒரு பாதுகாப்பிற்காக முன்னால் சென்று கொண்டிருந்த காரைப் பின் தொடர்ந்து செல்வது என்று தீர்மானித்தார். சிறிது தூரம் சென்ற பிறகு முன்னால் சென்று கொண்டிருந்த கார் திடீரென்று நின்றது. *(தொடரும்)*

**பரமஹம்ஸ சுவாமி**

# அதிசய உலகம்

### குழந்தைகளுடன் குப்பைக் கிடங்கில் வாழும் பெற்றோர்

குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாமல் குப்பைக் கிடங்கில் குடும்பம் நடத்திய தம்பதியை பொலிசார் கைது செய்தனர்.

அமெரிக்காவின் பெரொக்கன்ரிட்ஜ் நாட்டில் ஜோ நாக்லெர் மற்றும் நிக்கோலி தம்பதி தங்களின் பக்கத்து வீட்டுக்காரரைத் துப்பாக்கி கொண்டு மிரட்டியதாக பொலிசில் புகார் அளிக்கப்பட்டது.

இது தொடர்பாக அவர்களை விசாரணை நடத்த வந்த பொலிசார் அதிர்ச்சி அடைந்தனர்.



அவர்கள் தங்களின் 10 குழந்தைகளுடன் அருகிலுள்ள குப்பைக் கிடங்கில் தற்காலிக குடிசை போட்டு வசித்து வருகின்றனர்.


மேலும் அவர்கள் தங்கள் குழந்தைகளை சிறுவயது முதல் பள்ளிக்கு அனுப்பாமல் தாங்களே வீட்டில் கல்வி கற்றுக்கொடுத்தும் அவர்கள் விருப்பம் போல் வாழும் விதமாக நாகரிகமற்ற முறையில் வளர்த்து வந்தனர்.

அவர்களை கைது செய்த பொலிசார் சிறையில் அடைத்தனர்.

குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாமல் பெற்றோர்களே அவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுத்து அவர்களை பிற மனிதர்கள் தொடர்பில்லாமல் வளர்க்கும் பழக்கம் தற்போது அங்கு அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# சமைப்போம் சுவைப்போம்

## முந்திரிக் கொத்து



**தே.பொருட்கள்:**

- பச்சரிசி - 1/2 கிலோ
- பச்சைப்பயிறு - 1/2 கிலோ
- வெல்லம் - 1 கிலோ
- ஏலக்காய் - 10
- மைதா - 1/4 கிலோ
- எண்ணெய் - 1/2 லிட்டர்
- உப்பு - தே.அளவு

**செய்முறை**

முதலில் பாத்திரத்தை அடுப்பில் வைத்து பச்சரிசி, பச்சைப்பயிறு ஆகிய இரண்டையும் தனித்தனியே வறுத்துக் கொள்ளவும். 5 ஏலக்காயை மட்டும் எடுத்து தனியே வறுத்துக் கொள்ளவும். வறுத்த பச்சரிசி, பச்சைப்பயிறு, ஏலக்காய் ஆகியவற்றை ஒன்றாக சேர்த்து மிஷினில் கொடுத்து நன்கு அரைத்துக் கொள்ளவும். அடுப்பில் வாய் அகன்ற பாத்திரத்தை வைத்து, வெல்லத்தை உடைத்துப் போட்டு, வெல்லம் மூழ்கும் வரை தண்ணீர் விட்டு காயவிடவும்.

மீதமுள்ள 5 ஏலக்காயை தனியே வறுத்து பொடியாக்கி அடுப்பில் காய்ந்து கொண்டுள்ள வெல்லத்துடன் சேர்க்கவும். வெல்லம் கரைந்து பாகு கொதித்து பிசுபிசுப்பு பதம் வந்ததும் அடுப்பிலிருந்து இறக்கி, மிஷினில் அரைத்து வைத்துள்ள மாவை வாயகன்ற பாத்திரம் அல்லது பேசினில் சிறிது சிறிதாகப் போட்டு அதில் தேவையான அளவு பாகு சேர்த்து, கட்டியில்லாமல் சப்பாத்தி மாவு பதத்திற்கு, கையில் மா ஒட்டாமல் பிசையவும்.

பின்னர் மாவைச் சிறு சிறு உருண்டைகளாக, கோலி குண்டு அளவிற்குப் பிடித்துக் கொள்ளவும். தனியே ஒரு பாத்திரத்தில் மைதா மாவுடன், உப்பு, தண்ணீர் சேர்த்து, தோசை மாவு பதத்திற்கு கரைத்துக் கொள்ளவும்.

அடுப்பில் வாணலியை வைத்து எண்ணெய் ஊற்றி, எண்ணெய் நன்கு காய்ந்ததும், தீயை மட்டுப்படுத்தி மிதமான தீயில் எரிய விடவும். பின்பு உருட்டி வைத்துள்ள உருண்டைகளை மூன்று மூன்றாக எடுத்து ஒன்றாகச் சேர்த்து, கரைத்து வைத்துள்ள மைதா மாவில் முக்கி பாத்திரத்தில் உள்ள எண்ணெயில் போட்டு பொரித்து எடுக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 100 கோடி ரூபா நட்ட ஈடுகோரி

# மங்களவுக்கு மகிந்த நிபந்தனைக் கடிதம்

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நற் பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் கருத்து வெளி யிட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிற்கு சட்டத்தரணி அதுல பிரியதர்சன டி சில்வா ஊடாக கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.**

100 கோடி ரூபாய் நட்ட ஈடு கோரி நிபந்தனைக் கடிதம் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மே மாதம் 7 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறித்து அமைச்சர் மங்கள சமரவீர வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் இந்த நிபந்தனைக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினர் 18 பில்லியன் அமெரிக்க டொலர் சொத்துக்களை குவித்துள்ளதாகவும் இலங்கையின் முதலாவது ரில்லியன்பதி மகிந்த ராஜபக்ஷ எனவும் மங்கள சமரவீர ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் குற்றம் சுமத்தியுள்ளார். தமது நற்பெயருக்கு களங்கம் ஏற்ப டுத்தியமைக் காக 100 கோடி ரூபா நட்ட ஈட்டை 21 நாட்களுக்குள் வழங்க வேண்டு மெனவும் அவ்வாறு வழங்கத் தவறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் 2000 மில்லியன் நட்டஈடு கோரி வழக்கு தொடுக்க போவதாகவும் தெரிவித்திருந்தார். (இ-5)


**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது
(C-478)

**கைகொடுக்கும் நண்பர்கள்**

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
**021 222 8117, 0779008776**


## ஊர்காவற்றுறை பொது மீன்சந்தை வைபவரீதியாக திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் சபை நிதி மூலம் புனரமைக்கப்பட்ட ஊர்காவற் றுறை பொது மீன் சந்தை கட்டடம் நேற்று பாரா ளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா வால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வின் போது பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ் திரி அலென்ரின் மற்றும் பிரதேச சபை உறுப் பினர்கள், பிரதேச செயலாளர், உத்தியோகத் தர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண் டனர். நீண்டகாலமாக திருத் தப்படாமல் இரு ந்த இக்கட்டடம் தற்போது புனரமைக்கப்பட்டு பொது மக்களுக்கு மிக வும் பயனுள்ள வகை யில் மாற்றப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.



இதேவேளை வடக்கின் வசந்தம் விசேட நிதித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட எழு வைதீவு கடற்கரை வீதி வடக்கின் வசந்தம் விசேட நிதித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட எழுவைதீவு உப அலுவலகம் மற்றும் பொது நூலகம் ஆகிய கட்டடங்கள் நேற்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டன. (இ-3)


**G.C.E.(O/L) 2015 - பரீட்சைக்கு இரண்டாவது தடவையாக தோற்றும் மாணவர்களுக்கான இலவச வகுப்புகள்**

இல-66, கட்டைப்பாலி லேன், ஆனைக்கோட்டையில் இயங்கும் SERVE இணையக்கற்கை நெறி நிறுவகமானது எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் G.C.E. O/L பரீட்சையில் இரண்டாவது தடவையாக தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை கணனியின் உதவி கொண்டு இலவசமாகக் கற்பிக்கவுள்ளது.

வகுப்புக்கள் வார நாட்களில் காலை 9 மணி முதல் 01 மணி வரை நடைபெறும். தெரிவு செய்யப்படும் மாணவர் ஒவ்வொருவரும் ஒரு மடிக் கணனியை உபயோகித்து மேற்படி பாடங்களைக் கற்பதற்கு வசதி செய்து கொடுக்கப்படும். ஆங்கில பாடம் ஆசிரியரினால் கற்பிக்கப்படும்.

இந்த இலவச பயிற்சியில் பங்குகொண்டு பயனடைய விரும்பும் மாணவர்கள் எதிர் வரும் 26.05.2015 ற்கு முன்னதாக மேற்படி எமது அலுவலகத்திற்கு வருகை தந்து பதிவாளரைச் சந்தித்து அனுமதி பெற முடியும். இப் பயிற்சிக்கு 20 வெற்றிடங்கள் மாத்திரமே உள்ளதனால் முதல் பதிவு செய்யும் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு : எமது நிறுவகம் ஆனைக்கோட்டையில் அமைந்திருப்பதனால், எமது நிறுவகத்திற்கு அண்மையிலுள்ள நவாலி, மானிப்பாய் சுதுமலை ஆகிய பகுதிகளை சேர்ந்த மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

பதிவாளர் : இல. 66, கட்டைப்பாலி லேன்,
இணையக்கற்கை நெறி நிறுவகம்.
ஆனைக்கோட்டை.
021 225 6206

**சீரடிபாபா யாத்திரை**

சீரடிபாபா 2 நாட்கள் தரிசனம் சனி சிங்கப்பூர், அவுரங்கபாத், எல்லோரா சிற்பக் கலைக்கூடம், பத்ரமாருதி, குருநேஸ்வர், ஜோதி லிங்கம், துல்ஜாப்பூர் அக்கல் கோட், பண்டரிபுரம், பூனே, பஞ்சவடி, நாசிக் ஆகிய இடங்களில் உள்ள ஆலயங்களை தரிசிக்கலாம்.

கொழும்பிலிருந்து மும்பாய் மும்பாயிலிருந்து சென்னை சென்னையிலிருந்து கொழும்பு விமானம் யாத்திரை முழுவதும் AC பஸ் பிராமண சமையல்காரர்கள் சமைத்த மூன்று வேளை உணவு காப்பி ரீ குடிநீர் இரண்டு பேருக்கு குளியல் அறை இணைந்த அறைகள். ஒருநாள் சொப்பிங் ஆரம்பம் 14.06.2015 நாட்கள் 7 புட்ட பக்தியும் சேர்த்தால் 9, 10 நாட்கள் ஆகும் விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்க.

**கலாநிதி T.ஸ்ரீரங்கநாதன் 077 768 0102**

**593/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11.**

**யாழ்ப்பாணத்தில் : B.[illegible]**
**0777 222 568 சீரடி மந்திர்**

**கல்யாண மாலை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1978 RC
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 19
உயரம்: 167cm
தகைமை/தொழில்: GAQ/ தனியார் தொழில்
தொ.இ: B/4469

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 120 செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்
தொ.இ: B/4487

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 22 3/4 செவ் 8 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L/ NGO
தொ.இ: B/4489

பிறப்பு: 1969 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 52
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்
தொ.இ: B/4493

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 14 3/4
உயரம்: 160cm
தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்
தொ.இ: G/1204

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 33 3/4 செவ் 12 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/1205

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 19 3/4
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L, Quantity surveyring/ QS
தொ.இ: G/1210

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
கி.பா: 65 செவ் 8 இல்
உயரம்: 5'2'
தகைமை/தொழில்: A/L/ கனடா PR
தொ.இ: G/1211

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail: kalyanamalai.jaffna@gmail.com
[illegible] காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். வணிகர் கழகத்தின் வேலை வங்கித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில்வேலைவாய்ப்பு கோரும் பலதரப்பட்டவர்களிற்கு பொருத்தமான வேலைவாய்ப்புக் களை பெற்றுக் கொடுப்பதற்காக வேலை வங்கித்திட்டமொன்றை யாழ். வணிகர் கழகம் ஆரம்பித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் சிற்றூழியர்கள், கணனி இயக்குநர்கள், கணக்காளர்கள், விற்பனை உதவியாளர்கள், சாரதிகள், உணவு விடுதிகளின் முகாமையாளர்கள் போன்ற பல் வேறு பதவிகளை நாடிய விண்ணப்பதாரிகளின் விபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

எனவே, தங்கள் நிறுவனங்களில் அல்லது வர்த்தக ஸ்தாபனங்களில் வெற்றிடமாக உள்ள இடங்களுக்கு தேவைப்படும் ஆளணியை யாழ். வணிகர் கழகத்தினால் நடத்தப்படும் வேலை வங்கியில் உள்ள விண்ணப்பங்களை பரிசீலித்து பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (இ-3)



யாழ்.செய்திகள்

# முள்ளிவாய்க்கால் நினைவுதினம் பல்கலையில் அனுஷ்டிக்கப்படும்

### யாழ்.பல்கலை.ஆசிரியர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.பல்கலைக்கழகத்தில் அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து மே 18 முள்ளி வாய்க்கால் நினைவு தினம் பிரமாண்டமான முறையில் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் ஆர். இராசகுமாரன் தெரிவித்துள்ளார்.**

தமிழீழ வரலாற்றில் மறக்க முடியாத முள்ளிவாய்க்கால் படுகொலையில் கொடூரமாகக் கொல்லப்பட்ட அப்பாவி பொதுமக்கள், போராளிகளை அந்நாளில் ஒவ்வொரு தமிழ் மகனும், உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை காலமும் 2009 ஆம் ஆண்டு இறுதிப் போரிலே கொல்லப்பட்டவர்களை நினைவு கூருவதற்கு மிக பெரும் தடைகள் இருந்தது. பத்திரிகை செய்திகளின்படி அவ்வாறான தடைகள் இல்லாது இருப்பது போலத் தெரிவிக்கிறது. எது எவ்வாறாக இருந்தாலும் முள்ளி வாய்க்காலிலே படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளை, தாய் தந்தையர் நினைவு கூருவது என்பது எங்களுக்கு இருக்கின்ற உரிமை. இந்த உரிமைகளை யாரும் மறுக்க முடியாது.

யார் தடுத்தாலும் எமது உறவுகளை நினைவு கூர்ந்துதான் ஆக வேண்டும். அத்துடன் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஏற்கனவே முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தினை யாழ்.பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை பாரிய அளவில் அனுஷ்டிப்பது என்று தீர்மானம் எடுத்துள்ளது. இதில் மாணவர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்களையும் இணைத்து இந் நினைவு கூரலை செய்வதற்கு எத்தணித்துள்ளோம்.


இந்த நினைவு கூரலானது ஈழத்தில் சகல பகுதிகளிலும் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்பது பல்கலைக்கழக சமூகத்தின் விருப்பமாகவுள்ளது. இறுதிப் போரில் எமக்காக போராடிய போராளிகள், அப்பாவி குழந்தைகள், பெண்கள், நோயாளிகள், வயோதிபர்கள், சரணடைந்தவர்கள், கைது செய்யப்பட்டவர்கள் என்று சகல தரப்பினரும் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர்.

இது வரலாற்றிலே காணமுடியாத மிகப் பெரும் துயரமான நிகழ்வாக முள்ளிவாய்க்கால் படுகொலையே உள்ளது. எனவே இந்த படுகொலை நாளை நினைவு கூருவது என்பது ஒவ்வொரு தமிழ் மகனதும் கடமையாகும். இந்த நினைவு கூரலை இதுவரை காலமும் பல்கலைக்கழகத்தில் அனுஷ்டித்துள்ளோம். அதேபோன்று வேறு பல இடங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டுள்து.

இந்த நினைவு கூரலை எந்த ஒரு அரசியல் நோக்கம் கொண்டதாக நாங்கள் பார்க்கக் கூடாது. இது வரை காலமும் உயிரிழந்த உறவுகளை நினைவு கூர்ந்து பிரார்த்தனை செய்யவேண்டியவர்களாக நாங்கள் உள்ளோம். இந்த நாட்டில் இத்தினம் நினைவு கூரும் தினமாக இருக்க வேண்டும். ஒரு புறம் வெற்றி நாளாகவும் மறுபுறம் நினைவு கூரும் நாளாகவும் இருக்கக் கூடாது.

எனவேதான் இம்முறை யாழ். பல்கலைக்கழகத்தில் பெருமளவில் நினைவுகூரலை நடத்த தீர்மானித்துள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## விசேட கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்களுடனான விசேட கலந்துரையாடல் ஒன்று வடமாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் இம் மாதம் இடம்பெற்ற அரச பணியாளர்களின் இடமாற்றத்தின் பின்னர் புதிய செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்களுடன் சந்திப்பு ஒன்றை மேற்கொள்ளும் நோக்கோடும் இந்த வருடத்திற்கான திணைக்களத்தின் பணிகள் தொடர்பான திட்டமிடல் தொடர்பாகவும் வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற விசேட தேவைகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் டி.சிவராஜலிங்கம், வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் மற்றும் 5 மாவட்டங்களினதும் பிரதம பொறியியலாளர்கள், பதவி நிலை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (இ-9)

## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கைதடி கண்டி வீதி திருவருள்மிகுஸ்ரீகற்பகவிநாயகர்தேவஸ்தான மன்மதவருட மஹோற்சவ விஞ்ஞாபனம் கடந்த 9 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இதேவேளை எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திரு விழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (இ-5)

## ‘வாகீசன் வாரம்’

சுன்னாகம் பருத்திக்கலட்டி அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானத்தில் திருநாவுக்கரசு சுவாமிகள்குருபூசையின் ‘வாகீசன் வாரம்’ நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தினமும் விசேட பூசை வழிபாடுகள் மற்றும் நற்சிந்தனை என்பன இடம்பெறவுள்ளது. (இ-3)

## ஜெயலலிதாவுக்கு டக்ளஸ் வாழ்த்து

சொத்துக்குவிப்பு வழக்கின் தண்டனையிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ள தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராமுக்கு, ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா, தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பான வாழ்த்துக் கடிதமொன்றை ஜெயலலிதாவுக்கு அனுப்பி வைத்துள்ள டக்ளஸ்தேவானந்தா அதில், “தமிழகத்தின் ஆட்சி அதிகாரத்தில் மீண்டும் அமர்ந்து உங்களது நல்லாட்சியை தொடர்வதோடு இலங்கைத் தமிழர்களுக்காக எழுப்பி வந்த உரிமைக் குரலைத் தொடருமாறும்“ கோரியுள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுளளதாவது,“உங்கள் மீது சோடிக்கப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் நீங்கள் விடுதலையாகி வந்திருப்பது குறித்து தமிழகமெங்கும் பெரு மகிழ்ச்சி பொங்கி வழிகிறது. இந்த மகிழ்ச்சி தனியே தமிழக மக்களுக்கு மட்டுமல்ல. உங்களது விடுதலையால் தமிழக மக்களை போல் இலங்கைத் தமிழ் மக்களின் மனங்களும் பெரு மகிழ்ச்சி அடைந்திருக்கின்றன.

உண்மைகள் ஒருபோதும் உறங்குவதில்லை. இந்த உயிருள்ள தத்துவத்தை உங்களது விடுதலை உலகத்தின் செவிகளுக்கு மறுபடி ஒரு முறை உரக்க சொல்லியிருக்கிறது. ஆட்சி அதிகாரத்தில் உங்களது நேரடி பிரசன்னம் சில காலங்கள் இல்லையென்றாலும் தமிழக மக்களின் மனங்களை நீங்களே தொடர்ந்தும் ஆட்சி புரிந்து வந்திருக்கிறீர்கள்.

அது போல் ஈழத்தமிழ் மக்களின் மனங்களிலும் நிறைந்திருக்கிறீர்கள். மீண்டும் தமிழகத்தின் ஆட்சி அதிகாரத்தில் நீங்களே நேரில் உட்கார்ந்து, உங்களது நல்லாட்சியை தொடர மனம் மகிழ்ந்து வாழ்த்துகிறேன். இலங்கைத் தமிழ் மக்களுக்காக நீங்கள் எழுப்பி வந்த உரிமைக்குரல் தொடர வேணடும் என்றும் எதிர்பார்க்கின்றேன்“ என்று டக்ளஸ் தேவானந்தா, தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)





அரசாங்கத்தின் நூறு நாட்கள் வேலைத்திட்டத்தின் கீழ் கிராமத்திற்கு ஒரு மில்லியன் ரூபா வேலைத்திட்டம் கொக்குவில் பொற்பதியில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் நல்லூர் பிரதேச செயலக அதிகாரிகள் பொற்பதி அறிவாலயக் கூட்டத் தொகுதிக்கான அடிக்கல்லை நாட்டி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகத் தடையை நீக்குமாறு பொதுபல சேனா கோரிக்கை

(கொழும்பு)

பொதுபல சேனா அமைப்பிற்கு எதிராக அரச ஊடகத் தடையை நீக்குமாறு அவ் அமைப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறான நீதி, நியாயமற்ற ஊடகத் தடையை நீக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும், நியாயமான, சரியான ஊடக அறிக்கையிடலுக்கான சந்தர்ப்பத்தை தமக்கு வழங்குமாறும் பொதுபல சேனா அமைப்பின் நிறைவேற்று அதிகாரி விரிவுரையாளர் திலந்த விதானகே ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

"பொதுபல சேனா வலையமைப்பு" அல்லது "பொதுபல சேனா அரசியல் முன்னணி" இனவாத அல்லது தீவிரவாத அமைப்புக்கள் அல்ல எனவும், பொதுபல சேனா அமைப்பினால் முன்வைக்கப்படுகின்ற தேசிய ரீதியிலான கருத்துக்களை நாட்டு மக்கள் அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தையும், உரிமையையும் அரச ஊடகங்கள் மதிப்பளிக்க வேண்டும் என பொதுபல சேனா குறித்த கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளது.

பொதுபல சேனா குறித்து எந்தவொரு செய்தியையும் அரச ஊடகங்களில் வெளியிட வேண்டாம் என உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றை நீக்க வேண்டும் என ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)




# விசாரணை மேற்கொள்வதில் எந்தவிதத் தவறும் இல்லை

## எதிர்க்கட்சித்தலைவரும் ஆதரவு

(கொழும்பு)

**குற்றம் சுமத்தப்பட்டுள்ள நபர்களிடம் விசாரணை மேற்கொள்வதில் எவ்வித தவறும் இல்லை என எதிர்க்கட்சி தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எனினும் அவர்களை பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் கைது செய்து பிணை வழங்க முடியாதவாறு விளக்கமறியலில் வைப்பதனை அனுமதிக்க முடியாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை பயமுறுத்தும் வகையில் இவ்வாறு அவர்களுக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு பின்னணியில் இருப்பது ஐக்கிய தேசிய கட்சி என அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்துடன், 20ஆம் திருத்தச்சட்டத்தை சமர்ப்பித்து தேர்தல் ஒன்றிற்கு செல்வதில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தல் தற்போதைய முறையின் கீழ் இடம்பெறும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தற்போதைய முறையில் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார் என குறிப்பிட்டிருந்தார்.

எனினும் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு ஜனாதிபதி அவ்வாறான ஒரு இணக்கத்தை தெரிவிக்கவில்லை என எதிர்க்கட்சி தலைவர் மறுப்பு தெரிவித்துள்ளார். (இ-5)

# மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு தீர்வுகாண மீனவர்களிடமே ஆலோசனைகளைக் கேட்க தீர்மானம்

## வடக்கு மீன்பிடி அமைச்சர் தெரிவிப்பு

வட பகுதி மீனவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க புதிய வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு மீனவ சமுதாயத்தினரிடமிருந்து குறிப்பிட்ட சில ஆலோசனைகளையும் அவர்களின் நிலைப்பாட்டினையும் மீனவ சங்கத்தினூடாக பெற்றுக்கொள்ளவுள்ளதாக வடக்கு மாகாண சபை மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தில் மீன்பிடித் தொழிலை வாழ்வாதாரமாக கொண்டு பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

எமது நாட்டில் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக இந்த மீனவர் பிரச்சினை அதிகமாக காணப்படுகின்றது.

நன்னீர் மீன்பிடி வடமாகாண சபையின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகவும் கடல் மீன்பிடி மத்திய அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டதாகவும் காணப்படுகின்றது.

அந்த வகையில் கடல் மீன்பிடி தொடர்பில் எமது மீனவர்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளை நாம் நேரடியாக தீர்க்க முடியாது.

ஆனால் மத்திய அரசுடன் இணைந்து பிரச்சினைகளை தீர்க்க முடியும். அந்தவகையில் கடந்த வருடம் நாம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம். ஆனால் மத்திய மாகாண அரசுகளால் இழுபறிநிலை காணப்பட்டதால் தொடர்ந்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை.

புதிய அரசாங்கத்திடம் பல பேச்சுவார்த்தைகளை நடத்தி ஜனாதிபதியின் ஒத்துழைப்புடன் வடக்கு மாகாண சபையால் நாம் உருவாக்கியிருந்த மீன்பிடி ஆலோசனைக் குழுவுடன் இணைந்து புதிய வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

அதில்முதற்கட்டமாக மக்களின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ளவுள்ளோம். அதில் 6வகையான கேள்விகளுக்கு மீனவ சங்கங்கள் ஊடாக மக்களின் கருத்தை எதிாபார்க்கிறோம்.

முதலாவதாக இந்திய இழுவைப்படகு வருகையை நிறுத் த வேண்டுமா?, இரண்டாவதாக இலங்கையில் உள்ள 13 வகையான தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை முற்றாக தடைசெய்ய வேண்டுமா? சட்டத்தின்படி நடைமுறைப்படுத்த வேண்டுமா?, மூன்றாவதாக தென் பகுதியில் இருந்து வரும் பருவகால மீன்பிடியாளர்களை வட பகுதிக்குள் அனுமதிப்பதா? அவர்களால் மீனவருக்கு பாதிப்புக்கள் உள்ளனவா?

நான்காவதாக முன்னைய அரசால் அமைக்கப்பட்ட மீனவ கிராமிய அமைப்பு தேவையா? ஐந்தாவதாக மீனவ குடும்பங்களுக்கு தேவையான வேலைத்திட்டங்கள் என்ன? மீனவ சங்கங்களில் உள்ள குடும்பங்களின் உறுப்பினர்கள் எண்ணிக்கை ஆறாவதாக மீனவ சமுதாயத்தினர் எவ்வகையான தொழில் முறைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். அவற்றின் விபரங்கள் போன்ற தரவுகளை ஒவ்வொரு மீனவ கூட்டுறவு சங்கங்கள் மற்றும் மீனவ கிராமிய அமைப்புகளின் ஊடாக மக்கள் அனைவருடைய கருத்துக்களையும் உள்ளடக்கி ஒருமாத காலத்திற்குள் எழுத்துருவில் எமக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அனைத்து சங்கங்களின் விபரங்கள் எமக்கு கிடைத்த பின்னர் சங்கங்களின் தலைவர், செயலாளர்களை ஒன்றிணைத்து கிளிநொச்சி மாவட்டத்தில் மாநாடு ஒன்றினை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

எமது கடல் வளம் பாதுகாக்கப்பட வேண்டும். எமது மக்களின் வாழ்வாதாரம் உயர்த்தப்படவேண்டும். அத்துடன் இந்திய இழுவைப்படகை முற்று முழுதாக தடைசெய்ய வேண்டும் என்ற கொள்கையில் நாம் உறுதியாக உள்ளோம்.

எனவே குறித்த விபரங்களை பெற்று எமது மீனவ சமுதாயத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை படிப்படியாகநிவர்த்திசெய்துமக்களின்வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

மக்களின் எதிர்ப்பினையடுத்து

# ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் முன்பாக நடக்கவிருந்த ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது




ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளரை இடமாற்றக்கோரியும் நிரந்தர வீடற்றவர்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கக்கோரியும் பிரதேச வாசிகள் சிலரால் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு முன்பாக நடத்தத்திட்டமிடடிருந்த ஆர்ப்பாட்டம் பிரதேச மக்கள் பெரும்பாலானோரின் எதிர்ப்பை அடுத்து கைவிடப்பட்டது.

குறித்த பிரதேச செயலகம் முன்பாக நேற்றுக் காலை வருகை தந்த பிரதேச மக்கள் சிலரால் மேற்படி ஆர்ப்பாட்டம் நடத்தத்திட்டமிடப்பட்டிருந்த நிலையில் தகவலறிந்த அப்பிரதேச மக்கள் பலபாகங்களில் இருந்தும் திரண்டு வந்து ஆர்ப்பாட்டத்திற்கு எதிரான நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்காரணமாக ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தை கைவிட்டு விட்டு அவ்விடத்திலிருந்து வெளியேறிச் சென்றனர்.

ஆர்ப்பாட்டத்தை எதிர்த்த மக்கள் கருத்து கூறுகையில்,

பிரதேசசெயலாளர் தமக்கு ஆற்றி வரும் சேவைசிறப்பாக அமைந்திருப்பதாகவும் சிலஊழல்களுடன் தொடர்புடையவர்களே தமது ஊழலை மூடிமறைப்பதற்காகவே இவ்வாறானஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளனர்.

சிலவிசமிகளின் இவ்வாறான செயற்பாட்டினால் பிரதேச மக்களுக்கு கிடைக்கும் சிறந்த சேவை பாதிப்படைய இடமளிக்கமாட்டோம் எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தை நடத்தமுடியாது திரும்பி சென்ற மக்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு சென்று மேற்படி கோரிக்கை அடங்கிய மகஜரினை மாவட்ட செயலக பிரதம கணக்காளரிடம் கையளித்தமையும் குறிப்பிடத்தக்கது.(2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூண்டாய் வடக்கு மக்கள் திரண்டு நேற்று கவனயீர்ப்பு





(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு உப்புமாவெளி கிராம அலுவலர் பிரிவிலுள்ள தூண்டாய் வடக்கில் 115 குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

இம்மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 5 வருடங்கள் கடந்துள்ள நிலையில் இவர்களுக்கான மின்சாரம் உட்பட அடிப்படை வசதிகள் இதுவரை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லையெனக் கூறி கிராமமக்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் நேற்றுக் காலை மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தினர்.

முல்லைத்தீவுகடற்கரையில்அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலய முன்றிலிலிருந்து பேரணி ஆரம்பமாகி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தை சென்றடைந்தது.

இதில் பங்கேற்ற பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள்

**'' வேண்டும் வேண்டும் மின்சாரம் வேண்டும், எங்களுடைய கிராமத்தை ஒதுக்கி வைக்காதே அரசே!, இப்போதும் குப்பிவிளக்கிளோ கல்வி கற்பது, எங்களுடைய மாணவர்கள் படிக்கக் கூடாதா, இருள் சூழ்ந்துள்ள எங்களின் கிராமத்திற்கு வெளிச்சத்தை தா!''**

ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கலந்து கொண்டிருந்தனர்.

இதன் இறுதியில் முல்லைத்தீவு அரசாங்க அதிபருக்கும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனுக்கும் அம்மக்கள் பிரதிநிதிகளால் கோரிக்கைகள் அடங்கிய மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

இதனைப் பெற்றுக்கொண்ட அரச அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்,

அம்மகஜரில் உள்ள கோரிக்கைகளை கவனத்தில் எடுத்து உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி கலந்துரையாடி தீர்க்கமான முடிவொன்றை பெற்றுத்தருவதாக கூறினார்.

அதனைத் தொடர்ந்து கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

இக்கிராமத்தில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 5வருடங்கள் கடந்துள்ள நிலையில் மின்சாரம் உட்பட அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

பாடசாலைக்கு செல்ல வேண்டிய மாணவர்கள் அரச அதிபர் அலுவலகத்திற்கு முன்பாக நின்று அடிப்படை தேவைகளை வலியுறுத்தி கேட்க வேண்டிய நிலைக்கு இன்று தள்ளப்பட்டுள்ளார்கள்.

இம்மக்கள் கடற்றொழிலையே நம்பி வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு இருந்தும் கூட தங்களுடைய பிள்ளைகளின் கல்வியில் நலன்கருதி குப்பிவிளக்கிலா இன்னும் கல்வியைத் தொடர்வது, தங்களுடைய கிராமத்தை ஒதுக்காமல் மின்சாரம் உட்பட அடிப்படை வசதிகளை கோருவது நியாயமானதே என்று அவர் கூறினார்

இதே கருத்துக்களை ரவிகரன் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபருக்கு எடுத்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)




## குற்றங்களை ஏற்றுக்கொண்ட நபர்களுக்கு அபராதம் விதிப்பு

மன்னார் மாவட்ட மதுவரித் திணைக்களத்தினால், மன்னார் பகுதியிலுள்ள ஒரு சில இடங்களில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளில் ஒரு பெண் உட்பட பத்து பேர சட்டவிரோத மதுபானங்கள், போதைப் பொருட்களை விற்றனர் என்ற சந்தேகத்தில் மாட்டிக்கொண்டனர். மன்னார் நீதவான் ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. இதன்போது இரண்டு சந்தேக நபர்களைத் தவிர ஏனையோர் மன்றில் முன்னிலையாகி இருந்தனர். மன்றில் முன்னிலையானவர்கள் தங்கள் குற்றங்களை ஏற்றுக் கொண்டனர்.

அதனால் வயது குறைந்தவர்களுக்கு புகைத்தல் பொருட்கள் விற்ற இருவருக்கு தலா 3ஆயிரம் ரூபாவும், சட்டவிரோதமாக 180 மி.லீ. அரசு சாராயம் விற்றவருக்கு 10 ஆயிரம் ரூபாவும், சட்டவிரோதமாக புளித்த கள்ளுவிற்ற மூவருககு தலா ஆயிரம்ரூபாவும், 150, 100 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த ஒரு பெண் உட்பட இருவருக்கு தலா 10ஆயிரம்ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (2)

# ஈழத்தமிழர்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி ஜெயாவுக்கு சிறிதரன் கடிதம் அனுப்பி வைப்பு





சொத்துக்குவிப்பு வழக்கில் பெங்களூர் நீதிமன்றால் தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் சகல வழக்குகளில் இருந்தும் விடுதலை செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டதால் ஈழத் தமிழ் மக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மீண்டும் பதவியேற்கவிருக்கும் தமிழக முன்னாள் முதல்வரிடம் தங்கள் எதிர்பார்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.ஸ்ரீதரன் ஜெயலலிதாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஈழத்தமிழர்கள் மகிழ்கின்ற நாளொன்றை பெங்களூர் நீதிமன்றால் நீங்கள் விடுதலை செய்யப்பட்ட செய்தி தந்திருக்கின்றது. தமிழ் நாட்டின் பலமும் எண்ணங்களும் ஆதரவும் எங்கள் மக்களின் வாழ்க்கையில் என்றும் இரத்த உறவாகி போயிருக்கின்றது. முன்னாள் தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆரின் இரக்கமும் ஆதரவும் உதவியும் புரிதலும் ஈழத்தமிழர்களை மெய்சிலிர்க்க வைக்கின்ற ஒன்றாக இன்றுவரை உணரப்படுகின்றது.

எம்.ஜி.ஆர் நீண்ட ஆயுளுடன் இருந்திருந்திருந்தால் என்றோ எமது மக்களுக்கு சுபீட்சம் அமைதி சுதந்திரம் கிடைத்திருக்கும். முள்ளிவாய்க்காலில் ஒரு பெரும இனப் படுகொலைக்குள் ஈழத்தமிழர்கள் சிக்குண்டு சிதைந்து அகதியாகி நிர்க்கதியாகும் நிலை ஏற்பட்டிருக்காது.

ஆனாலும் அவரின் எண்ணத்தில் எழுந்த அ.இ.அ.தி.மு.கவின் தலைமைப்பொறுப்பு தங்களிடம் கொடுக்கப்பட்டதில் இருந்து தமிழர்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை ஊற்று மீண்டும் கிளம்பியது. உங்களுக்கு கிடைக்கும் பொருத்தமான காலத்துக்காக ஈழத்தமிழினம் காத்திருந்தது. அந்த நம்பிக்கை வீண் போகவில்லை. பெரும் இடர்களை கடந்து நீங்கள் மீண்டும் தமிழக முதல்வர் ஆனீர்கள்.

நீங்கள் பதவியேற்ற காலம் மிக முக்கியமானது. தமிழகத்தை மட்டுமல்ல எல்லாம் இழந்து நிர்க்கதியாகி நிற்கும் ஈழத்தமிழர்களையும் கைதூக்கிவிட்டு காப்பாற்ற வேண டிய பாரிய பொறுப்பும் உங்கள் கையிலே [illegible]ந்தது. அது மிகவும் பொருத்தமானதும் கூட. தமிழக மக்களின் நம்பிக்கையையும் ஈழத்தமிழர்களின் நம்பிக்கையையும் காப்பாற்றும் வகையில் இலங்கையில் தமிழர்கள் வகைதொகையின்றி கொல்லப்பட்ட இனப்படுகொலை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களுக்கு வலுச் சேர்க்கும் வகையில் தமிழக சட்ட சபையில் தீர்மானங்களை நிறைவேற்றி தமிழர்கள் மனதில் நீங்காத இடத்தை பெற்றுள்ளீர்கள்.

உங்கள் காலத்தில் ஈழத்தமிழர்களுக்கு ஒரு நிரந்தரமான சுபீட்சமான சுதந்திரமான வாழ்வு கிடைககுமென்று தமிழ் மக்கள் மலையாக நம்புகின்றார்கள். ஈழத்தமிழர்களின் தொப்புள் கொடி உறவான தமிழகத்துகக்கு நீங்கள் தலைவியாக இருபபது எங்கள் பலம். எங்களுக்கு வலி வருகின்றபோது காயங்கள் வருகின்றபோது துன்பங்கள் நேர்கின்றபோது எப்படி தமிழகம் துடிக்குமோ அதே வலி உங்களுக்கு துன்பங்கள் நேர்கின்றபோது உங்கள் மீது தடைகள் ஏவப்படுகின்ற பொழுது எங்கள் மக்களுக்கும் ஏற்படுகின்றது.

பெங்களூர் சிறையில் நீங்கள் இருந்தபோது ஈழத்தமிழ்மக்கள் மிகவும் கவலை கொண்டிருந்தனர். உங்கள் விடுதலையை அவர்கள் வேண்டிநின்றனர். தமிழகம் வஞ்சகர் கையில் சென்றுவிடுமோ என்று அஞ்சினர். ஆனால் நீங்கள் மக்களுக்கு செய்த நல்ல காரியங்களில் இருந்த தர்மம் எங்களோடு இருந்ததால் நீங்கள் வென்றீர்கள் விடுதலை ஆனீர்கள்.

எப்பொழுதும் உங்கள் பின்னே நிற்கப்போகும் தமிழ் மக்களுக்காக உங்கள் காலத்தில் உயர்ந்த ஆதரவை தந்து ஈழத்தமிழர்கள் நிம்மதியாக வாழ உங்கள் நல்லாட்சி அதிகாரம் பயன்படவேண்டுமென உலகத் தமிழினம் எதிர்பார்க்கின்றது. ஈழத்தமிழர்களுக்கு அருகிருக்கும் பலம் நீங்கள் எப்பொழுதும் ஆட்சிபீடம் ஏறும் நிகரற்ற வல்லமையை கொண்டுள்ளீர்கள் நீங்கள். நீண்ட நெடும் ஆயுளுடன் தமிழ்மக்களுக்காக நீங்கள் வாழ வேண்டும் ஆளவேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஞ்சுக்குளம் தொங்குபாலத்தை துரித கதியில் திருத்தம் செய்க

## ஆனந்தன் எம்.பி கோரிக்கை

(குருமன்காடு)

**சேதமடைந்துள்ள மன்னார் குஞ்சுக்குளம் தொங்குபாலத்தை துரிதகதியில் திருத்தம் செய்து பொதுமக்களின் பாதுகாப்பான போக்குவரத்திற்கு வழியேற்படுத்தி கொடுக்க வேண்டுமென ஆனந்தன் எம்.பி கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் தெரியவருவதாவது, குஞ்சுக்குளம் தொங்குபாலம் சேதமடைந்துள்ள நிலையில், அதனூடாக ஆபத்தான பயணத்தை சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை மேற்கொண்டு வருகின்றனர்.


குஞ்சுக்குளம் கிராமத்துக்கான ஒரேயொரு பிரதான தரைவழிப்பாதை வழியாக 10 அடிக்கும் மேலாக வெள்ளம் நிரம்பி பாய்வதால், கிராம மக்கள் வேறுவழியின்றி சேதமடைந்துள்ள தொங்குபாலத்தை தமது போக்குவரத்துக்காக பயன்படுத்தி வருகின்றனர்.


மல்வத்துஓயா ஆற்றுநீர் பெருக்கெடுத்து பாய்வதனால், நடைபெற்றுக்கொண்டிருந்த புதிய கொங்கிறீட் பாலத்தை அமைக்கும் கட்டுமானப்பணிகளும் தாமதமடைந்துள்ளன.

ஆற்றுநீர் பெருக்கெடுத்து பாயாத காலங்களில் குறைந்தளவான தொழிலாளர்களை கொண்டு மந்தகதியில் கட்டுமானப்பணிகள் இடம்பெறுவதாலேயே பாலம் அமைக்கும் பணிகள் நீண்டகாலமாக முடிவுறுத்தப்படாமல் இருப்பதாக மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பாலத்தை அமைக்கும் பணியை பொறுப்பேற்றுள்ள ஒப்பந்தகாரர் ஆற்றுநீர் வற்றியிருக்கும் காலத்தில் ஆளணியினரை அதிகப்படுத்தி துரிதகதியில் கட்டுமானப்பணிகளை முடிவுறுத்த வேண்டும்.

குஞ்சுக்குளம் கிராமமானது பல நூற்றாண்டுகள் பழைமைவாய்ந்த கிராமம் ஆகும். வருடாவருடம் மல்வத்துஓயா பெருக்கெடுப்பதனால் இக்கிராமத்துக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டு உணவு, மருத்துவ வசதிகளின்றி இம்மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.





கடந்த ஆண்டு இறுதியிலும் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக உலங்குவானூர்திகள் மூலமாக இக்கிராம மக்களுக்கு உணவுகள் விநியோகிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கட்டுமான பணியை பொறுப்பேற்றுள்ளவர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நீர் வற்றியிருக்கும் காலத்தில் விரைவாக வேலைகளை முடிவுறுத்தி பொதுமக்களின் இலகுவான போக்குவரத்துக்கு வழியேற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

அதற்கு முன்னர் மிகவும் சேதமடைந்துள்ள தொங்குபாலத்தை அவசரமாக திருத்தம் செய்து பொதுமக்களின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு வழிவகை செய்ய வேண்டும் என்றும் ஆனந்தன் எம்.பி.கோரியுள்ளார்.

குஞ்சுக்குளம் கிராமத்துக்கு நேற்று முன்தினம் சென்றிருந்தவேளை குறித்த விடயங்களை அவதானிக்க கூடியதாக இருந்ததாக ஆனந்தன் எம்.பி தெரிவித்துள்ளார். (2-250)

# முல்லைத்தீவு மீனவர்கள் பிரச்சினை குறித்து உரிய கவனம் செலுத்தப்படும்

## மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு அரச அதிபர் உறுதியளிப்பு

(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு மாவட்ட மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றதாக ஹிஜ்ராபுரம் மீனவர் சங்கத்தின் தலைவர் முத்து முஹம்மது லாபிர் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் முல்லைத்தீவைச் சேர்ந்த நான்கு மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்ததாக அவர் குறிப்பிட்டார். இதுபற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில், முல்லைத்தீவு நந்திக்கடலில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன் மற்றும் இறால் பிடிக்கும் மீனவர்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. அத்துடன், மீனவர்கள் சார்பில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் ஒரு சில கோரிக்கைகளையும் முன்வைத்திருந்தோம்.

நந்திக்கடல் கரையோரமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வள்ளங்களை அப்புறப்படுத்துவது, நந்திக்கடல் உள்ளிட்ட பகுதிகளில் பொலிஸ் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது, தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்துவோரை பொலிஸாரின் உதவியுடன் பிடிப்பதற்குரிய அதிகாரத்தை தெரிவு செய்யப்படும் மீனவச் சங்கங்களுக்கு வழங்குவது, தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி தொழில் செய்யும் மீனவர்களை பிடிப்பதற்கு பயன்படுத்த இயந்திரத்துடன் படகு வழங்குதல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

குறித்த மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகளின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட மாவட்ட செயலாளர், குறித்த பிரச்சினைகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்துவதுடன், இது தொடர்பில் பாதுகாப்பு தரப்பினருடன் கலந்துரையாடிய பின்னர் அறிவிப்பதாக தெரிவித்தார். (2)




# ‘உரிமைக்கும் உயர்வுக்கும்’ நூல் வெளியீட்டு விழா

(கிளிநொச்சி)

பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான முருகேசு சந்திரகுமாரின் மக்கள் நோக்கிய பாராளுமன்ற உரைகளின் தொகுப்பான ‘‘உரிமைக்கும் உயர்வுக்கும் ’’ எனும் நூல் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் இடம்பெறும்.

ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் ம.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு நூல் வெளியீட்டுரையை க.வைரமுத்து ஆற்ற ஏற்புரையை பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் நிகழ்த்துவார்.

சிறப்புரைகளை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், முன்னாள் வடக்குக் கிழக்கு கல்வி பண்பாட்டு அமைச்சின் செயலாளரும் ஆறுதல் நிறுவன இயக்குநருமான சுந்தரம் டிவகலாலா ஆகியோர் ஆற்றுவார்கள்.

இந்நிகழ்வு உரிமைக்கும் உயர்வுக்குமான செயற்குழுவின் ஏற்பாட்டில் இடம்பெறும்.(2)

# ‘வளை ஓசை நாதம்-5’ மலருக்கு எழுத்தாக்கங்கள் கோரப்படுகின்றன

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக கலாசார பேரவையால் கடந்த 2011ஆம் ஆண்டு முதல் வளைஓசை எனும் ஆண்டு மலர் வெளியிடப்பட்டு வருவதாக கண்டாவளை பிரதேச செயலாளர் த.முகுந்தன் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் இவ்வருடமும் கலாசார பேரவையானது ஐந்தாவது வருடமாக “வளை ஓசை நாதம்-5’ எனும் ஆண்டு மலரை வெளியிட தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு பிரதேசம் சார்ந்த கலை, இலக்கிய, கல்விப்புலம் சார் எழுத்தாளர்கள் மற்றும் ஆர்வலர்களிடமிருந்து கலை, கலாசாரம், வாழ்வியல்தொன்மைகள், நாட்டுப்புறவியல், ஆன்மீகம், மரபுரிமைகள் போன்ற விடயங்களை பிரதிபலிக்கும் வகையிலான கவிதை, சிறுகதை, கட்டுரை, பத்தி விமர்சனம் ஆகிய எழுத்தாக்கங்களை பேரவை எதிர்பார்க்கின்றது.

இவை அனைத்தையும் எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் தலைவர், பிரதேச கலாசார பேரவை, பிரதேச செயலகம், கண்டாவளை எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்க வேண்டும் என அவர் கேட்டுள்ளார். (2)



வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு. பசுபதிப் பிள்ளை யின் 2014 ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டின் மூலம் கிளி நொச்சி மாவட்டத்திலுள்ள முரசுமோட்டை பாரதி சனசமூக நிலையம், ஜுனியன் குளம் அறிவொளி சனசமூகநிலையம், கோரக்கன்கட்டுபுனித பூமி சனசமூகநிலையம், கல்மடு நாவல் நகர் கலைகதிர் சன சமூகநிலையம்ஆகிய வற்றிற்கு கடந்த 11 ஆம் திகதி கிளிநொச்சி ஆணையாளர் அலுவலகத்தில் வைத்து தளபாடங்கள் வழங்கப்பட்டதை படத்தில் காணலாம்.(படம்:-கிளிநொச்சி-1 செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1139



# நட்பின் மேன்மை!



வித்யாரண்யம் எனும் இடத்திலிருந்த குருகுலத்தில் பல மாணவர்கள் பயின்று வந்தனர்.

அவர்களுள் சுதாமா என்ற மாணவன் அனைத்து மாணவர்களிலும் அறிவில் சிறந்து விளங்கினான்.

அவனைத் தன் மாணவனாக அடைந்தது பற்றி குருவித்யாபதி மிகவும் மகிழ்ச்சியுற்றார்.

சுதாமா மிக ஏழ்மையான குடும்பத்திலிருந்து வந்தவன். அவனுக்கு ஜெயன், விஜயன் என்ற இரண்டு சகோதரர்கள் மிகவும் நெருங்கிய நண்பர்களாகத் திகழ்ந்தனர். சகோதரர்கள் இருவரும் அந்த நாட்டு மன்னரின் புதல்வர்கள்.

ஒருநாள், மூவரும் சேர்ந்து வனத்திற்குச் சென்றனர். ஹோமத்திற்கு வேண்டிய சமித்துகளைப் பொறுக்குவதில் ஈடுபட்ட சுதாமா இளவரசர்களை விட்டு விலகிச் சென்றுவிட்டான்.

ஜெயன், விஜயன் இருவரும் அம்பு எய்திப் பொழுதுபோக்கிக் கொண்டு இருந்தனர். அந்த சமயம் அருகிலிருந்த புற்றிலிருந்து ஒரு நாக பாம்பு வெளியே வந்தது. அதன தலையில் ஒரு இரத்தினம் சுடர் விட்டுக் கொண்டிருந்தது. இதைக் கண்ட இருவரும், அதன் மீது அம்பெய்தினார்கள். அம்புகள் குறி தவறின.

ஆனால் சீற்றங்கொண்ட நாகம் இருவரையும் தீண்டிவிட்டுப் புற்றுக்குள் சென்று மறைந்தது.

சற்று நேரங்கழித்து அந்தப்பக்கம் வந்த சுதாமா, தன் நண்பர்கள் இருவரும் உடலெங்கும் விஷம் பாய்ந்து இறந்து கிடக்கக் கண்டதும், துடிதுடித்துப் போனான்.

அந்தக் குறிப்பிட்ட புற்றில் வாசுகியின் வம்சத்தைச் சேர்ந்த நாகம் ஒன்று வசிக்கிறது என்று தன் குரு சொல்லக் கேட்டிருந்த சுதாமா, புற்றின் முன் அமர்ந்து இரு கரம் குவித்து நாகராஜனை வேண்ட ஆரம்பித்தான்.

"நாகராஜனே! அறியாமல் தவறிழைத்த இந்த இரு சகோதரர்களை தயவுசெய்து மன்னித்து அவர்களை உயிர் பிழைக்கச் செய்!

அவர்கள் இருவரும் இளவரசர்கள்! ஓர் இளவரசன் இறந்தால் அந்த நாட்டு மக்கள் அனைவரும் துன்புறுவர்! ஆகவே பொதுநலம் கருதி, இவர்களை உயிர்ப்பிப்பாய்!" என்று வேண்டினான்.

அதைக் கேட்ட நாகராஜன் புற்றுக்குள்ளிருந்தவாறே, "அவர்கள் உன் நண்பர்கள் என்ற காரணத்தைக் கூறி நீ உயிர்ப்பிச்சை கேட்பாய் என்று நினைத்தேன். ஆனால் நீ பொதுநலத்தை முன்னிட்டு உயிர்ப்பிச்சை கேட்டாய். உனக்காக இவர்களுக்கு உயிர் தருகிறேன!" என்று கூற, சிறிது நேரத்தில் தரையில் விழுந்து கிடந்த இருவரும் உயிர் பெற்று எழுந்தனர்.

புற்றுக்குள்ளிருந்தவாறே அவர்களை நோக்கி நாகம் மீண்டும் பேசியது. "இளவரசர்களே! உங்களுடைய நண்பனின் வேண்டுதலின் பேரில் தான் நான் உங்களைப் பிழைக்க வைத்தேன். பிற்காலத்தில் நீங்கள் இருவரும் மன்னர்களாகத் திகழும் பொழுதும் சுதாமா ஒருவனால தான் உங்களைத் தோற்கடிக்க முடியும்!"

உடனே, இளவரசர்கள் இருவரும் சுதாமாவை அன்போடு கட்டிக் கொண்டு, "சுதாமா! எங்களுடைய உயிர் நண்பனாக இருந்த நீ, இன்று உண்மையாகவே எங்களுடைய உயிரை மீட்டுத் தந்துவிட்டாய்" என்று தழுதழுத்த குரலில் கூறினர்.

"நாம் என்றென்றும் இதேபோல் நண்பர்களாக இருக்க வேண்டும். வாருங்கள், குருகுலம் செல்வோம்!" என்று சுதாமா கூறி, அவர்களை அழைத்துச் சென்றான்.

தங்கள் குருவிடம் காட்டில் நடந்ததை அவர்கள் சொல்ல, குரு சுதாமாவைப் பெரிதும் பாராட்டினார்.

சில ஆண்டுகளில் அவர்களுடைய கலவி முடிவடைந்தது. சுதாமாவைத் தனியே அழைத்து, "நைமிகாரண்யத்தில் என்னுடைய குரு வித்யாசரண் இருக்கிறார்.

அவரிடம் சென்று மேலும் சில ஆண்டுகள் கல்வி கற்பாய்!" என்று அவனை வாழ்த்தி அனுப்பி வைத்தார்.

ஜெயனும், விஜயனும் குருவை வணங்கி விட்டுத் தங்கள் ராஜ்யத்திற்குத் திரும்பிச் சென்றனர்.

அரண்மனையில் தங்கள் தந்தையிடம் தங்கள் குருகுல வாழ்க்கை பற்றியும் தங்களுடைய நெருங்கிய நண்பன் சுதாமாவைப் பற்றியும் விவரமாகக் கூறினர்.

தாங்கள் ஒருமுறை நாகத்தினால் தீண்டப்பட்டு உயிர் இழந்ததையும், தங்களை சுதாமா உயிர் பிழைக்கச் செய்ததையும் கூறினர். அதைக் கேட்ட மன்னர் தீவிர சிந்தனையில் ஆழ்ந்தார்.

பிறகு, தன் மகன்கள் இருவரையும் நோக்கி, "பிள்ளைகளே! என்னதான் சுதாமா தங்களுக்கு மறுவாழ்வு அளித்த உத்தமன் ஆனாலும், அவனால் மட்டுமே உங்களை வெல்ல முடியும் என்று நாகம் கூறியது எனக்குக் கவலையளிக்கிறது.

அத்தகைய சக்தி வாய்ந்த ஒருவனை நீங்கள் உங்கள் அருகே இருக்க அனுமதித்தால், உங்களுக்கு ஆபத்துதான். ஆகையால், அவனுடைய நட்பை மறந்து விடுங்கள்" என்றார்...........

(தொடரும்)

## 05.2015 14 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1264 - இங்கிலாந்தின் மூன்றாம் ஹென்றி பிரான்சில் கைது செய்யப்பட்டான்.
- 1610 - பிரான்சின் நான்காம் ஹென்றி மன்னன் கொலை செய்யப்பட்டான். பதின்மூன்றாம் லூயி முடிசூடினான்.
- 1643 - பதின்மூன்றாம் லூயி இறக்க, அவனது 4 வயது மகன் பதினான்காம் லூயி பிரான்சின் மன்னனானான்.
- 1796 - பெரியம்மை நோய்க்கான தடுப்பூசியை எட்வர்ட் ஜென்னர் அறிமுகப்படுத்தினார்.
- 1811 - பராகுவாய் ஸ்பெயினிடமிருந்து விடுதலை பெற்றது.
- 1861 - ஸ்பெயினில் பார்சிலோனாவில் 859-கிராம் எடையுள்ள விண்கல் ஒன்று வீழ்ந்தது.
- 1879 - 463 இந்தியத் தொழிலாளர்களைக் கொண்ட முதலாவது தொகுதியினர் லியோனிடாஸ் கப்பலில் பிஜியை அடைந்தனர்.
- 1900 - கோடைக் கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் பாரிசில் ஆரம்பமாகின.
- 1939 - பெருவைச் சேர்ந்த 5 வயது நிரம்பிய லீனா மெடினா உலகின் முதலாவது வயதில் குறைந்த தாயாக அறிவிக்கப்பட்டார்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: நெதர்லாந்து ஜேர்மனியிடம் சரணடைந்தது.
- 1948 - இஸ்ரவேல் நாடு தன்னைத் தனிநாடாகப் பிரகடனப்படுத்தி தற்காலிக அரசையும் அறிவித்தது. அரபு நாடுகள் இஸ்ரேலைத் தாக்கத் தொடங்கின.
- 1955 - பனிப்போர்: சோவியத் ஒன்றியம் உட்பட எட்டு நாடுகள் சேர்ந்து வார்சா ஒப்பந்தம் எனப்படும் தற்காப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.
- 1973 - ஸ்கைலாப் என்ற ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது விண்வெளி நிலையம் சட்டர்ன் 5 விண்கப்பலில் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 2004 - டென்மார்க்கின் முடிக்குரிய இளவரசர் பிரெடரிக், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த "மேரி டொனால்ட்சன்" என்னும் பெண்ணை திருமணம் புரிந்தார்.

**பிறப்புக்கள்**

- 1907 - அயுப் கான், பாகிஸ்தான் ஜனாதிபதி (இ. 1974)
- 1944 - ஜோர்ச் லூகாஸ், திரைப்பட இயக்குனர்
- 1948 - பொப் வூல்மர், தென்னாபிரிக்காவைச் சேர்ந்த பாகிஸ்தான் துடுப்பாட்ட அணியின் பயிற்றுநர் (இ. 2007)
- 1953 - நொரொடாம் சிகாமணி, கம்போடியாவின் மன்னர்

**இறப்புகள**

- 1574 - குரு அமர்தாஸ், மூன்றாவது சீக்கிய குரு (பி. 1479)
- [illegible] (பி. 1784)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

**ரஜினியின் "முத்து" அபார சாதனை!**

திசை மாறி மீனாவும், ரஜினியும் கேரளாவுக்கு சென்றுவிட, அங்கு வழி கேட்க மொழி தெரியாமல் திண்டாடுகிறார், ரஜினி. 'கட்டிப்பிடிச்சு ஒரு உம்மா கொடு!' என்று கேட்கும் படி மீனா குறும்பு செய்ய, அதை பலரிடம் கேட்டு உதைபடும் ரஜினி கடைசியில் உண்மை அர்த்தம் தெரிந்து மீனாவுக்கே 'உம்மா' கொடுப்பதும் கலகலப்பான காட்சிகள்.

இதில் ரஜினிக்கு இரட்டை வேடம் என்றாலும், இருவரும் ஒன்றாக தோன்றவில்லை. அப்பா ஜமீன்தாராக சிறிது நேரமே வந்தாலும் மனதை நெகிழ வைத்து விடுகிறார்.

'ஒருவன் ஒருவன் முதலாளி, குலுவாலிலே முத்து வந்தல்ல', 'தில்லானா தில்லானா', 'கொக்கு சைவ கொக்கு' முதலான பாடல்கள் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றன.

**அரசியல் பஞ்ச்**

'வரவேண்டிய நேரத்தில் நிச்சயம் வருவேன்' என்பது போன்ற அரசியல் பஞ்ச் வசனங்கள் இந்தப்படத்தில்தான் இடம் பெற்றன.

1995 அக்டோபர் 23 ஆம் திகதி தீபாவளி அன்று வெளியான இப்படம், 134 நாள் ஓடி, வெற்றி வாகை சூடியது. தெலுங்கில் 'முத்து' என்ற பெயரிலேயே 'டப்' செய்யப்பட்டு, நூறு நாள் ஓடியது.

**ஜப்பானில் சாதனை**

'முத்து' படம் தமிழ்நாட்டில் வெளியாகி 3 ஆண்டுகளுக்குப் பிறகு, ஜப்பானில் திரையிடப்பட்டது. ஜப்பானிய மொழி சப் டைட்டிலுடன் 'டான்சிங் மகாராஜா' என்ற பெயரில் ரிலீஸ் ஆகியது.




இந்தப்படம், ஜப்பானியர்களை வெகுவாகக் கவர்ந்தது. குறிப்பாக ரஜினியின் நடனங்களை அவர்கள் வெகுவாக ரசித்தனர்.

ஜப்பானில் 'முத்து' 23 வாரங்கள் ஓடி வரலாறு படைத்தது. வெளிநாட்டில், இவ்வளவு அதிக நாள் ஓடிய தமிழ்ப்படம் இது தான்.

1950 இல் 'ஆவாரா' படத்தின் மூலம், ரஷிய ரசிகர்களிடம் ராஜ்கபூர் புகழ்பெற்றார். இப்போது, ஜப்பானில் பெரிய ரசிகர் கூட்டத்தையே பெற்றிருக்கிறார், ரஜினி.

இன்று தமிழ்ப்படங்கள் உலகம் முழுவதும் ஒரே நாளில் ரிலீஸ் செய்யப்படுகின்றன. 'முத்து' வுக்கு கிடைத்த வெற்றிதான் இதற்குக் காரணம.

ரஜினியின் 'முத்து' படத்தை இயக்கும் வாய்ப்பு கிடைத்தது பற்றியும், 'முத்து' உருவானபோது கிடைத்த அனுபவங்கள் பற்றியும் டைரக்டர் கே.எஸ்.ரவிக்குமார் விளக்கினார்.

அவர் கூறியதாவது:-

'ஏவி.எம். நிறுவனத்துக்காக நான் 'சக்திவேல்' படத்தை இயக்கியபோதுதான் ரஜினி சாருடன் எனக்கு அறிமுகம் கிடைத்தது. சக்திவேல் படத்தின் டப்பிங் சமயத்தில் அவர் நடித்துக்கொண்டிருந்த 'வீரா' படத்தின் பாடல் காட்சிகளை பார்ப்பதற்காக ஏவி.எம். ஸ்டூடியோவுக்கு வந்திருந்தார். என்னைப் பார்த்ததும், 'உங்களைப் பற்றி ஏவி.எம். சரவணன் சார், விஜயகுமாரெல்லாம் நிறைய சொல்லியிருக்காங்க' என்று ஏற்கனவே பழகியவர் மாதிரி இயல்பாக பேச தொடங்கினார்.

**ரசிகன்**

நான் பட உலகுக்கு வரும் முன்பு ரஜினி சாரை ரசிகனாக நேசித்தவன். எங்கள் வீடு மந்தைவெளியில் இருந்தது. மந்தைவெளி மெயின் ரோட்டில் ரஜினி சாரின் ஒயிட் கலர் பியட் 5004 வரும்போது காத்திருந்து பார்த்த அனுபவங்கள் உண்டு. அப்போது இவரை நேரில் பார்த்து இரண்டு வார்த்தை பேச முடியுமா என்று ஏங்கியிருக்கிறேன். ஆனால் அவரே பின்னாளில் என் டைரக்ஷனில் முத்து, படையப்பா படங்களில் நடித்து அவை வெற்றிப் படங்களானது என்பது என்னை இப்போதும் பரவசப்படுத்தும் விடயங்கள்.

நான் இயக்க வந்த புதிதில் 'சேரன் பாண்டியன்', 'புருஷலட்சணம்', 'பொண்டாட்டி ராஜ்யம்', 'புரியாதபுதிர்' என்று இயக்கியதில் ரசிகர்கள் வட்டத்திலும் தெரிய ஆரம்பித்திருந்தேன்.

*(தொடரும்)*





# கருவாச்சி காவியம்

**வைரமுத்து - 139**

**....வே**ணாமடா மகனே! குடிக்கிற கூழுக்கும் குடியிருக்கிற வீட்டுக்கும் கேடு வந்திருமடா.

பொறுமையாயிருந்து பொழைச்சுக் காமிக்கணுமடா ராத்திரியெல்லாம் மகனக் கட்டிப்புடிச்சு அழுது கோழி கூப்பிட ஒறங்கிப் போனா கருவாச்சி.

விடிய்ய... செங்கமங்கலா இருக்கிறப்பவே சடையத் தேவன் வீட்டுக்கதவ ஓங்கி ஒரு எத்து எத்தி உள்ள புகுந்துட்டான் அழகுசிங்கம்.

ஏய் சடையத் தேவன் கெழவா... மகன் கூப்பிடுறான்னு எங்க அப்பன எழுப்புய்யா.

காத்திகமாசக் குளிருக்குப் பயந்து கம்பளிக்குக் கீழ கெடக்கான் கெழவன்; ஒண்ணும் பதிலக் காணோம்.

அம்மி மேல படுத்துக் கெடந்த நாய் மட்டும் உர்ருன்னுச்சு.

திருகக் கல்லத் தூக்கு நாய் மேல போட்டான். வால் மட்டும் அந்து வள் வள் ன்னு கத்திக்கிட்டுத் தப்பிச்சு ஓடிருச்சு நாயி. திருகக்கல் விழுந்ததுல ரெண்டா ஒடைஞ்சு துண்டா விழுந்திருச்சு அம்மி.

இன்னைக்கு அம்மிக்கல்லு. நாளைக்கு ஒங்கதல. சொல்லிட்டு வெளியேறிருச்சு சூறாவளி.

சீ! வெளையாட்டுப் பயன்னு நெனச்சது வெனையாப் போச்சே. ஏலே... எந்த ஊர்ல எந்தத் தேவடியா வீட்ல கெடக்கானோ? தூக்கிட்டு வாங்கடா கட்டையன.

மசங்க வந்து சேந்தான் கட்டையன்.

மகனே! மொத மொதலா அப்பனுக்கு அச்சம் வருதடா. பொழைச்ச பொழப்பெல்லாம் போயிரும் போருக்குடா. மண் புழுவுன்னு நெனச்சப்ப [illegible] காலச்சுத்துற கட்டுவிரியனா [illegible]கிப் போனாண்டா.

என்னடா பண்ணப்போற?

அவனக் கண்டதுண்டமா வெட்டிக் கத்திரிக்காச் சாக்குல அள்ளி வருச நாட்டுச் சொனையில சொமந்து போட்டுட்டு [illegible] நானும் இந்த ஊர்ல இருக்கணுமா இல்லையா...? மகனே சொல்றேன் கேளு. எம் பொழப்பு இன்னைக்கோ நாளைக்கோ.

நீ ஊருக்கொரு பொம்பள வெச்சு அலையிற. வீட்டுக் கொரு பொம்பள வேணாமா? வம்சத்துக்கொரு வாரிசு வோணாமா? ஒனக் கொண்டும் வயசு போகல; நாப் பத்தஞ்சுதான்.



இந்த ஊரே ஒண்ணு திரண்டு எதித்தாலும் சரி கல்யாணம் பண்ணி வைக்கிறேன்; கட்டிக்க. வருசத்துக் கொரு பிள்ளைக்கு வாரிசு குடு. நாலு தலமொறையாக் கட்டிக்காத்த சொத்துல ஒரு நாய் வந்து வாய் வைக்கிறதா? நம்ம பொழச்ச பொழப்பு நாறிப்போகாதா? சரி சொல்றா மகனே!

கட்னவனுக்கு ஒரு பொண்டாட்டி; கட்டாதவனுக்குப் பல பொண்டாட்டின்னு திரிஞ்ச கட்டையன் கடைசியில சரி சொல்லிட்டான்.

தை பெறக்க... வந்துட்டாளய்யா கட்டையன் கட்ன புதுப் பொண்டாட்டி- எடது காலத் தூக்கி எட்டுச்சு.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியானது பெற்றோரின் வழிப்படுத்தலில் தங்கியுள்ளது

**யாழ்.மானிப்பாய் மகளிர் கல்லூரியில் அண்மையில் உயர்தர மாணவர் மன்றத்தின் வருடாந்த ஒன்று கூடலும் மதிய போசனமும் விழாவில் பிரதமவிருந்தினர் உரையின் தொகுப்பு**

கல்வியே நிரந்தரமான செல்வம் எனவும், இக்கல்வி அபிவிருத்தியில் பெற்றோர், ஆசிரியர்கள், கல்விசார் நிர்வாகிகள் ஆகியோரின் இணைந்த பங்களிப்பு அவசியம்.

பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியானது பெற்றோரின் வழிப்படுத்தலிலே அதிகம் தங்கி உள்ளது.

அண்மைக்காலத்தில் எமது பிரதேசத்தில் சில பெற்றோர்கள் தமது பொறுப்பில் இருந்து விலகுகின்றனர். இவ்வாறு இவர்கள் விலகுவதற்கு காரணம் பெற்றோர்களின் ஆலோசனைகளையும், வழிப்படுத்தலையும் சில பிள்ளைகள் ஏற்றுக்கொள்ள மறுப்பதே.



கல்வித் தரிசனம்

இவ்வாறு மறுப்பதற்கு காரணம் அவர்களுடைய நண்பர்களின் சேர்க்கை, பார்க்கின்ற திரைப்படங்கள், தொடர்நாடகங்கள், சூழ்நிலைகளே காரணமாக அமைகின்றது.

இவ்வாறு பெற்றோருடைய ஆலோசனைகளையும், வழிப்படுத்தலையும் பிள்ளைகள் ஏற்றுக்கொள்ளாத சந்தர்ப்பத்திலும் அன்பான அணுகுமுறை, அதிகாரரீதியான அணுகுமுறை ஆகியவற்றை பிரயோகித்து பிள்ளைகளின் வயதுக்கேற்ப வழிப்படுத்த வேண்டிய பொறுப்பும், உரிமையும் பெற்றோர்களிடமே உண்டு.

இவ்வாறு உரிய காலங்களில் பிழைகளை உரிமையுடன் சுட்டிக்காட்டி நல்ல பிள்ளையாக்காத சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட பிள்ளையினுடைய வாழ்க்கை எதிர்காலத்தில் அர்த்தம் அற்றதாகி விடும், குடும்ப நன்மதிப்பை பாதிக்கும், சமூகத்திற்கு தீங்கிழைப்பவராகவே மாறுவர்.

மேலும் இன்று எல்லோராலும் பேசப்படும் இளைஞர்களின் வன்முறை கலாசாரத்தை தூண்டும். இது தனிமனித, குடும்ப, சமூக, அமைதிக்கு பாதகமாகவே அமைகின்றது.

அத்துடன் போக்குவரத்து விதிகளை பின்பற்றாமையினால் விபத்துக்களினால் அநேகர் உயிரிழக்கின்றனர், அநேகர் பாதிக்கப்படுக்கின்றனர்.

முன்னர் வாகன விபத்துக்கள் எதிர்பாராமலேயே ஏற்படுவதுண்டு. ஆனால் இன்று பார்க்கும் போது தெரிந்து கொண்டே விபத்தினை ஏற்படுத்தும் அளவுக்கு அவர்களது செயற்பாடும் மனோநிலையும் காணப்படுகிறது.

ஆகவே பெற்றோர் பிள்ளைகளது ஒவ்வொரு நடவடிக்கையினையும் அவதானித்து அவர்களை வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுடையது. பிள்ளைகள் வழிப்படுத்தல்களை ஏற்றுக்கொள்கிறார்கள் இல்லை என்பதற்காக ஒதுங்கி இருக்க கூடாது.

பெற்றோர்கள் பின்வரும் வழிகளில பிள்ளைகளை மேற்பார்வை செய்து வழிப்படுத்த வேண்டும்

1. கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தி பிள்ளைகளை சுயமாகவே கற்க முன்வரச்செய்ய வேண்டும்.

2. சகோதரர்களுக்கும் அயலவர்களுக்கும் முன்மாதிரியாக ஒவ்வொரு நடவடிக்கையிலும் செயறபடவைக்க வேண்டும்.

3. பிள்ளைகளின் சிந்தனை செயற்பாடு கல்வியையே நோக்கமாக கொண்டிருத்தல் வேண்டும்.

4. சமயத்துடன் சேர்ந்த கல்வி வாழ்க்கைமுறையினை சிறுவயதிலிருந்தே மாணவர்களுக்கு போதித்து வழிப்படுத்த வேண்டும்.

5. நேர அட்டவணை தயாரிதது படிக்கின்ற வகுப்புக்கு ஏற்ப சுயமாக கற்கின்ற பழக்கத்தினை ஏற்படுத்த வேண்டும்.

6. சரியான நேரத்துக்கு வகுப்பிற்கு சமுகம் அளிக்க கூடியதாகவும் உரிய காலத்தில் வகுப்பு வேலைகளை செய்து முடிக்கிறார்கள் என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

7.பெற்றோர் ஆசிரியர்களு டன் தொடர்பு கொண்டு பிள்ளை பற்றிய நிலைகளை அறிவதுடன் ஆசிரியர்களது ஆலோசனைகளையும் ஏற்றுச் செயற்படவேண்டும்.

8. பெற்றோர் சமூக நிகழ்ச்சிகளுக்கு, ஆலயங்களுக்கு, பொழுது போக்கு இடங்களுக்கு பிள்ளைகளை அழைத்து செல்லும் போது அவர்களது கல்வி பாதிக்காத வகையில் கவனித்து கொள்ள வேண்டும.

9. பிள்ளைகள் எல்லா விடயங்களையும் பெற்றோர்களிடம் இருநதே அதிகமாக கற்றுக்கொள்கிறார்கள் ஆகவே இவர்களது சொல், செயல் ஆகியவற்றில் நிதானமாக நடந்து கொள்ள வேண்டும். மேலும் ஒவ்வொரு குடும்பமும் சராசரியாக 4 மணித்தியாலங்கள் தொலைக்காட்சியுடன் பொழுது போக்குகின்றார்கள் அப்போது பிள்ளைகளும் இணைந்து செயற்படுகின்றனர்.

இதனால் நேரம் வீணாக்கப்படுகிறது. அத்துடன் எதிர்காலத்தில் இவர்கள் தொலைக்காட்சியுடன் மேற்கொள்ளும் பொழுது போக்கு அதிகரித்துச்செல்லும். பெற்றோராலும் கட்டுப்படுத்த முடியாது மன உளைச்சலுக்கும் உள்ளாகிறார்கள், நடைமுறைக்கு ஒவ்வாமல் இவற்றில் காணும் காட்சிகள் போலவே வாழ முனைகின்றார்கள்.

இதனால் பல்வேறு முரண்பாடுகள் உருவாக முனைகின்றன. இந்நிலைக்கு பிள்ளைகளை ஆக்கிய பொறுப்பு பெற்றோர்களு டையதே. பெற்றோர் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

10. கல்விக்காக தேவையான பணத்தினை பெற்றோர் கொடுக்க் வேண்டும். சிலர் பிள்ளைகள் மீதுள்ள பாசத்தை பணம் கொடுப்பதன் மூலம் வெளிக்காட்ட முனைகின்றனர். இந்நிலை பிள்ளைகளின் எதிர்காலத்தை தவறான வழிக்கு இட்டு செல்லும். இதனை தவிர்த்து கொள்ள வேண்டும்.

11. தேவையற்ற உபகரணங்கள் அல்லது தேவைக்கு அதிகமான உபகரணங்கள் கொள்வனவு செய்வதனை நிறுத்திக்கொள்ள வேண்டும். குடும்பங்களில் மோட்டார் வாகனங்கள், தொலைபேசிகளின் பாவனை செலவுகளை ஏற்படுத்துகிறது.

தேவையற்ற தொடர்புகளை ஏற்படுத்தும். பணம் விரயம் மட்டுமல்ல நேரமின்மை குடும்ப அமைதியின்மை, பிள்ளைகளின் கல்விக்கு தடையாக இருத்தல் போன்ற பாதக நிலைமைகளே அதிகளவில் காணப்படுகிறது. இவ்விடயத்தில் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

சிலர் பிள்ளைகளின் திறமையான சித்தியினை கண்டு கல்விக்கு எதிர்விளைவை ஏற்படுத்த கூடியதான அன்பளிப்பை வழங்குவார்கள். இச் செயற்பாடு ஆனது பிள்ளைகளின் கல்வியினை திட்டமிட்டு சீரழிப்பதாகவே அமையும்.

உதாரணம் - மோட்டார் வாகனம் வாங்கி கொடுத்தல், Lap Top வாங்கி கொடுத்தல், கைத் தொலைபேசி வாங்கி கொடுத்தல். போன்ற அன்பளிப்புக்கள் பிள்ளைகளை கல்வியில் அதிக நேரம் செலவு செய்யாமல் தவறான வழியில் செல்ல வழிவகுக்கும்.

உ-ம் - க/பொ/த சாதரண தரத்தில் 9A எடுத்து விட்டார் என்பதற்காக சில பெற்றோர் அல்லது உறவினர்கள் இத்தகைய அன்பளிப்புக்களை வழங்குவதன் மூலம் சில க/பொ/த உயர்தர பரீட்சையில் 3F எடுக்க வைத்துள்ளார்கள். இதனை நடைமுறையில் பார்க்கலாம். அன்பளிப்புக்கள் மாணவர்களை ஊக்குவிப்பதாக அமைய வேண்டும்.

மேலும் பிள்ளைகளை அதிக நேரம் கல்வியுடன் ஈடுபடுத்த வேண்டும். கலாசாரம் பேண வைக்க வேண்டும். உள்ளதைக் கொண்டு திருப்தியாக வாழ பழக்க வேண்டும். பொதுச்சட்டங்கள் சமூக விதிகளை பின்பற்ற வைக்க வேண்டும். இத்தகைய செயற்பாடுகளின் மூலம் பெற்றோர் தமது பொறுப்புக்களை நிறைவேற்றுபவர்களாக கருதப்படுவர்.

பெற்றோர் தமது பொறுப்புக்களை தட்டிக்கழிக்க கூடாது. மாணவர்களும் பெற்றோர்களின் வழிப்படுத்தலை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை உள்ளவர்கள் பெற்றோர்களே.

**இ.ரட்ணம்**
**தலைவர்**
**சந்தைப்படுத்தல் துறை**
**யாழ்.பல்கலைக்கழகம்**

# போராட்டங்களைத் தவிர வேறுவழி எதுவுமில்லை

(கொழும்பு)

தடைகளுக்கு மத்தியில் மாணவர்களின் போராட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுப்பதை தவிர மாற்று வழிகள் இல்லை என அனைத்திலங்கை மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், அண்மையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்பாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது குழப்பம் விளைவித்த இரண்டு மாணவர்களும் ஒலிபெருக்கியுடன் முச்சக்கரவண்டியை செலுத்தியவரும் எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டம் தொடர்பாக நேற்று முன்தினம் கொழும்பு நீதவான் நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போதே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது.

கடந்த மாதம் 29 ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்பாக நடத்தப்பட்ட மாணவர் ஆர்ப்பாட்டத்தில் பௌத்த பிக்கு மாணவர்களும், ஏனைய சில மாணவர்களும் அரச சொத்துகளுக்கு சேதம் விளைவித்த நிலையில் கைது செய்யப்பட்டனர்.

இதுதவிர, பொலிஸ் அதிகாரிகள் "சிலர் மீதும் தாக்குதல் மேற் கொண்டு அவர்களுக்கு காயம் ஏற்படுத்தியதாக மாணவர்கள் மீது குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, மாணவர் ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்த ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒருவரை கோட்டை பொலிஸார் கடந்த 8 ஆம திகதி பலவந்தமாக அழைத்து சென்றதாக தெரிவித்து நேற்று முன்தினம் மாணவர் ஒன்றியத்தினர் ஆர்ப்பாட்ட பேரணியொன்றை நடத்தி யுள்ளனர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக வளாகத்திலிருந்து குறித்த பேரணி விஜேராம சந்தி வரை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# 3 ஆயிரம் கொரிய நாட்டு பியானோக்களை கார்ல்டன் பாடசாலைக்கு வழங்கியது எப்படி?

(கொழும்பு)

கொரிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 3000 பியானோக்களை, முன்னாள் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, முன்னாள ஜனாதிபதி மகிந்தவின் மனைவி சிரந்தி ராஜபக்ஷவின் கார்ல்டன் பாலர் பாடசாலைக்கு வழங்கியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் அவர் இந்த குற்றச்சாட்டுக்களை வெளியிட்டுள்ளார்.

கொரிய அரசாங்கத்தினால் கல்வி அமைச்சிற்கு வழங்கப்பட்ட 3000 பியானோக்கள் எந்த அடிப்படையில் வழங்கப்பட்டது?

ஒவ்வொரு பியானோவும் ஒன்றரை இலட்சம் ரூபாய் பெறுமதியானவை.

பந்துல குணவர்தன கல்வி அமைச்சராக கடமையாற்றிய காலத்தில் இந்த பியானோக்கள் வழங்கப்பட்டன.

இவை தனிப்பட்ட ரீதியில் பந்துல குணவர்தனவிற்கு வழங்கப்படவில்லை கல்வி அமைச்சிற்கே வழங்கப்பட்டது.

இதனை முறைகேடான வகையில் விநியோகம் செய்ய முடியாது.

முன்னாள் ஜனாதிபதியின் மனைவியான சிரந்தி ராஜபக்ஷவிற்கு சொந்தமானது என கூறப்படும் கார்ல்டன் பாலர் பாடசாலைக்கு 35 பியானோக்கள் வழங்கப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சிற்கு சொந்தமான சொத்துக்கள் எவ்வாறு கார்ல்டன் பாலர் பாடசாலைக்கு வழங்கப்பட்டது.

பியானோ விநியோகம் செய்யப்பட்ட முறை குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்.

ஒவ்வொன்றும் 35000 ரூபாய் பெறுமதியான 30000 க்ரீன் போர்ட்கள் விநியோகம் செய்யப்பட்ட விதம் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஸ்டாலின் ஊடக அறிக்கையில் கோரிக்கைவிடுத்துள்ளார். (இ-5)

# அம்பாந்தோட்டை முதல்வருக்கு மறியல்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை முதல்வர் எராஜ் ரவிந்திர பெர்னாண்டோவின் விளக்கமறியல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டுள்ளது.

அவரை அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று புதன்கிழமை ஆஜர்படுத்திய போதே பிரதான நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபரை கடத்திச் செல்வதற்கு முயன்றார் என்ற குற்றச்சாட்டில் முதல்வர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருநாட்டு மீனவர் பிரச்சினைகளை சுமுகமாக தீர்க்கவே விரும்புகிறேன்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இந்திய- இலங்கை மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தாம் சுமுகமாக தீர்க்கவே விரும்புவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



இந்திய மீனவப் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் நடத்திய பேச்சுவார்த்தையின் போதே ஜனாதிபதி இதை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது கருத்துரைத்த ஜனாதிபதி இரண்டு நாடுகளுக்கும் இடையிலான மீனவப் பிரச்சினையை சுமுகமாக தீர்த்துக்கொள்ள விரும்புவதாக தெரிவித்தார்.

இந்நிலையில் இலங்கையின் அதிகாரிகள் இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்தி பிரச்சினைக்கு தீர்வை காணவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்திய மீனவர்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இச் சந்திப்பின்போது ஜனாதிபதியிடம் எடுத்துக்கூறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# 'பாலியலை இலஞ்சமாக கேட்டேன்'

பிள்ளையை பாடசாலையில் சேர்த்து கொள்வதற்காக அவருடைய அம்மாவிடம் பாலியலை இலஞ்சமாக கேட்டேன் என்ற குற்றச்சாட்டை, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வைத்து, அதிபர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அயிராங்கனி பெரேரா முன்னிலையில், தனது குற்றத்தை ஏற்றுக் கொண்ட அதிபருக்கு எதிரான வழக்குக்கு தீர்ப்பு வழங்குவதற்காக, நீதிபதி அந்த வழக்கை நாளை 15ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இந்த தாய், தன்னுடைய பிள்ளையை பாடசாலையில் சேர்த்துகொள்வதற்காக கொட்பாவை பிரதேசத்தில் உள்ள ஆரம்ப பாடசாலைக்கு சென்றுள்ளார். அச்சந்தர்ப்பத்தில், தன்னுடன் ஹோட்டலுக்கு வருவதற்கு விருப்பமாயின் பிள்ளை பாடசாலையில் சேர்த்துகொள்வதாக அதிபர் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில், அந்த தாய், இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் முறையிட்டுவிட்டு ஹோட்டலுக்கு சென்ற சந்தர்ப்பத்தில் அதிபர், ஹோட்டல் அறையில் இருந்துள்ளார்.

அதனையடுத்து இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகள் கைது செய்து அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 110 | 90 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 50 | 50 | 30 | 40 |
| தக்காளி | 80 | 70 | 70 | 60-80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 40-50 | 40 |
| கோவா | 60 | 70 | 80 | 40 | 60 |
| கரட் | 140 | 120 | 140 | 100-140 | 100 |
| பூசணி | 40 | 30 | 40 | 30 | 30 |
| புடோல் | 80 | 60 | 60 | 60 | 70 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 120 | 80 | 120 | 50-100 | 90 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 140 | 140 | 120 |
| பாகற்காய் | 100 | 80 | 100 | 100-120 | 100 |
| வெண்டிக்காய் | 120 | 40 | 80 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 100 | — | 80 |
| பயற்றங்காய் | 120 | 110 | 80 | 80-100 | 120 |
| லீக்ஸ் | 200 | 120 | 200 | 160 | 180 |
| பீற்றூட் | 80 | 60 | 80 | 60 | 40 |
| கறிமிளகாய் | 100 | 80 | 100 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 400 | 300-400 | 350 |
| போஞ்சி | 180 | 180 | 160 | 140 | 130 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | 40 | — | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 40 | 30 | 20 |
| தேசிக்காய் | 180 | 150 | 200 | 200 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 140 | — | 140 | 140 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — |
| முள்ளங்கி | 50 | 40 | 80 | 50 | 50 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 20 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 370


டனிதா சத்தியமூர்த்தி




நிசா நிசாந்தி




ஜெயராசா டிலக்ஷன்




மேரி தோமஸ்




நிதுர்சா நகுலன்




சந்தோஷ் இளஞ்சிங்கம்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 3 நிமிடங்களில் முடிந்த 18 ஆண்டு வழக்கு!

பதினெட்டு ஆண்டுகால சட்டப்போராட்டத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு விட்டார் ஜெயலலிதா.

அவர் மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் வழங்கப்பட்ட தண்டனையை ரத்து செய்துவிட்டார் கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி குமாரசாமி!


### குன்ஹாவும் பவானி சிங்கும்!

18 ஆண்டுகளாக நடைபெற்று வந்த ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் கடந்த 27.09.2014 அன்று நீதிபதி ஜான் மைக்கேல் டி.குன்ஹா தீர்ப்பு அளித்தார். ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோருக்கு 4 ஆண்டுகள் சிறை தண்டனையும், ஜெயலலிதாவுக்கு 100 கோடியும் மற்ற 3 பேருக்கும் தலா 10 கோடியும் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். இதை எதிர்த்து ஜெயலலிதா தரப்பு 29.9.2014 கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்தது. கர்நாடக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி வகேலா கடந்த ஜனவரி மாதம் முதல் திகதி நீதிபதி குமாரசாமியை நியமித்தார். அதே மாதம் 5 ஆம் திகதி தொடங்கிய விசாரணை மார்ச் 11 ஆம் திகதி முடிந்தது. மொத்தம் 41 நாட்கள் விசாரணை நடைபெற்றது.

இந்த வழக்கில் அரசு வழக்கறிஞராக பவானி சிங் ஆஜரானது தவறு என்று உச்ச நீதிமன்றத்தில் கடந்த பெப்ரவரி 26 ஆம் திகதி தி.மு.க பொதுச் செயலாளர் அன்பழகன் மனு தாக்கல் செய்தார். உச்ச நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் பெஞ்ச் பவானி சிங்கை நீக்கியது. அன்றே க.அன்பழகனின் 81 பக்க எழுத்துப்பூர்வ வாதம் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. ஆச்சார்யா அரசு வழக்கறிஞராக நியமனம் செய்யப்பட்டார். அன்றே ஆச்சார்யாவின் 18 பக்க எழுத்துப்பூர்வ வாதம் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து கர்நாடக உயர் நீதிமன்ற பதிவாளர் பாட்டீல் வரும் 11 ஆம் திகதி தீர்ப்பு என்று கடந்த 8 ஆம் திகதி அறிவித்தார்.

### "அரசியல் ஆக்கக் கூடாது!"

ஜெயலலிதா செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நாள் முதலே நீதிபதி குமாரசாமி பரபரப்புடன் விசாரித்தார். ஜனவரி 5 ஆம் திகதி அன்று நீதிபதி குமாரசாமி இருக்கையில் அமர்ந்ததும் நீதிமன்றத்துக்குள் அ.தி.மு.க வழக்கறிஞர்கள் கும்பல் கும்பலாக நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்து... "நீங்கள் யார்? உங்களுக்கும் இந்த வழக்குக்கும் என்ன சம்பந்தம்? முதலில் ஒன்றை தெரிந்து கொள்ளுங்கள்



டி.குன்ஹா

நீதிமன்றத் துக்குள் ஒழுங்கீனமாக கும்பல் கும்பலாக நிற்கக்கூடாது. இருக்கைகளில் அமர வேண்டும். நீதிமன்றத்துக்குள் அரசியல் வரக்கூடாது. அதற்கு நாடாளுமன்றம் இருக்கிறது. ஒருமணி நேரம்கூட வாய்தா கொடுக்க முடியாது" என்று சொல்லி அதிரவைத்தார். அன்று நீதிமன்றத்துக்கு சுப்பிரமணியன் சுவாமியும் வந்திருந்தார். "இந்த வழக்கின் முதல் புகார்தாரர். இந்த வழக்கின் காட்ஃபாதர். என்னுடைய புகார் மனுவை ஏற்றுத்தான் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் தமிழக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையை விசாரிக்கச் செய்து எஃப்.ஐ.ஆர்., பதிவு செய்தது. இந்த வழக்கில் நான் வாதிட உச்சநீதி மன்றம் அனுமதித்துள்ளது" என்று சுவாமி சொல்ல, "அதற்கான ஆதாரங்களைக் கொடுத்தால் அதனை பரிசீலித்து முடிவெடுப்பேன்" என்று சொன்ளனார்.

தி.மு.க பொதுச் செயலாளர் அன்பழகனின் வழக்கறிஞர் குமரேசன், "இந்த வழக்கில் அரசு வழக்கறிஞருக்கு உதவியாகவும், சிறப்பு நீதிமன்றம் அனுமதித்ததைப்போல இந்த வழக்கிலும் எங்களை 3 ஆம் தர வாதியாக சேர்த்துக் கொண்டு எங்களுடைய எழுத்துப்பூர்வமான வாதத்தைப் பதிவு செய்ய அனுமதிக்க வேண்டும்" என்று கோரிக்கை வைத்தார். அப்போது நீதிபதி குமாரசாமி, "சிறப்பு நீதிமன்றத்தில் அனுமதித்து இருக்கலாம். மேல்முறையீட்டு மனுவில ஏற்கனவே வாதி பிரதிவாதி இருக்கிறார். உங்களைப்போல பலரும் வருவார்கள். மேல்முறையீடு என்பது கீழ் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் குற்றச் சாட்டுகள் தவறானது என்பதை வாதிடுவதும், அதை மறுப்பதும் தான் வேலை. 3 ஆம் தரப்புக்கு இங்கு வேலை இல்லை" என்று சொல்லி விட்டார்.

### "உடனே வழக்கை முடிக்கவேண்டும்!"

வழக்கை விசாரணைக்கு எடுத்தது முதல் விரைந்து முடிப்பதில் ஆர்வம் காட்டினார் நீதிபதி குமாரசாமி. ஜெயலலிதா தரப்பு வழக்கறிஞரான குமார், வாய்தா கேட்டபோது மறுத்த நீதிபதி, "இந்த மேல் முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றம் 3 மாதங்களில் முடிக்கச் சொல்லி இருக்கிறது. அதனால் 1 மணி நேரம் கூட தர முடியாது" என்று சொன்னார்.



கர்நாடகா உயர் நீதிமன்றம்...

ஜெயலலிதாவின் வழக்கறிஞர் குமார், "என் மனுதாரருக்கு சொந்தமான கட்டடத்தின் மதிப்பை மிகைப்படுத்திக் காட்டி இருக்கிறார்கள். தகுதி வாய்ந்த வல்லுனர்களைக் கொண்டு அளவீடு செய்யவில்லை. சுதாகரனின் திருமணம் 1995 இல் நடைபெற்றது. ஆனால், அந்த திருமணத்துக்காகப் போடப்பட்ட பந்தல், மின்விளக்கு, வாழைத் தோரணம் அனைத்தையும் 1997 இல் கணக்கீடு செய்திருக்கிறார்கள். திருமண செலவின் உண்மையான மதிப்பீடு செய்ய முடியாமல் குத்து மதிப்பாக 5 கோடி செலவு செய்ததாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். உண்மையில் திருமணதத்துக்கு ஆன அனைத்துச் செலவுகளையும் சிவாஜியின் குடும்பத்தார்தான் செய்தார்கள். இப்படி எங்கள் தரப்பு நியாயத்தை எதையும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி எடுத்துக்கொள்ளவே இல்லை. ஜெயலலிதாவை குற்றவாளியாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த வழக்கைப் போட்டுள்ளார்கள். ஊழல் தடுப்பு போலீஸார் விசாரணையின்போது சட்ட விரோதமாகச் செயற்பட்டுள்ளனர். குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் வாக்குமூலங்களையும் பெறாமல் அவரகள் வீட்டில் இல்லாதபோது கட்டடங்களை சோதனையிட்டனர். என் மனுதாரர்கள் மீது குற்றம் சுமத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் வருமானத்தைக் குறைத்து மதிப்பிட்டும், செலவுகளை மிகைப்படுத்தியும் செயற்பட்டுள்ளனர். என் மனுதாரர்கள் எந்த விதமான ஊழல்களிலும் ஈடுபட வில்லை. இந்த வழக்கிலும் முறையாக எஃ.ஐ.ஆர் பதிவு செய்ய வில்லை. என் மனுதாரர் ஜெயலலிதா மீது குற்றச்சாட்டு சுமத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தனி கவனத்துடன் செயற்பட்டார்கள்" என்று வாதங்களை வைத்தார் குமார்.



குமாரசாமி

### ஜெயலலிதாவைக் காப்பாற்றிய 17 பாயின்ட்டுகள்!

இவ்வழக்கின் 6 ஆவது நாளில் இருந்து, ஜெயலலிதாவுக்காக உச்ச நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் நாகேஸ்வரராவும், சசிகலாவுக்காக கேரள முன்னாள் நீதிபதி பசந்த்தும், சுதாகரன், இளவரசிக்காக சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி சுதந்திரமும் ஆஜராகி தங்கள் வாதங்களை நீதிபதி முன்பு வைத்தார்கள். நாகேஸ்வர ராவ் வைத்த வாதங்களை நீதிபதி கவனமாக குறித்துக் கொண்டு இருந்தார்.

1. ஜெயலலிதாவுக்கு வழக்கு காலகட்டத்துக்கு முன்பே ஹைதராபாத் திராட்சைத் தோட்டம், விவசாய நிலங்கள், கட்டடங்கள் என நிறைய சொத்துகள் இருந்தன. அதன்மூலம் அவருக்கு அதிகளவு வருமானமும் வந்தது. 91-96 இல் அவர் எந்தவிதமான சொத்துகளையும் வாங்கவில்லை. ஆனால், தமிழக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை பொலீஸார் அவருடைய வருமானத்தை குறைத்தும், செலவுகளை அதகரித்தும் காட்டியிருக்கிறார்கள்.

2. அதேபோல ஜெயா பப்ளிகேஷன், நமது எம்.ஜி.ஆர். ஆகிய நிறுவனங்களுக்கிடையே நடைபெற்ற பண பரிவார்த்தனைகள் முறையாக நடைபெற்றது. ஜெயலலிதாவின் பிறந்த நாளுக்கு வந்த பரிசு பொருட்களைக்கூட அவரது சொத்து பட்டியலில் கணக்கிட்டுள்ளனர். இதையெல்லாம் கீழமை நீதிமன்றத்தில் எடுத்துக் கூறியும் நீதிபதி ஏற்றுக் கொள்ளவில்லை.

3. ஜெயலலிதா முதல்வராக இருந்த 91 முதல் 96 வரையிலான காலகட்டத்தில் நிறைய சொத்துகளை வாங்கி அதை சசிகலா, சுதாகரன், இளவரசி போன்ற பினாமி பெயர்களில் பதிவு செய்துள்ளதாக குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால், என் மனுதாரர் பினாமி அல்ல. (தொடரும்)

-யூனியர் விகடன்-



தி.மு.க. வழக்கறிஞர்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்த மீது குற்றச்சாட்டு!

(கொழும்பு)

**குற்றச்சாட்டுக்களுக்கு முகம்கொடுக்க முடியாது முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோதத பாய ராஜபக்ஷ, மக்களை திரட்டி போராட்டம் நடத்தி வருவதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் குற்றஞ்சாட்டியுள்ளார்.**



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகம் சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷவிடம் வாக்குமூலமொன்றை பெற்றுக்கொள்ள இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு பிரிவு அழைத்திருந்தது.

அந்த விசாரணைகளுக்கு முகம் கொடுக்க முடியாது, மக்களை திரட்டி தேசிய கொடியையும் திரிபுபடுத்தி ஆணைக்குழுவிற்கு எதிரில் போராட்டம் நடத்தப்பட்டது.

மக்களைத் திரட்டி போராட்டம் நடத்தி அதன் ஊடாக தப்பித்துக் கொள்ள முயற்சிக்கின்றார்.

குற்றம் செய்யாவிட்டால் கோத்தபாய ராஜபக்ஷ, ஆணைக்குழுவிற்கு சென்று வாக்குமூலமொன்றை அளித்து தனது பக்க நியாயத்தை வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலத்தில் பட்டலந்த கொலை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அவர் நீதிமன்றம் சென்று விசாரணைக் கூண்டில் ஏறி தனது பக்க நியாயங்களை சொல்லி, வழக்கில் குற்றமற்றவர் என்பதனை நிரூபித்தார்.

கோத்தபாய ராஜபக்ஷவிற்கும், மகிந்தவை சுற்றி இருப்பவர்களுக்கும் ஏன் தங்களது குற்றமற்ற தன்மையை நிரூபிக்க முடியாது?

கோத்தபாயவிற்கு எதிராக மிக் விமான கொடுக்கல் வாங்கல் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

நீதிமன்றம் சென்று அந்த செய்தியை வெளியிட்ட பத்திரிகைக்கு எதிராக தடை உத்தரவை கோத்தபாய பெற்றுக்கொண்டார்.

அவ்வாறே கோத்தபாய ராஜபக்ஷ செயற்பட்டார் என அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.(இ-5)

# பல கோடி ரூபாய் பெறுமதியான தங்கம், இரத்தினக்கற்கள் மாயம்

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய பாதுகாப்பு பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த பலகோடி ரூபா பெறுமதியான தங்கம், இரத்தினக்கற்கள் மற்றும் விலை உயர்ந்த ஆபரணங்கள் காணாமல் போயுள்ளன.

இது தொடர்பில் பரிசீலனை செய்யுமாறு விமானநிலைய உத்தியோகத்தர்களால் ஊழல், மோசடிகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய முன்னாள் தலைவர் கேணல் பிரசன்ன விக்ரமசூரியவின் நிர்வாக காலத்திலேயே இந்த விலை உயர்ந்த ஆபரணங்களும், தங்கமும் காணாமல் போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பெறுமதி வாய்ந்த மாணிக்கக்கல் ஒன்றை விமானப் பயணியொருவர் கைவிட்டுச் சென்ற நிலையில் விமான நிலையத்தினால் கண்டெடுக்கப்பட்டு பாதுகாப்பாக வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

விமானப் பயணிகளின் மறதியினால் மீட்கப்பட்ட பொருட்கள், சட்டரீதியற்ற முறையில் இங்கிருந்து கொண்டு சென்ற மாணிக்கம், வைரம் உட்பட தங்கமாலை, சந்தேகத்தின் பேரில் மீட்கப்பட்ட பைகளில் இருந்து பெறப்பட்ட தங்கம், மோசடிக்காரர்களினால் விமான நிலையத்தில் இருந்து கொண்டு செல்ல முடியாத தங்கம், மாணிக்கம உட்பட கோடிக்கணக்கான பொருட்களே விமான நிலைய பாதுகாப்பு பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்தன.

இந்த பாதுகாப்பு பெட்டகத்தை விமான நிலைய உயர் அதிகாரியின் தலையீட்டினால் தான் திறக்க முடியும். வேறு எவரினாலும் இதனை திறக்க முடியாது.

இந்தப் பொருட்களுக்கான உரிமையாளர்கள் முன்வராத காரணத்தினால் இவை அரச சொத்துக்களாக பாதுகாப்பு பெட்டகத்தில் சேமிக்கப்பட்டு வந்தன.

பெறுமதிவாய்ந்த மாணிக்கக்கல், முத்து மாலை, வைரம், தங்கம் ஆகியனவே இதில் இருந்தன.

கடந்த ஆட்சியின் போதும் இந்தப் பொருட்கள் காணப்பட்டதுடன் இதில் காணப்படும் பொருட்கள் தொடர்பிலான ஆவணமொன்றும் காணப்பட்டது. எனினும் இந்த ஆவணமும் தற்போது காணாமல் போயுள்ளதாக பாதுகாப்பு பிரிவு தெரிவித்தது. கடந்த காலத்தில் காணாமற் போன பொருளை மீட்பதற்காக வருகை தந்த உரிமையாளரின் பொருளை தேட முற்படும் போதே பாதுகாப்பு பெட்டகத்தில் உள்ள அனைத்தும் காணாமல் போனமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்த போதும் சிலரின் அழுத்தம் காரணமாக விசாரணைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. (இ-5)

# 37தமிழக மீனவர்களையும் விடுதலை செய்ய உத்தரவு

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக குற்றம் சாட்டப்பட்டு இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள 37 தமிழக மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

இந்தியாவின் இராமேஸ்வரத்தை சேர்ந்த மீனவர்கள் குழு ஜனாதிபதியை நேற்று முன்தினம் சந்தித்து மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக பேசினர்.

அந்தச் சந்திப்புக்கு பின் ஜனாதிபதி 37 தமிழக மீனவர்களையும் விடுதலை செய்ய உத்தரவிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக தமிழக மீனவர்கள் குழுவின் தலைவர் செசுராஜா கூறுகையில்,

இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நம்பிக்கை தெரிவித்தார்.

ஆனால் இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட மீனவர்களின் படகுகளை விடுவிப்பது பற்றி அவர் எதுவும் கூறவில்லை. மேலும் பாக் ஜலசந்தியில் நாங்கள் மீன் பிடிக்கும் போது அனுபவிக்கும் பல இன்னல்களை அவருக்கு தெரியப்படுத்தினோம்.

இதற்கு நிரந்தர தீர்வுகாண வேண்டும் என வலியுறுத்தினோம்.

அதற்கு அவர் இரண்டு நாட்டு மீனவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளுக்கு அதிகாரிகள் மற்றும் மீனவர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

மற்றொரு மீனவரான தேவதாஸ் செய்தியாளர்களிடம் பேசுகையில், பாக் ஜல சந்தியில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கும்போதே இலங்கை கடற்படையினர் எங்களை தாக்குகின்றனர். எனவே பாக் ஜலசந்தியில் மீன் பிடிக்க எங்களை அனுமதிக்க வேண்டும் என மைத்திரிபால சிறிசேனவிடம் வேண்டுகோள் முன்வைத்தோம் என்று அவர் தெரிவித்தார். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### உறக்கமும் ஓய்வும்

நேரச்சேமிப்பில் மிகச்சிறந்த முறை உங்களுடைய தூங்கும் நேரத்தைக் குறைத்துக்கொள்வதாகும். மற்றொன்று ஓய்வெடுப்பதன் மூலம்உங்களுடைய ஆற்றலை மேம்படுத்திக்கொள்வதாகும்.

ரிச்சர்டு டி ரோச்மாண்ட பிரபலமான படத்தயாரிப்பாளர். தமது படப்பிடிப்பு வேலைகளின் இடையே கிடைக்கிற நேரத்தில் ஒரு குட்டித் தூக்கம் போட்டு விடுவார் இவர். 3 மணிநேரம் தூங்குவார். விழித்தெழுந்ததும் புதிய தெம்புடன் வேலையில் மூழ்குவார். 3,4 மணிநேரம் கடுமையாக வேலை பார்ப்பார். மீண்டும் ஒரு தூக்கம் போடுவார். உறக்கம் அவருடைய டென்ஷனை நீக்கியது. அவருக்குச் சுறுசுறுப்புத் தந்தது. வழக்கமான 8 மணிநேரத் தூக்கத்தை ஐந்து மணி நேரமாகக் குறைத்துக்கொண்டார் இவர்.

அயர்ந்து உறங்கமுடிந்தவருக்கு 8 மணிநேரத் தூக்கம் அவசியமில்லை. அலாரம் கடிகாரத்தின் தூண்டுதல் இல்லாமல் சுறுசுறுப்பாக எழுந்து கொள்கிறவர் நல்லவிதமாக ஓய்வுபெற்றார் என்றுதான் அர்த்தம். படுக்கையை விட்டு எழுவதற்கே ஒருவருக்குச் சிரமமாக இருக்குமெனில் அவர் உபாதையில் இருக்கிறார். அவருடைய உடம்பில் சக்தி குறைந்துள்ளது என்றுதான் கொள்ளவேண்டும்.

நமது உறக்க நேரத்தின் முதல் இரண்டு மணி நேர உறக்கம்தான் ஆழ்ந்த உறக்கமாக இருக்கும். அது நமது தசைகளை இளைப்பாற்றும். இரத்த அழுத்தத்தைக் குறைக்கும்.

படுக்கைக்குப்போகுமுன் சுடுநீரில் குளித்தால் உறக்கம் எளிதாக வரும். சுடுநீர்க்குளியல் இரத்த ஓட்டத்தை இயல்பாக்கும். சாந்தமுறச் செய்யும். குளிக்கும்போது சருமத்தை தேய்ப்பதற்குப் பதில் இலேசாகத் தட்டலாம்.

படுக்கையில் சௌகர்யமாக நீட்டிப்படுத்து உடம்பின் ஒவ்வொரு தசையையும் (கை,கால்,உடம்பின் பிரதான பகுதி, கழுத்துத் தசைகள்) இளைப்பாற்றலாம். உறங்குகிற இடத்தில் வெளிச்சம் இருக்கக் கூடாது. அந்த இடம் நிசப்தமாக இருக்கவேண்டும்.

#### உறக்கத்தின் தரம்

நீங்கள் எத்தனை நேரம் படுக்கையில் இருந்தீர்கள் என்பது முக்கியமல்ல. உங்களுடைய உறக்கத்தின் தரம்தான் முக்கியம். இதற்கு உடற்பயிற்சி செய்வது உதவியாக இருக்கும்.

கோப்பி போன்ற ஊக்க பானங்களை பகலில் குடிக்கக்கூடாது. கோப்பி தேநீருக்குப் பதிலாக இதர நச்சுத்தன்மையற்ற பானங்களைப் பருகலாம். சிலருக்கு உறங்கும்போது வைன் அல்லது பியர் குடிக்கிற பழக்கம் இருக்கும். கண்டிப்பாக மதுபான வகைகளைத் தவிர்த்து விடவும். அவை உறக்கமின்மை நோயை (Insomnia) ஏற்படுத்துகிற அபாயம் உண்டு. சூடான பால் அருந்துவது நல்லது.

மக்களின் உறக்கநேரம் ஆளுக்காள் வேறுபடும். தோமஸ் அல்வா எடிசன் இரவில் 4 மணிநேரம் மட்டுமே உறங்குவாராம். ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் பகலில் பாதி நேரம் உறங்கிவிடுவாராம்.

#### நல்ல படுக்கை

நீங்கள் உறங்கும்போது படுக்கையானது உங்களுடைய உடம்புக்கு எதிரான அழுத்தத்தைத் ஏற்படுத்தக்கூடாது. போம் மெத்தை தலையணையை உபயோகிக்கலாம். உங்களுடைய படுக்கை சுமார் 39 அங்குல அகலம் (நன்கு புரண்டு படுக்கிற அளவு) இருக்க வேண்டும். ரொம்பவும் மென்மையாக உங்களுடைய உடம்பே புதைந்து போகிற மாதிரி இருக்கக்கூடாது. ஆக நல்ல படுக்கை நல்ல உறக்கத்தைக் கொடுக்கும். அதன்மூலம் ஒரு அரைமணிநேரம் முன்னதாகவே படுக்கையில் இருந்து எழுந்து கொள்ளமுடியும்.

#### சில மணிநேர உறக்கம்

ஒரே மாதிரி வேலை செய்கிறவர்களுக்குள்ளும் உறக்கநேரத்தில் வேறுபாடிருக்கும். பலர் தங்களுக்குத் தேவைப்படும் அளவை விடக் கூடுதல் நேரம் உறங்குகிறார்கள். உங்களுக்கு எவ்வளவு நேர உறக்கம் தேவைப்படும் என்பது உங்களுடைய உடல்வாகு வேலை மற்றும் மனச்சார்பைப் (Inclination) பொறுத்தது.

எல்லோருக்கும் 7 இல் இருந்து 9 மணிநேரம் உறங்க வேண்டியிருக்கும். வரலாற்றில் இடம்பெற்ற ஆசாமிகளில் அநேகம் பேர் 5 மணிநேரத்திற்கு மேல் உறங்கியதாகத் தெரியவில்லை.

**தேவைக்கு மேல் உறங்குவது வீண். அளவுக்கு மீறித் தூங்குவதால் அழகான வாழ்க்கையில் கணிசமான அளவு தொலைந்து போகிறது.**

சிலருக்குத் தூங்கிக்கொண்டே இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. 24 மணிநேரத்தில் 8 மணிநேரம்தான் உறங்கவேண்டுமென்று எவ்வித வரையறையும்கிடையாது. அது அவரவர் பழக்கத்தைப் பொறுத்தது. அதை மாற்றிக்கொள்ள முடியும் எப்படி?

நீங்கள் வழக்கமாக 9 மணிநேரம் உறங்குவதாக வைத்துக் கொள்வோம். அதை 8 மணியாக்கிக் கொள்ளலாம். அது திருப்தியாக அமையாவிடில் ஒரு பத்து நாட்கள் பயிற்சியினால் உங்களுடைய வழக்கத்தை மாற்றிக்கொண்டு விடலாம். உங்களுடைய உறங்கும் முறை எதுவாயினும் அரை மணிநேரத் தூக்கத்தைக் குறைக்க தாமதமாகப் படுக்கைக்குச் செல்லவேண்டுமென்பதில்லை.

எப்போதும் படுக்கை விட்டு எழுகிற நேரத்துக்கு கால்மணி முன்னதாகவே அலாரத்தை செட் பண்ணிக்கொள்ளுங்கள். அப்படி மிச்சம் பிடிக்கிற நேரத்தை நீங்கள் விரும்பிய ஒன்றைச் செய்வதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**சராசரியாக ஒருவருக்கு 6 அல்லது 7 மணி நேரத்தூக்கம் போதும் அதற்கு மேல் தேவைப்படாது. அதிகம் தூங்குவது தேவையினால் அல்ல. வழக்கத்தினால்தான்.**

இரவு நன்கு தூங்கிவிட்டால் காலையில் குறைவான நேரத்தில் கூடுதலான காரியங்களைப் பார்க்கமுடியும்.

ஜெஃப்ரி ஆச்சர் பெரிய எழுத்தாளர். அவருடைய நூல்கள் விற்பனையில் உச்சக்கட்டத்தை எட்டியவை. அவர் தினமும் காலை 6 மணிக்கே எழுந்து கொண்டு விடுவார். அந்த நேரத்தில் பேனா, கடிகாரம், பென்சில், இறப்பர் எல்லாம் அவற்றுக்கான இடத்தில் தயாராக வைக்கப்பட்டிருக்கும். வேலை செய்யாமல் இருப்பதற்கு ஏதாவது சமாதானங்கள் சொல்லிக் கொண்டிருப்பது அவருக்குப் பிடிக்காத விடயம். சாக்குப்போக்குகள் தாம் நம்முடைய முன்னேற்றத்திற்கு சரியான எதிரி என்பார் அவர்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2015~15.06.2015



**தொழில் தொடர்பிற்கு நண்பர்கள் உதவுவர்! சிந்தனையைச் செயலாக்குவதில் தீவிரம் காட்டும் மிதுன இராசிநேயர்களே!**

வைகாசி மாத கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே உங்கள் ராசி நாதன் புதன் விரயஸ்தானத்தில் வீற்றிருக்க, விரயாதிபதி சுக்ரனோ உங்கள் ராசியில் வீற்றிருக்க, பரிவர்த்தனை யோகத்தோடு மாதம் தொடங்குகிறது.

யோகம் நல்ல யோகம்தான், என்றாலும் பரிவர்த்தனை பெற்றிருப்பது விரயாதிபதி அல்லவா? எனவே, குடும்பச் சுமை கூடுதலாக இருக்கும். கொடுக்கல், வாங்கல்களில் விழிப்புணர்ச்சியோடு இருந்தால் விரயங்களிலிருந்து தப்பிக்க இயலும். குடும்ப உறுப்பினர்களை திருப்திப்படுத்த ஏதேனும் ஒரு தொகையைச் செலவிட வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

விலை உயர்ந்த மின்சாதனப் பொருட்கள் மற்றும் தங்கம், வெள்ளி போன்றவற்றை வாங்குவதற்காக நீங்கள் செலவு செய்வதை தவிர்த்தால் வீண் விரயங்களிலிருந்து விடுபட இயலும். தனாதிபதியான சந்திரனைக் குரு பார்ப்பது யோகம்தான். வரவு திருப்திகரமாகவே இருக்கும். என்றாலும் மாதத் தொடக்கத்தில் திடீர் மாற்றங்கள் பலவும் சந்திக்க நேரிடும்.

குறிப்பாக இம்மாதத்தில்தான் சனி வக்ர இயக்கத்தில் புத்திர ஸ்தானமான துலாம்ராசிக்கு வருகிறார். இதன் விளைவாக பிள்ளைகளின் முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். அவர்களின் கல்விக்காகவும், கடல் தாண்டி சென்று படிக்கும் முயற்சிக்காகவும் நல்ல வாய்ப்புகள் வந்து சேரும். இருப்பினும் சனிக்கிழமை தோறும் சனிபகவானை வழிபட்டு காகத்திற்கு சோறு வைத்து, ஆதியந்தப் பிரபு வழிபாட்டை மேற்கொள்வதன் மூலமும் முன்னேற்றத் தடைகள் அகலும்.

**புதனின் வக்ர இயக்கம்!**

பொதுவாக உங்கள் ராசிநாதன் புதன் 4 ஆம் இடத்திற்கும் அதிபதியாவார். கேந்திராதிபத்ய கிரகம் என்பதால் வக்ர இயக்கத்தில் இருப்பது நன்மைதான். இடம், பூமி வாங்குவதில் இருந்த தடைகள் அகலும். வாகன யோகம் உண்டு. பயணங்களால் பலன் கிடைக்கும். அந்நிய தேசத்திலிருந்து வரும் தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும். வீடு கட்ட வேண்டுமென்ற ஆவல் பூர்த்தியாகும். ஜூன் 6 ஆம் திகதி இடப ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறும். பெற்றோர்களின் மணி விழாக்கள், பிள்ளைகளின் மண விழாக்கள் ஆகியவை நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். பத்திரப் பதிவிலிருந்த தடைகள் அகலும்.

**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

மே 30 ஆம் திகதி கடக ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக பொருளாதார வசதி பெருகும். உறவினர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்தபடியே சம்பள உயர்வு கிடைக்கும். வீடு மாற்றம், இடமாற்றம் செய்வதில் மும்முரம் காட்டுவீர்கள்.

**வக்ர சனியின் ஆதிக்கக் காலம்!**

இம்மாதம் சனி வக்ர இயக்கத்தில் துலாம் ராசிக்குச் செல்கிறார். 6 இல் சஞ்சரித்து வந்த சனி மிகுந்த யோகத்தை கொடுத்திருக்கலாம். அவர் மீண்டும் 5 ஆம் இடத்திற்கு வரும் பொழுது நன்மையைச் செய்வாரா? என்று நீங்கள் நினைக்கலாம். உங்கள் ராசிக்கு 9 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் சனி விளங்குகிறார். அவர் 5 இல் சஞ்சரிக்கும் பொழுது பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். பஞ்சாயத்துகள் நல்ல முடிவிற்கு வரும். திருப்பணி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.




## தொழில் தொடர்பிற்கு நண்பர்கள் உதவுவர்


**மிதுன செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜூன் 15 ஆம் திகதி உங்கள் ராசியிலேயே செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 6, 11 இற்கு அதிபதியாக செவ்வாய் விளங்குவதால் உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு, எதிர்பார்த்தபடியே இலாகா மாற்றம் ஆகியவை கிடைக்கும். இளைய சகோதரர்களின் இணக்கம் ஏற்படும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். இம்மாதம் அனுமன் வழிபாடு செய்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் வளர்ச்சி கூடுமென்றே சொல்லலாம். வருமானம் திருப்திகரமாக இருக்கும். மாதத் தொடக்கத்தில் உடன்பிறப்புகளால் விரயம் உண்டு. வீடு மாற்றங்கள் விரும்பும் விதத்தில் அமையும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். அவர்களின் கல்வி வளர்ச்சியில் இருந்த தடை அகலும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். குடும்ப உறுப்பினர்களின் சம்மதத்தோடு உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கும் வாய்ப்பு உருவாகலாம். சங்கடஹர சதுர்த்தியன்று ஆனைமுகப்பெருமானை வழிபடுவது நல்லது.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**அச்சமில்லாத வாழ்வு தரும் உச்ச குருவின் பார்வை சந்தேக குணத்திற்கு சொந்தக்காரர்களாக விளங்கும் கடக இராசி நேயர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசி நாதன் சந்திரனை உச்சம் பெற்ற குரு பார்க்கிறது. எனவே, குரு சந்திர யோகத்தோடு தொடங்கும் வைகாசி மாதம் பெருவாரியான நற்பலன்களை வழங்குமென்றே சொல்லலாம்.

பெரிய மனிதர்களின் சந்திப்பாலும், பிரபலமானவர்களின் ஒத்துழைப்பாலும் அரிய பல காரியங்களைச் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள். அங்காரகனும், புதனும், சூரியனும் லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பது ஒருவழிக்கு யோகம்தான். பிள்ளைகளால் நன்மை ஏற்படும். பொது நலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்பகள் கை கூடிவரும். அரசுவழிச் சலுகைகள் எதிர்பார்த்தபடி கிடைத்து ஆனந்தம் அடைவீர்கள்.

பாதியில் நின்றுபோன கட்டடப் பணிகள் தொடர்ந்து முயற்சி கை கூடும். பணியில் ஏற்பட்ட தொய்வு அகலும். அஷ்டமாதிபதி சனியும் வக்ர இயக்கத்தில் இருப்பதால் ஆரோக்கி யத் தொல்லை மாறும். இழப்புகளை ஈடு செய்ய புதிய வாய்ப்புகள் வந்து சேரும். அதேநேரத்தில் இம்மாதம் துலாம் ராசிக்கே வக்ர இயக்கத்தில் சனி வரப் போகிறார். எனவே மீண்டும் அர்த்தாஷ்டமச் சனி தொடங்குகிறது.

அதன் விளைவாக முரண்பாடான சில பலன்களும் நடக்கும். முழு நேரமும் சம்பாதித்தாலும் பணப் பற்றாக்குறை ஏற்படத்தான் செய்யும். வாகனப் பழுதுகளும் வளர்ச்சியில் தளர்ச்சியும் இயல்பாகவே வந்து சேரும். இதுபோன்ற காலங்களில் சனிபகவான் வழிபாட்டை மேற்கொள்வதோடு, சனி பகவானின் சிறப்பு ஸ்தலங்களுக்கும் சென்று வருவது நல்லது.

**புதனின் வக்ர இயக்கம்!**

உங்கள் ராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது நற்பலன்கள் உங்களை நாடிவரும். இடமாற்றத்தால் இனிமை காண்பீர்கள். இல்லத்தில் சுபகாரியப் பேச்சுகள் கைகூடி வரும். நல்ல மனிதர்களின் சந்திப்போடு உங்கள் நம்பிக்கை நடைபெறும். அந்த நிகழ்வு மே 24 முதல் நடைபெற உள்ளது. அதே நேரத்தில் ஜூன் 6 ஆம் திகதி முதல் இடபத்தில் சஞ்சரிக்கப் போகி றார். விலகிச் சென்ற சொந் தங்கள் விரும்பி வந்து சேரும். மாமன், மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும்.

சேமிப்புகள் கரைந்தாலும் புதிய யுக்திகளைக் கையாண்டு வரவுகளைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

கடக ராசியில் சுக்ரன் மே 30 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகிறார். அசுர குருவும், தேவ குருவும் இணையும் நேரம் ஒரு அற்புதமான நேரமாகும். இதன் விளைவாக திட்டமிடாது செய்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். தெய்வீக சிந்தனை மேலோங்கும். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.

**வக்ரச் சனி என்ன செய்யும்?**

ஜூன் 12 ஆம் திகதி முதல் மீண்டும் அர்த்தாஷ்டமச் சனி தொடங்குகிறது. சுமார் 3 மாத காலங்கள் வக்ர இயக்கத்தில் துலாம் ராசியில் சஞ்சரிப்பதால் திடீரென ஊர் மாற்றம், இடமாற்றம், உத்தியோக மாற்றம் அனைத்தும் நிகழக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது.




## அச்சமில்லா வாழ்வு தரும் உச்ச குருவின் பார்வை

உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்தும் சூழ்நிலை உருவாகும். வாகன மாற்றம் செய்ய முன் வருவீர்கள்.

**மிதுனச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜூன் 15 ஆம் திகதி முதல் மிதுன ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக பூர்வீக சொத்துக்களில் பாகப்பிரி வினைகள் சுமுகமாக முடியும். சகோதரர்களால் சகாயம் உண்டு. வீடு கட்ட அல்லது வாங்கும் முயற்சியில் அனுகூலம் கிடைக்கும். இம்மாதம் வியாழன் தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் குரு பலம் பெற்றிருப்பதால் குழப்பங்கள் தீரும். குடும்பத்தில் நீண்ட நாளாக நடைபெறாதிருந்த சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் பெருகும். பிரிந்தவர்கள் இணையவும், பிரச்சினை களிலிருந்து விடுபடும் வாய்ப்பும் குருவின் பார்வைக்கு உண்டு. எனவே வியாழன் தோறும் குருவை வழிபட்டு குடும்ப முன்னேற்றத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர நியமனம் வழங்கக்கோரி தொண்டராசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

## முதலமைச்சரின் அலுவலகம் முற்றுகையிடப்பட்டது



(யாழ்ப்பாணம்)

**கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டராசிரியர்கள் தங்களுக்கான நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரி, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். நேற்றுக்காலை 9 மணியளவில் இவ்வாறு அவர்கள் தமது ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.**

யாழிலுள்ள முதலமைச்சரின் அலுவலகத்தை நேற்றைய தினம் முற்றுகையிட்ட அவர்கள் தொடர்ச்சியாக இரண்டு மணிநேரத்திற்கும் அதிகமாக அலுவலகத்தின் முன்புறத்தில் கூடி நின்று தமக்கான நியமனங்களை வழங்குமாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் தொண்டராசிரியர்களாக பணியாற்றும் சுமார் 150 ஆசிரியர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். தங்களில் 43 பேர், 10 வருடங்களுக்கு மேலாக தொண்டராசிரியர்களாக கடமையாற்றுவதுடன், மிகுதிப் பேர், 5 தொடக்கம் 10 வருடங்கள் தொண்டராசிரியர்களாக கடமையாற்றுகின்றனர்.

நாட்டில் யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் கஷ்டப் பிரதேசங்களில் யாரும் முன் வராத நிலையில் நாங்கள் வன்னி முதற்கொண்டு அனைத்து இடங்களிலும் மிக சொற்ப ஊதியத்திலும் ஊதியம் இல்லாமலும் எமது மாணவர்களின் நலன் கருதி கடமையாற்றி இருந்தோம். எமக்கு தொண்ட ராசிரியர்களாக நியமனம் வழங்கப்பட்ட போது நிரந்தர நியமனம் பின்னர் வழங்கப்படும் எனவும் கூறியிருந்தனர்.

ஆனால் இதுவரை பல வருடங்களாகியும் எமக்கான நியமனம் வழங்கப்படவில்லை எம்மில் பலருக்கு திருமணம் ஆகியுள்ள நிலையில் நிரந்தர நியமனம் வழங்கப்படாத காரணத்தினால் பல கஷ்டங்களையும் எதிர் நோக்கி வருகின்றோம். என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டிருந்தவர்கள் தெரிவித்தனர். மேலும் கிளிநொச்சியிலுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு தங்களை நியமனம் செய்யுமாறு கோரி அவர்கள் தங்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் தொண்டராசிரியர்களால் வடக்கு மாகாண முதல் அமைச்சர் சி.வி விக்னேஸ்வரனுக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. இதனையடுத்து வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட கல்வி அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடிய முதல் அமைச்சர் இதுதொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்ததனை தொடர்ந்து ஆர்ப் பாட்டம் கைவிடப்பட்டது. (இ-4)

# மத்தியவங்கி ஆளுநருக்கு எதிரான மனு நிராகரிப்பு


மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக மூன்று நிபுணர்கள் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்திருந்தனர்.

பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் உள்ளிட்ட மூன்று உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழுவினர் நேற்று இந்த மனுவை நிராகரித்துள்ளனர். (இ-5)

**அ.தி.மு.க.பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டதையடுத்து யாழ்.கல்வி யங்காடு சந்திப்பகுதியில்பட்டாசுகொளுத்திகொண்டாடப்பட்டுள்ளது.**

**இ.சுந்த ரலிங்கம் என்பவரின் ஏற்பாட்டில் எம்.ஜி.ஆர் இன் சிலைக்கு மாலை அணி வித்து பின்னர் வெடிகள் கொளு த்தி ஜெயலலிதாவின் விடுதலை கொண் டாட்டம் இடம்பெற்றுள்ளது.**




# நீர்வேலியில் இடம்பெற்ற திருநாவுக்கரசர் திருநாள்

(சாவகச்சேரி)

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் முன்னெடுத்த திருநாவுக்கரசு நாயனார் திருநாள் நிகழ்வுகளும் ஸ்ரீ கணேச அறநெறிப் பாடசாலையின் 14 ஆவது ஆண்டு பரிசில், நாளும் கடந்த செவ் வாய்க்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கொட.ஆலய கோபுர மண்டபத்தில் இடம் பெற்றன.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில். நீர்வை மணி கு.தியாகராசக் குருக்கள் ஆசியுரையையும் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் மா.அனந்த லட்சுமி வாழ்த்துரையையும் வழங்கினர்.

"மின்னம்பலத்தில் நாவுக்கரசர்' என்ற பொருளில் மறவன்புலவு க.சச்சிதானந்தத்தின் சிறப்புரை இடம்பெற்றது. தொடர்ந்து பன்முக நோக்கில் நாவுக்கரசர் என்ற பொருளில் கருத்தரங்கு நடைபெற்றது.




இதில் பக்தி நோக்கில் நாவுக்கரசர் என்ற பொரு ளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசனும் இலக்கிய நோக்கில் நாவுக்கரசர் என்ற பொருளில் விரிவுரையாளர் கு.பாலஷண்முகனும் பண்பாட்டு நோக்கில் நாவுக்கரசர் என்ற பொருளில் கலாநிதி மனோன்மணி சண்முகதாசும் கருத்துரைகளை வழங்கினர்

நாவுக்கரசரின் 'திருத்தாண்டகம்' தேர்ந்தெடுக்கப்பட்ட பாடற்றொகுதி நூல் வெளியீடு செய்யப்பட்டது. இதன் வெளியீட்டுரையை நூலின் பதிப்பாசிரியரும் அரசகேசரிப் பிள்ளையார் ஆலயப் பிரதம குருவுமாகிய சா.சோமதேவக் குருக்கள் ஆற்றினார்.

நூலின் முதற்பிரதியை பேராசிரியர் அ.சண்முகதாஸ் வெளியிட்டு வைக்க நீர்வேலி கந்த சுவாமி கோவில் பிரதம குரு இரா.சுவாமிநாதக் குருக்களும் சிறப்புப் பிரதியை தொழிலதிபர் பொ.உதயனும் பெற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து அறநெறிப் பாடசாலைப் பரிசளிப்பும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன நிகழ்வுகளை தியாக.மயூரகிரிக் குருக்கள் முன்னிலைப்படுத்தினார்.

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவிலில் திருநாவுக்கரசு நாயனார் பெயரால் அறப்பணிகள் பல முன்னெடுக்கப்பட்டு வருகி ன்றன என்பதுவும் இங்கு ள்ள மடம், திருக்குளம், கூபதீர்த்தம் என்பன திரு நாவுக்கரசரின் பெயரைத் தாங்கியுள்ளன என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-3-29)

## வடக்குமாகாண கல்வியமைச்சினால் ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு



கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் உள்ளகப் பயிற்சியை முடித்து, இறுதித் தேர்வில் சித்தியடைந்த ஆசிரியர்களை வடமாகாணக் கல்வியமைச்சினால் நிரந்தர ஆசிரிய சேவைக்கு (3 -I) உள் வாங்கும் நிகழ்வும், தேசிய கல்வியியற் கல்லூரி படிப்பை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வும், தற்காலிக கல்விசாரா ஊழியர்கள் 56 பேருக்கான நிரந்தர நியமனக்கடிதம் வழங்கும் நிகழ்வும் அண்மையில் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்றது.

வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் எஸ். இரவீந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமாகாண அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம் பிரதம விருந்தினராகவும், வடமாகாண கல்வியமைச்சர் த.குருகுலராசா சிறப்பு விருந்தினராகவும், வடமாகாண சபை உறுப்பினர்களும், கல்விக்குழு உறுப்பினர்களுமான இ.இந்திரராசா, பா.கஜதீபன், இ.ஆனோல்ட் மற்றும் அ.பரஞ்சோதி, வே.சிவயோகன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டதுடன், வடமாகாண கல்விப்பணிப்பாளர் உதயகுமார் உட்பட கல்வியமைச்சின் உயரதிகாரிகள், நியமனம் பெற்ற ஆசிரியர்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இராணுவ வீரர்களின் குடும்பங்களை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாரஹேன்பிட்டியவிலுள்ள அபயராம விகாரையில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்து கலந்துரையாடினார்.

# பயங்கரவாதிகள் துப்பாக்கிச்சூடு பாகிஸ்தானில் 41பேர் படுகொலை

(கராச்சி)

**பாகிஸ்தானின் கராச்சி நகரில் ஷியா பிரிவு மக்களை குறிவைத்து பேருந்து மீது நேற்றுக்காலை பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 41 பேர் கொல்லப்பட்ட அதேவேளை பலர் படுகாயமடைந்திருக்கும் நிலையில் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.**

பாகிஸ்தானின் கர்ாச்சி நகரில் சபூரா சவுக் அருகே சென்று கொண்டிருந்த பேருந்து மீது இரு சக்கர வாகனங்களில் வந்து இறங்கிய 8 பயங்கரவாதிகள் சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். பின்னர் பேருந்தினுள் நுழைந்த அவர்கள் கண்மூடித்தனமாக பொதுமக்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

இதில், அப்பாவி பொதுமக்கள் 41 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர். பலர் படுகாயம் அடைந்திருக்கின்றனர்.

பேருந்தில் 60இற்கும் மேற்பட்டோர் இருந்ததாக சிந்து மாகாண பொலிஸ் அதிகாரி குலாம் ஹைதர் ஜமாலி தெரிவித்தார். துப்பாக்கி ஏந்திய 8 பயங்கரவாதிகள் கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கராச்சி நகரின் பொலிஸ் கண்காணிப்பாளர் நஜீப் கானும், பயங்கர வாதிகள் துப்பாக்கிச் சூட்டில்



41 பேர் கொல்லப்பட்டதாக உறுதி செய்துள்ளார். தாக்குதல் நடந்த பகுதி ஷியா பிரிவு மக்கள்அதிகம்வாழும் இடமாகும். ஷியா பிரிவின் இஸ்மாயிலி சமூகத்தைச் சேர்ந்தவர்களை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடந்துள்ளதாக கருதப்படுகிறது.



சம்பவ பகுதியை பாகிஸ்தான் பாதுகாப்பு படையினர் சுற்றி வளைத்து பயங்கரவாதிகள் மீது பதில் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த இயக்கமும் பொறுப்பேற்கவில்லை.

இதுபோன்ற தாக்குதல்களில் பாகிஸ்தான் தலிபான் மற்றும் லஷ்கர்-இ-ஜாங்வி வழக்கமாக ஈடுபடுவார்கள் என்பதால் அவர்கள் மீது சந்தேகம் எழுந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இணையத்தள கட்டுரையாளர் வங்கதேஷில் வெட்டிக்கொலை

பங்களாதேஷத்தில் இணையத்தளம் கட்டுரைகள் மூலம் மதச்சார்பற்ற கருத்துகளைப் பரப்பி வந்த ஆனந்த பிஜோய் தாஸ் (33) என்பவரை மர்ம நபர்கள் நேற்று முன்தினம் அரிவாளால் வெட்டி படுகொலை செய்துள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து அந்த நாட்டில் மதவாதிகளால் படுகொலை செய்யப்படும் மூன்றாவது இணையத்தளக் கட்டுரையாளர் ஆனந்த பிஜோய் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்ததாவது:

சில்ஹெட் நகரிலுள்ள தனது இல்லத்திலிருந்து அலுவலகம் நோக்கிப் புறப்பட்ட ஆனந்த பிஜோயை, முகமூடி அணிந்த சிலர் அரிவாளால் வெட்டினர். அவருக்குப் பின்புறத்திலிருந்து தாக்கிய அவர்கள், தலையில் பலமாக வெட்டினர். சம்பவ இடத்திலேயே பிஜோய் உடனடியாக உயிரிழந்தார் என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

பங்களாதேஷத்தில் பிறந்த அமெரிக்கரான அவிஜித் ராய் (45) என்ற இணையத்தளக் கட்டுரையாளரை கட ந்த பெப்ரவரி மாதம் வன்முறைக் கும்பல் ஒன்று அரிவாளால் வெட்ணடிக் கொன்றது.

அந்தத் தாக்குதலுக்கு அல் கொய் தாவின் இந்தியத் துணைக் கண்டத்துக்கான பிரிவு (ஏ.க்யூ. ஐ.எஸ்.) அண்மையில் பொறுப்பேற்றது.

அந்தப் படுகொலையைத் தொடர்ந்து, ஒயாசிகுர் ரஹ்மான் என்ற இணையத்தளக் கட்டுரையாளரையும் மதவாதிகள் சிலர் வெட்டிக் கொன்றனர். இந்த நிலையில், மூன்றாவதாக ஆனந்த பிஜோய் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தக் கொலைக்கும் ஏ.க்யூ. ஐ.எஸ். பொறுப்பேற்றுள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5)

# மின் பிறப்பாக்கியை கொண்டு சென்றோர் கைது

(கொழும்பு)

நேற்று புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கூட்டத்துக்கு வாடகைக்கு பெற்று கொள்ளப்பட்ட மின்பிறப்பாக்கியை ஏற் றிச் சென்ற இருவரை கைது செய் துள்ளதாக பொலிஸார் தெரிவி த்தனர்.

அந்த மின்பிறப்பாக்கியை ஏற்றிச் சென்ற உழவு இயந்திரத்தை கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மின்பிறப்பாக்கியை ஏற்றிச்செல்வதற்கு வல்லாவிட பிரதேச சபைக்கு சொந்தமான உழவு இயந்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்க சொத்துக்களை முறைகேடாக பயன்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் உழவு இயந்திரத்தை செலுத்திச்சென்ற சாரதியும் உதவி யாளருமே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் மத்துகம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

# உள்ளூராட்சிசபைகள் ஆணையாளரின் கீழ் கொண்டு வருவதை அனுமதிக்க முடியாது

பதவிக்காலம் நிறைவு பெறும் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களை ஆணையாளர் ஒருவரின் கீழ் கொண்டுவருவதை அனுமதிக்க முடியாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத்தை நீடித்து பின் தேர்தல் நடத்த வேண்டும் என அவர் தெரிவித்தார்.

நாரஹென்பிட்டி அபயராம விகாரையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வில் உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எவ்வித தவறும் செய்யாத முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களை பொய்க் குற்றச்சாட்டு சுமத்தி சிறைக்கு அனுப்ப அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-5)

# மண்மேடு சரிந்து விழுந்ததில் குழந்தை உட்பட இருவர் பலி!

பசறை, பிபிலேகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் பெண் ஒருவரும் 8 மாத குழந்தையும் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு பெய்த கடும் மழைகாரணமாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் உயிரிழந்த குழந்தையின் தாய் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை இன்னும் சில தினங்களுக்கு நாட்டின் பல பாகங்களில் இடியுடன் கூடிய கடும் மழை பெய்யக்கூடும் என வளி மண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு



**சுப்பிரமணியம் தியாகராசா**

(ஓய்வு பெற்ற அதிபர்)

நட்டாங்கண்டல் மாங்குளத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தியாகராசா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நட்டாங்கண்டல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**திருமதி சின்னப்பிள்ளை நவரட்ணம்**

கொழும்புத் துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பிள்ளை நவரட்ணம் கடந்த 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை மு.ப.10மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் துண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**சின்னக்குட்டி மகாதேவன்**

மாத்தளை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி மகாதேவன் கடந்த 11ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கீரிமலை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.



**நாகலிங்கம் சிவசுப்பிரமணியம்**

(இளைப்பாறிய அஞ்சல் அலுவலகஊழியர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிவசுப்பிரமணியம் கடந்த 11 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வட்டக்கச்சி மயானத்தில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தைச்சேர்ந்த ஐந்து பேர் கர்நாடகாவில் வெட்டிக்கொலை!

(தர்மபுரி)


கர்நாடகாவில் தமிழகத்தைச் சேர்ந்த 2 பெண், ஒரு குழந்தை உட்பட ஐவர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியு ள்ளது.

தர்மபுரி மாவட்டம், இண்டூர் மற்றும் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அந்தியூர பகுதியை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட கூலித் தொழிலாளர்கள், கர்நாடக மாநிலம், சாம்ராஜ் நகர் மாவட்டம், கொள்ளேகால் அருகேயுள்ள ஹரள்ளி கிராமத்தில் தங்கியருந்து, கரும்பு வெட்டும் வேலையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று இந்த தொழிலாளர்கள் அனைவரும் தங்களது வேலையை முடித்து விட்டு, இரவு 10 மணியளவில் மது அருந்தியதாகக் கூறப்படுகிறது. அப்போது அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டிருக்கிறது. இதைத்தொடர்ந்து, கரும்பு வெட்டும் அரிவாளால் மாறிமாறி வெட்டியிருக்கின்றனர். இதில், சத்தியமங்கலம் ராஜேந்திரன் (38), அவரது மனைவி ராஜம்மாள் (28), ஈரோடு மாவட்டம் அந்தியூரை சேர்ந்த காசி (35), அவரது மனைவி சிவம்மாள் (32), அவர்களது குழந்தை ரோஜா (5) ஆகியோர் பலியானார்கள்.

மேலும், 15க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள பலத்த காயமடைந்ததாகவும், அவர்கள் தங்கியிருநது தப்பித்து விட்டதாகவும் கூறப்படுகிறது. அவர்கள் அங்குள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெறறு வருகிறார்களா? அல்லது தங்களது சொந்த ஊருக்கு திரும்பி விட்டனரா என்பது குறித்து தெரியவில்லை.

இதுகுறித்து கொள்ளேகால் பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். தொழிலாளர்களுக்குள் ஏற்பட்ட தகராறில் 5 பேர் கொலை செய்யப்பட்ட சம்பவம் அப்குதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)




# 'ஜெ' வழக்குத் தீர்ப்பால் நீதியே தலைகுனிந்தது

## விஜயகாந்த் கூறுகிறார்

(சென்னை)

**ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கில் கர்நாடக உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பால், நீதியே தலை குனிந்து நிற்பது போல் தெரிகிறது என தே.மு.தி.க.தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.**

தீர்ப்புக் குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழக மக்கள் மட்டுமல்லாது இந்நியாவே எதிர்பார்த்திருந்த ஜெயலலிதாவின் சொத்து குவிப்பு வழககில், உலகமே எதிர்பாராத ஒரு தீர்ப்பை கர்நாடக உயர் நீதிமன்றம் அளித்திருப்பது அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் தருகிறது.

பொது வாழ்வில் லஞ்சம்,. ஊழல் மூலம் காலணா காசு கூட சம்பாதிக்காமல் பொதுமக்களுக்காக சேவை செய்யவேண்டும் .அதுதான் பொது வாழ்க்கை என்ற பாடத்தை கர்நாடக சிறப்பு நீதிமன்ற நீதிபதி மைக்கேல் டி குன்ஹா தனது தீர்ப்பின் மூலம் உருவாக்கினார். ஆனால் அதே வழக்கில் தற்பொழுது வந்துள்ள தீர்ப்பு நேரெதிர் சிந்தனையை மக்கள் மனதில் உருவாக்கும் வகையில் அமைந்திருக்கிறது.

ஒரு ஊழல் வழக்கில் வருமானத்திற்கு அதிகமாக சேர்க்கப்பட்ட ஒரு ரூபாயும் ஒன்றுதான், ஒரு கோடியும் ஒன்று தான், இரண்டுமே ஒரே தண்டனைக்குரிய குற்றம் தான். ஆனால் இதற்கு முனனால் ஒரு வழக்கில் தனி நபர் ஒருவர் பத்து முதல் இருபது சதவிகிதம் வரை தனது வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்க்க அனுமதி அளிக்கப்பட்டதாக மேற்கோள்காட்டி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் இதுபோன்ற வேறுபல வழக்குகளில் இதே குற்றச்சாட்டிற்கு பல்வேறு தண்டனைகள் வழங்கப் பட்டுள்ளதை கருத்தில் கொள்ளாதது மக்கள் மனதில் மிகப்பெரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தனி மனிதர் மீதான வழக்கை, பொது வாழ்க்கையில் முதலமைச்சர் என்ற பெரிய பதவிவகிக்கும் ஒருவருக்கு பொருத்திப் பார்ப்பது நியாயம்தானா? என்ற கேள்வி அரசியலில் தூய்மையை விரும்பும் எல்லோருடைய மனதிலும்எழுகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(இ-5)

பாரதச் செய்தி

# நீதிதேவன் மயக்கமா

## வைகோ அறிக்கை


(டில்லி)

உண்மைக்கும் நீதிபதி குமாரசாமி கூறியதற்கும் மலைக்கும், மடுவுக்குமான வேறுபாடு உள்ளது. இதனால் தீர்ப்பே முற்றிலும் கேள்விக்குறியாகி விட்டது. தீர்ப்பு குறித்து வெளியாகி உள்ள கருத்துக்களை பார்க்கும் போது, அண்ணாதுரையின் "நீதிதேவன் மயக்கமா?" என்ற சொற்றொடர் தான் நினைவுக்கு வருகிறது என மதிமுக பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில், சுட்டிக்காட்டியுள்ளார்.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் 11ஆம்திகதி வழங்கப்பட்ட தீர்ப்பு குறித்து நான் எந்தக் கருத்தும் கூறவில்லை. இந்தத் தீர்ப்பு முந்தைய தீர்ப்பை தலைகீழாக மாற்றிப் போட்டு விட்டதால், தீர்ப்பின் முழு விபரத்தையும் அறிந்த பின்னரே கருத்துத் தெரிவிக்க முடிவு செய்தேன்.

உலக செவிலியர்கள் நாளை முன்னிட்டு, செவிலியர்களுக்கு நான் வாழ்த்துத் தெரிவித்தது தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது. நீதிபதி குமாரசாமி தந்த தீர்ப்பில், நீதிபதி சொத்துக் கணக்கிட்டதில் இமாலய தவறு நேர்ந்து இருக்கிறது என்பது மிகவும் அதிர்ச்சி தருகிறது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பல்வேறு வங்கிகளில் வாங்கிய கடன்களை எல்லாம் அவரது வருமானமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் எனக்கூறி, அந்த கூட்டுத் தொகை 24 கோடியே 14 இலட்சத்து 31 ஆயிரத்து 274 ரூபாய் என்றும், எனவே வருவாய்க்கும் சொத்துகளுக்கும் இடையிலான வேறுபாடு 2.82 கோடிதான் என்றும், இது வருவாயை விட 8.12 சதவீதம் மட்டும்தான் என்றும, 10 சதவீதம் வரை சொத்து மதிப்பு



அதிகம் இருந்தாலும் வழக்கை தள்ளுபடி செய்யலாம் என்று உச்ச நீதிமன்றத்தின் ஒரு தீர்ப்பை நீதிபதி குமாரசாமி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால் ஜெயலலிதாவின் வருமானத்தைவிட சொத்து மதிப்பு 76.75 சதவீதம் என்பதால், நீதிபதி இது குறித்து கணக்கிட்டது மிகப்பெரிய பிழை என்றும், தீர்ப்பின் அடிப்படையே தகர்ந்துவிட்டது என்றும், இந்தப் பிழையை நீக்கினாலே குற்றம் சாட்டப்பட்டவர்கள் உறுதியாக தணடனைக்கு உள்ளாவார்கள் என்றும், மிகச் சிறந்த சட்டத்தரணியான ஆச்சார்யா ஆணித் தரமாகச் சொல்லியுள்ளார்.

உணமைக்கும் நீதிபதி குமாரசாமி கூறியதற்கும் மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு உள்ளதால், தீர்ப்பே 'முற்றிலும் கேள்விக் குறியாகி விட்டது.

எனவே உண்மை வெளிச்சத்துக்கு வரவும், நீதி நிலைக்கவும் கர்நாடக அரசு இந்த வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வது ஒன்றுதான் சரியான நடவடிக்கையாக அமையும்.

பேரறிஞர் அண்ணா தந்த 'நீதி தேவன் மயக்கம் என்ற சொற்றொடரைத்தான் 11ஆம்திகதி தீர்ப்பு நினைவூட்டுகிறதுஎன அவர் மேலுமதெரிவித்தார். (இ-5)

# ஜெயாவை மோடி வாழ்த்தியது ஆரோக்கியமான அரசியலாம்

## தமிழிசை சவுந்தரராஜன் விளக்கம்

சொத்துக்குவிப்பு வழக்கிலிருந்து விடுதலையாகியுள்ள அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதாவை பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்தியது ஆரோக்கியமான அரசியலுக்கு வழிவகுத்துள்ளது என்று பாஜக மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி வந்துள்ள ஆர். எஸ். எஸ்.தலைவர் மோகன் பகவத்தை சந்திப்பதற்காக பாஜக மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் சென்னையிலிருந்து விமானம் மூலம் நேற்று முன்தினம் தூத்துக்குடி சென்றார்.

அப்போது விமான நிலையத்தில் நிருபர்களிடம் தமிழிசை சவுந்தரராஜன் கூறும்போது,

"சொத்துக்குவிப்பு வழக்கிலிருந்து ஜெயலலிதா விடுதலை ஆகியுள்ளதையடுத்து பிரதமர் மோடி மற்றும் அமைச்சர்கள் உட்பட பாஜகவினர் வாழ்த்து தெரிவித்துள்ளது ஆரோக்கியமான அரசியலுக்கு வழிவகுத்துள்ளது.



மேலும் அதிமுகவுடன் பாஜக கூட்டணி அமைக்குமா? என்று நிருபர்கள் கேட்டதற்கு, 'தமிழகத்தில் இடைத்தேர்தல் வர வாய்ப்புள்ளது. அப்படி வந்தால் அது தொடர்பாக யோசிப்போம்" என்று தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்தார்.(இ-5)

# உச்சநீதிமன்றில்தான் விடை காண முடியும்

## கி.வீரமணி

(சென்னை)

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட, முரண்பட்ட தீர்ப்புகளுக்கு உச்ச நீதிமன்றத்தில்தான் விடை காண முடியும் என்று திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

இது குறித்து கி.வீரமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது, அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதாவின மேல்முறையீட்டினை விசாரித்த கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி அவரை விடுதலை செய்து அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளார். இது ஒரு விசித்திர தீர்ப்பு எனது 58 ஆண்டுகாலசட்டத்தரணி தொழில் வரலாற்றில் இப்படி ஒரு தீர்ப்பினை இதுவரை கேட்டதே இல்லை.

ஜெயலலிதா மீண்டும் முதலமைச்சராகி விட்டால் தமிழகத்தில் நிலவிய செயலற்ற நிலை மாறி, ஆட்சியின் செயல்களுக்கு அவரும், அவரது ஆட்சியும் நேரடி பொறுப்பேற்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது என மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க கடற்படையின் ஹெலிகொப்டர் மாயமாம்

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் நிவாரண பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான ஹெலி கொபடர் அதில் பயணம் செய்த 8 பேருடன் மாயமாகியுள்ளது.

அமெரிக்க கடற்படை கப்டன் கிறிஸ் சிம்ஸ் தெரிவித்துள்ள தகவலின் படி ஹ்யூ என்ற அந்த ஹெலிகொப்டர் செவ்வாய்க்கிழமை நேபாளத்தின் சாரிகோட் அருகே நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருந்தது. அப்போது ஹெலிகொப்டரில் 6 அமெரிக்க கடற்படையினர் மற்றும் 2 நேபாள இராணுவ வீரர்கள் இருந்துள்ளனர். மாயமான ஹெலிகொப்டரை தேடும் பணியும், காணாமற் போனதற்கான காரணம் குறித்தும் விசாரணை நடந்து வருகிறது. (இ-5)

# உலகில் அதிக விலைக்கு பிகாசோ வரைந்த ஓவியம்



(நியூயோர்க்)

நவீன ஓவிய ஆர்வலர்கள் மத்தியில் பிகாசோவின் ஓவியங்களுக்கு எப்போதுமே தனி மதிப்பு உண்டு. 'குவர்னிகா', 'தி ஓல்ட் கிடாரிஸ்ட்' என்று அவர் வரைந்த ஓவியங்கள் அனைத்தும் இன்றளவும் மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்திருப்பவை ஆகும்.

அந்த வரிசையில், அவர் 1955 ஆம் ஆண்டில் வரைந்த "உமன் ஆப் அல்ஜியர்ஸ்" என்ற ஓவியம் நியூயோர்க்கில் உள்ள கிறிஸ்டி ஏல நிறுவனத்தில் நேற்று முன்தினம் ஏலத்துக்கு வந்தது. 12 நிமிடங்களே நடைபெற்ற இந்த விறுவிறுப்பான ஏலத்தின் இறுதி தொகை இந்திய மதிப்பில் 1150 கோடி ரூபாய். உலகில் அதிக விலைக்கு விற்கப்பட்ட ஓவியம் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பாதுகாப்பு அமைச்சர் சுட்டுப் படுகொலை! ஜனாதிபதி அட்டூழியம்

**(ஜெனீவா) ஜனாதிபதியின் கேள்விக்கு உரிய முறையில் பதிலளிக்க வில்லை என்ற குற்றச் சாட்டின் பேரில் வடகொரியாவில் பாதுகாப்பு அமைச்சர் ஹியோன் யோங்-சோல் பலபேர் முன்னிலையில் விமான எதிர்ப்பு துப்பாக்கி மூலம் சுட்டுப் படுகொலை செய்யப் பட்டுள்ளார்.**



இந்தப் பயங்கரச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

தலைநகர் பியாங்யாங்கில் கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி, விமான எதிர்ப்பு துப்பாக்கி மூலம் ஹியோனின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக கொரிய உளவுத்துறை உறுதிப்படுத்தியுள்ளது.

அங்குள்ள காங்கோன் இராணுவ கல்லூரியில் நடைபெற்ற இந்தச்சம்பவத்தை வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட அதிகாரிகள் நேரில் பார்த்ததாக தென் கொரியாவின் தேசிய உளவுத்துறை நிறுவனத்தின் துணை இயக்குநரான ஹான் கி பியோம் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் மக்கள் ஆயுத படையின் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட ஹியோன், இராணுவ நிகழ்ச்சிகளில் பங்கேற்ற ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுக்கு மரியாதை அளிக்கவில்லை என்றும், ஜனாதிபதியின் கேள்விக்கு முறையான பதில் அளிக்கவில்லை எனவும் கூறி மரண தண்டனை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலை. சாதனை

பிரிட்டனைச் சேர்ந்த ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் 200 கோடி பவுண்டுகள் (சுமார் ரூ.20,160 கோடி) நிதி திரட்டி சாதனை படைத்துள்ளது.

நன்கொடையாளர்கள், அறக்கட்டளைகள், முன்னாள் மாணவர்கள் ஆகியோரிடமிருந்து இந்த நிதி பெறப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்குவது, ஆசிரியப் பணியிடங்களை நிரப்புவது, பாடத்திட்டங்கள் நடத்துவது, புதிய கட்டடங்கள் கட்டுவது உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்காக ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் ஆண்டு தோறும் நிதி வசூலித்து வருகிறது.

2004ஆம் ஆண்டு முதல் வசூலிக்கப்படும் இந்த நன்கொடை, இதுவரை ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 20 கோடி பவுண்டுகள் (ரூ.2,016 கோடி) என வசூலாகி வந்தது.

பிரிட்டன் பல்கலைக்கழகங்கள் வசூலிக்கும் நன்கொடைகளில் இது மிக அதிக தொகையாக இருந்து வந்தது. இந்த நிலையில், உலகின் எந்தப் பல்கலைக்கழகமும் வசூல் செய்திராத அளவாக இந்த ஆண்டு 200 கோடி பவுண்டுகள் நிதி திரட்டப்பட்டுள்ளது. (இ-5)




# பிடல் காஸ்ட்ரோவுடன் பிரான்ஸ் ஜனாதிபதி சந்திப்பு

கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவை அந்த நாட்டு தலைநகர் ஹவானாவில் பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்ஸ்வா ஹொலாந்த் கடந்த திங்கட்கிழமை சந்தித்துப் பேசினார். கடந்த 100 ஆண்டுகளில் கியூபாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள முதல் பிரான்ஸ் நாட்டுத் தலைவர் ஹொலாந்த் என்பது குறிப்பிடத்தக்கது.



காஸ்ட்ரோவுடனான சந்திப்புக்குப் பிறகு செய்தியாளர்களிடம் ஹொலாந்த் பேசியபோது, கியூபாவின் வளர்ச்சியை பெரிதும் பாதித்துள்ள அமெரிக்கப் பொருளாதாரத் தடைகளை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இரு தலைவர்களின் சந்திப்பு குறித்து ஹொலாந்த் மேலும் தெரிவிக்கையில்,

எங்களது சந்திப்பு உலக அரசியலில் நிலையற்ற ஆனால் முக்கியமான காலகட்டத்தில் நடைபெற்றது.

கியூபா புரட்சியின் தந்தையான பிடல் காஸ்ட்ரோவிடம், நமக்குச் சொல்வதற்கான விடயங்கள் இன்னும் ஏராளமாக உள்ளன.

கியூபாவுடன் வர்த்தக உறவு மேற்கொள்ள உலக நாடுகள் ஆர்வமுடன் உள்ளன. சர்வதேச வர்த்தகம் நடைபெறும் விதமான சூழலை கியூபா ஏற்படுத்த வேண்டும் என்று ஹொலாந்த் தெரிவித்தார்.

1962 இல் கியூபா புரட்சிக்குப் பிறகு அந்த நாட்டின் மீது அமெரிக்கா கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தது. அவை இன்னும் நடைமுறையில் உள்ளன.

கியூபாவுடன் மீண்டும் நட்புறவு ஏற்படுத்தும் முயற்சிகளை அமெரிக்கா கடந்த ஆண்டு இறுதி முதல் எடுத்து வருகிறது. சில பொருளாதாரத் தடைகளைத் தளர்த்தும் விதமாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா உத்தரவிட்டுள்ளார்.


ஆனாலும், முழுமையான அளவில் அனைத்துத் தடைகளையும் நீக்க வேண்டுமானால் அமெரிக்க நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதலையும் பெற வேண்டும்.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் இரு அவைகளுமே தற்போது எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளன. எனவே, கியூபாவுடனான முழுமையான அரசியல் நட்புறவையும் பொருளாதார உறவையும் மேற்கொள்வதில் ஒபாமாவுக்கு அவரது நாட்டில் பெரும் சிக்கல் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இயற்கையினை அழிப்பவர்கள் பதில் சொல்லியே தீரவேண்டும்

## போப் பிரான்சிஸ் தெரிவிப்பு

இயற்கையை அழிப்பவர்கள் கடவுளுக்கு நிச்சயம் ஒருநாள் பதில் சொல்லியே தீர வேண்டும் என போப் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார். புவி வெப்பமயமாதல் குறித்தும், நேற்று முன்தினம் அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் நேற்று முன்தினம் பேசுகையில் போப் பிரான்சிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



புவி வெப்பமயமாதல் குறித்து போப் பிரான்சிஸ் பேசியதாவது, பூமி மிகவும் சக்தி வாய்ந்தது. இதனை அழிக்க முயல்பவர்கள் கடவுளுக்கு பதில் சொல்லியே தீர வேண்டும்.

சுற்றுச்சூழலை பாதுகாக்க தவறினால் உலக மக்களுக்கு உணவளிப்பதும் சிக்கலாகி விடும். பூமியில் அனைத்து உயிர்களுக்கும் போதுமான அளவிற்கு உணவு உள்ளது. ஆனால் அதனை அனைவருக்கும் பகிர்ந்தளிப்பதில் தான் குறைபாடு உள்ளது. அனைவருக்கும் உணவு கிடைக்க நம்மால் முடிந்ததை அனைவரும் செய்ய வேண்டும். அதே சமயம் பூமியின் சக்தி அளப்பரியது என்பதை அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

புவி வெப்பமயமாதல் விவகாரம் குறித்தும், அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் உலக மக்களுக்கும் போதிக்க வேண்டும் என உலக முழுவதும் உள்ள மத போதகர்கள் மற்றும் பாதிரியார்களுக்கு போப் பிரான்சிஸ் கடிதம் அனுப்பி உள்ளார். இயற்கையால் ஏற்படும் அனைத்து பிரச்சினைகளும் மனிதனாலேயே உருவாக்கப்பட்டது என தெரிவித்துள்ள அவர், இதற்கு அரசியல் ரீதியான நடவடிக்கைகள் மூலம் நிரந்தர தீர்வு காண வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் அற்பமானது என்று கருதினால்
நீயே அற்பமாகி விடுவாய்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பஞ்சணையில் கிடந்த மகிந்த பதறுவதன் காரணம் என்ன?

எந்த நேரமும் தான் கைது செய்யப்படலாம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

தனது கைது உறுதி என்பதை மகிந்த தெரிந்து கொண்டிருந்தாலும் அது எப்போது என்பது இன்னமும் தெரியவரவில்லை. இதனால் தனக்குப் பாதுகாப்பைத் தேட மகிந்த நினைத்தார்.

இதற்கான ஒரே வழி தன்னைக் கைது செய்து சிறையில் அடைக்க முயற்சிகள் நடப்பதாகக் கூக்குரல் இடுவது என அவர் முடிவு செய்தார் போலும்.

இதன் காரணமாக தனது கைது குறித்து முன் எச்சரிக்கையாக அவர் கூக்குரலிட ஆரம்பித்துள்ளார். தனது கைதுக்கான காரணம் தான் செய்த ஊழல் என்பதை அவர் தெரிந்திருந்தாலும் தனது கைதைத் தடுப்பதற்கு என்ன வழி என்று சிந்தித்த மகிந்த ராஜபக்ஷ, புலம்பெயர் தமிழர்களின் சூழ்ச்சி காரணமாகவேதான் கைது செய்யப்படவுள்ளதாக கூறியிருப்பதுதான் இங்கு விசித்திரமான செய்தி.

வன்னியில் நடந்த போரில் தமிழர்களைக் கொன்றொழித்ததன் காரணமாகவே தன்னைக் கைது செய்கின்றனர் என்றால் அது பொருந்தாது. மாறாக விடுதலைப் புலிகளின் சூழ்ச்சியால் என்னைச் சிறையில் அடைக்க ஏற்பாடு என்றால், புலிகளை வென்ற மகிந்தர் என்ற புகழுக்குப் பங்கம் வந்துவிடும்.

எனவே உள்ளகக் காரணங்கள் எதையும் கூறி தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது என்று உணர்ந்த மகிந்த ராஜபக்ஷ, புலம்பெயர் தமிழர்களை முன் நிறுத்துவதே பொருத்தம் என தீர்மானித்தார். இதனை அரங்கேற்ற நினைத்த அவர்,

எனதருமை சிங்கள மக்களே! நான் எந்த நேரமும் கைது செய்யப்படலாம். புலம்பெயர் தமிழர்களின் சூழ்ச்சியால் இந்த அரசு என்னைக் கைது செய்யவுள்ளது என உரக்கக் கூறியுள்ளார்.

புலம்பெயர் தமிழர்களின் முயற்சி காரணமாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கைது செய்வது என்றால் அது சாத்தியமான காரியமா என்ன?

ஆக, புலம்பெயர் தமிழர்களால் தனக்கு சிறைவாசம் தரப்படப் போகிறது எனக் கூப்பாடு போடுவதன் மூலம் சிங்கள மக்களின் அனுதாபங்களைப் பெற முடியும் என்ற நம்பிக்கையோடு மகிந்த பிதற்றுகிறார்.

எதுவாயினும் மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் நடந்த கைதுகள்; சிறையில் தடுத்து வைத்தல் என அனைத்தும் நீதிபரிபாலனத்திற்குட்பட்டு நடந்தது என்றால், மைத்திரியின் அரசில் மகிந்த கைது செய்யப்பட்டால் அதுவும் நீதிபரிபாலனத்திற்குட்பட்டதென்றே கருத வேண்டும்.

மாறாக மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது நடந்த கைதுகள், சிறை வைப்புகள் என்பன ஜனாதிபதியின்; பாதுகாப்புச் செயலரின் உத்தரவில் நடந்தது எனில், இப்போது நடப்பதையும் மௌனமாக ஏற்றுக் கொள்வதே நல்லது.

எனது ஆட்சியில் நான் எதுவும் செய்யலாம். ஆனால் மற்றவர்கள் ஆளும் போதும் அப்படி எதுவும் செய்ய முடியாது என்று நினைப்பது எங்ஙனம் நியாயமாகும். மகிந்தவின் ஆட்சியில் கடைப்பிடிக்கப்படாத ஜனநாயகம் மைத்திரியின் ஆட்சியில் பேணப்படும் என்று மகிந்த எதிர்பார்ப்பது மடமைத்தனமாகும்.

ஆட்சி அதிகாரத்தில் இருந்து விட்டால் தாம் எதுவும் செய்யமுடியும் என்ற மமதையின் விளைவுதான் மகிந்த போடும் கூப்பாடு. என்ன செய்வது! விதைத்ததை அறுப்பது தவிர்க்க முடியாதது என்ற இறை நீதி மகிந்தவிடமும் வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. ஆம், பஞ்சணையில் கிடந்தாலும் கைது... கைது... என்று பதறுவது விதி என்றால் தடுக்க யாரால் முடியும்?

## புதிய முறையில் அடுத்த தேர்தல்?

(கொழும்பு)

புதிய தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரே தேர்தலை நடத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

20ஆவது அரசியலமைப்புத் திருத்தம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வலுவான கோரிக்கையின் அடிப்படையில் முன்வைக்கப்படுவதாக இதன்போது அவர் சுட்டிக்காட்டினார்.

தொகுதிவாரி மற்றும் கலப்பு முறைகள் அடங்கிய இந்த முறைமை ஜனாதிபதி வேட்பாளராக இருந்தபோது மைத்திரிபால சிறிசேனவின் கொள்கை பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தமைக்கு அமைவாக தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்தி, அதன் பிரகாரம் தேர்தலுக்கு செல்ல வேண்டும் என்பதே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு எனவும் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். (எ-11)

## ரணிலின் பதவியை கவிழ்க்க முயற்சி

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து வெளியேற்றுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவித்துள்ளன.

தற்போதைய அரசாங்கம் 100 நாட்களுக்கு மாத்திரம்தான் மக்கள் ஆதரவு பெற்றுக்கொண்டது என அவர்கள் கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அப்படி என்றால் தற்போதைய அரசாங்கத்தில் ரணில் விக்கிரமசிங்க புண்ணியத்திற்காக பிரதமராகியுள்ளார் எனவும் அவர் அப்பதவியில் இருந்து விலக வேண்டும் என தெரிவித்து உறுப்பினர்கள் சிலர் பல்வேறு திட்டங்களை தீட்டி வருகின்றார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் பதவியில் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து நீடிப்பது சட்ட விரோதமான செயல் என மக்களிடையே பிரசாரம் செய்வதற்கான நடவடிக்கைகளுக்கு அவர்கள் ஆயத்தமாவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-11)

## நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தமிழில் முறையிட முடியாத நிலை
### பொதுமக்கள் விசனம்

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தமிழ் மொழி தெரிந்த பொலிஸார் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதால் தமிழில் முறைப்பாடுகளைச் செய்வதற்கு பொதுமக்கள் சிரமத்திற்கு உள்ளாக நேரிட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஒரு சில பொலிஸாரே தமிழ் மொழி தெரிந்தவர்களாக இருப்பதனால் பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடுகளைச் செய்யவரும் பொது மக்கள் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

தமிழ் தெரிந்த சிங்கள பொலிஸார் தமிழ் மொழியை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாத நிலையிலும் காணப்படுவதனால் பொது மக்கள் விசனமடைகின்றனர்.

எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமிழ்மொழி தெரிந்த பொலிஸாரை கூடுதலாக சேவையில் அமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக் கோரிக்கை விடுக்கின்றனர். (எ-11)

## அனல் மின் நிலையத்தால் 700 டொலர் சேமிப்பு!
### அரசாங்கம் தெரிவிப்பு

நுரைச்சோலை அனல் மின் நிலையம் ஆரம்பிக்கப்பட்டமையினால் 700 அமெரிக்க டொலருக்கும் அதிக பணம் சேமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

2011-ம் ஆண்டில் இருந்து அதன் நடவடிக்கைகளை ஆரம்பித்ததன் பின்னர், இப்பணம் சேமிக்க முடிந்ததாக அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இலங்கையின் சீன தூதரக அலுவலக பிரதானி ரேன் பெக்கியனுடனான சந்திப்பில் கலந்து கொண்டு இவ்வாறு தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தினமும் 1.5 அமெரிக்க டொலர்களை இதன்மூலம் சம்பாதிக்க முடிந்ததாக அங்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை நுரைச்சோலை நிலையத்தினால் இந்நாட்டின் மின்சார அவசியம் 100க்கு 40 -60 வீதம் பூர்த்தியடைந்துள்ளதாக அங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

கடந்த 08 மாதங்களுக்குள் மின் நிலையத்தினால் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகின்றமையும் விவாதிக்கப்பட்டுள்ளது.

இந்நாட்டு மின்சார துறையில் மட்டுமின்றி அனைத்து துறைகளுக்கும் சீனா வழங்கும் ஒத்துழைப்பு மற்றும் பொறியியல் ஆலோசனைகளை மதிப்பதாகவும் மின்சக்தி மற்றும் எரிபொருள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளதாக அரசாங்கம் செய்தி வெளியிட்டுள்ளது. (எ-11)

## சத்திய தரிசனம்



### இந்த நாள் நல்ல நாள்

❖ ஒருவரிடம் பொறுமையும், விடா முயற்சியும் சேர்ந்தால் எண்ணியதை எண்ணியவாறே பெற முடியும்.


❖ பசித்தவருக்கு உணவு அளிக்கும் நாளே நல்ல நாள் என்பதை உணருங்கள்.

❖ இதயத்தில் இறைவன் குடியிருக்கிறார். அவரை வேறெங்கு தேடினாலும் காண முடியாது.

❖ பனிக்கட்டி உருகுவது போல நம் வாழ்நாள் கரைகிறது. அதற்குள் மனிதப்பிறவியை பயனுள்ளதாக ஆக்குங்கள்.

❖ யாரையும் தாழ்வாகக் கருதாதீர்கள். கடவுளின் படைப்பில் அனைவருமே உன்னதமானவர்களே.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



### வர்மக் கலையும் சித்தர்களும்

இக்கலை மூலம் ஒருவர் தாக்கப்பட்டால் அதற்கென்று தனியாக உள்ள சிகிச்சை முறையைப் பயன்படுத்தியே சரிசெய்ய முடியும் என, அப்பனே வர்மத்தில் அடி பிடி வெட்டு குத்து கற்று பின் வரிசையுடன் பின் வர்ம இளக்கு செய்யே! என்ற வரிகள் விளக்குகின்றன.

நரம்பியலின் அடிப்படை தான் வர்மம். சுவாசத்திலுள்ள பிராணவாயு நுரையீரலில் அதிகநேரம் தங்குவதை மூலம் முறைப்படுத்தினர். இதைத்தான் பிரணாயாமம் என பெயரிட்டு அழைத்தனர். வர்மக் கலைக்கு பிரணாயாமம் அத்தியாவசியமான பயிற்சி.


இந்த உச்சந்தலை சுவாசம் பற்றி அறியாமல் எந்த ஒரு வர்ம மருத்துவரும், மருத்துவராக முடியாது. சரசுவாசமும், உச்சந்தலை சுவாசமும் பற்றிய உண்மை நிலைகளை அறிந்திருந்தால்தான் உடலில் உள்ள வர்மப் புள்ளிகள் பற்றித் தெரிந்துகொள்ள முடியும். காரணம் சரசுவாசம், உச்சந்தலை சுவாசம் இரண்டின் மூலம்தான் இரத்த ஓட்டத்தின் நிலை, இவையெல்லாம் சுவாசத்தைப் பொறுத்தே இயங்குகின்றன.

வர்மக்கலையின் அடிப்படைத்தேவை மனக்கட்டுப்பாடு, தவப்பயிற்சி, தலைசிறந்த இறையுணர்வு பெற்று அறநெறியில் வாழ்பவர்களுக்கு வர்மக்கலை கற்றுத்தரப்படும். அவர்களுக்குத்தான் வசப்படும். நேரடியாக குருவின் மூலம் மட்டுமே வர்மக்கலையைக் கற்க முடியும். இறையின் அருளும் குருவின் துணையும் இருந்தால் வர்மக்கலையைக் கற்று, பிறருக்கு உதவ முடியும்.

சித்தர் பெருமக்களின் தவத்தால் நமக்குக் கிடைக்கப்பெற்ற இந்த வர்மக்கலை, நரம்பியல் சிகிச்சையில் தலைசிறந்து விளங்குகிறது. நரம்புகளின் பெயர்களைக்கூட வகை தொகைப்படுத்தி வர்மநூல்கள் போதிக்கின்றன. அனைத்து விதமான நரம்பு நோய்களுக்கும் வர்ம மருத்துவம் சிகிச்சை அளிக்கிறது. இந்த மருத்துவத்துக்கு எதிர்விளைவோ பக்கவிளைவோ இல்லை. மருத்துவமும் ஆன்மீகமும் கலந்தது வர்மக்கலை. எனவே வர்மக்கலையைக் கற்றறிந்து, அதனைப் பிரயோகிக்கும் நிபுணத்துவம் உடையோரை வர்மாணி ஆசான் என அழைப்பது வழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜாகீர்கான் பந்துவீச்சால் வெற்றியை ருசித்தோம்



டெல்லி டேர்டெவில்ஸ் அணி 2 முறை சம்பியனான சென்னை அணிக்கு அதிர்ச்சி கொடுத்தது.

முதலில் விளையாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணியால் 6 விக்கெட் இழப்புக்கு 119 ரன்னே எடுக்க முடிந்தது.

பின்னர் விளையாடிய டெல்லி டேர்டெவில்ஸ் 16.4 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 120 ரன் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

'பிளேஆப்' வாய்ப்பை ஏற்கனவே இழந்து விட்ட டெல்லி அணி பெற்ற 5-வது வெற்றியாகும். சென்னை அணியை அதிர்ச்சிகரமாக தோற்கடித்தது குறித்து அந்த அணி கப்டன் டுமினி கூறியதாவது.

இந்த வெற்றி எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. கடந்த 4 போட்டியில் தோல்வியை சந்தித்த பிறகு வெற்றி கிடைத்துள்ளது. நாங்கள் மிகவும் சிறப்பாக செயல்பட்டோம். ஜாகீர்கானின் பந்துவீச்சு அபாரமாக இருந்தது.

வெற்றிக்கு அவரது பந்துவீச்சே முக்கிய காரணமாக இருந்தது. இளம் வீரர் ஸ்ரேயாஸ் அய்யர் திறமை மிக்க பட்ஸ்மேன் ஆவார்.

அடுத்த ஐ.பி.எல். போட்டியில் நாங்கள் மிகுந்த பலம் பெற்ற அணியாக திகழ்வோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. (க)

# மைதானத்திற்குள் நுழைய ஷாருக்கானுக்கு தடை



வான்கடே மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டியை காண பாலிவுட் நடிகர் ஷாருக்கானுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

மும்பை இண்டியன்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதும் போட்டி வருகிற இன்று வான் கடே மைதானத்தில் நடைபெறவுள்ளது.


இந்த மைதானத்திற்குள் நுழைய கொல்கத்தா அணியின் உரிமையாளரும், பாலிவுட் நடிகருமான ஷாருக்கான் அனு மதிக்கப்படமாட்டார் என தெரிகிறது.

2012-ல் மும்பை-கொல்கத்தா இடையிலான ஆட்டம் நடந்த போது, ஷாருக்கானுக்கும், பாதுகாப்பு ஊழியருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து வான்கடே மைதான வளாகத்தில் நுழைய ஷாருக்கானுக்கு 5 ஆண்டு தடை விதிக்கப்பட்டது.

எனவே கடந்த இரு சீசன்களை போன்றே இந்த ஆண்டும் அவரை அனுமதிக்கமாட்டோம் என மும்பை கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது. (க)

# காலிறுதியில் சானியா ஜோடி



இத்தாலி ஓபன் டென்னிஸ் தொடரின் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு இந்தியாவின் சானியா மிர்சா, சுவிட்சர்லாந்தின் மார்டினா ஹிங்கிஸ் ஜோடி முன்னேறியது.

இத்தாலியின் ரோம் நகரில், இத்தாலி ஓபன் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் இரட்டையர் பிரிவு 2வது சுற்றில், இந்தியாவின் சானியா மிர்சா, சுவிட்சர்லாந்தின் மார்டினா ஹிங்கிஸ் ஜோடி, ருமேனியாவின் இரினா, காமிலியா பெகு, மோனிகா நிகுலெஸ்கு ஜோடியை சந்தித்தது.

இதில் அபாரமாக ஆடிய சானியா, ஹிங்கிஸ் ஜோடி 6-4, 6-1 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது. (க)

# மேசைப்பந்தாட்ட இறுதிப்போட்டி இன்று

(மானிப்பாய்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட, அழைக்கப்பட்ட மேசைப்பந்தாட்ட கழக அணிகளுக்கிடையில் நடத்திய ஆண், பெண் இருபாலாருக்குமான மேசைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் நடை பெறவுள்ளது.

உடற்கல்வி அலகு பணிப்பாளர் க.கணேசநாதன் தலைமையில் நடைபெறும் இந்த மேசைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியில், பெண்கள் பிரிவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணியும் ஆண்கள் பிரிவில் யாழ். இந்து கல்லூரி அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணியும் மோதவுள்ளன.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரியின் ஆசிரியரும் யாழ். பல்கலைக் கழக முன்னாள் மேசைப்பந்தாட்ட அணியின் தலைவருமாகிய பி.விமலநாதன் கலந்துகொள்கின்றார். (க-23)

# ரோம் சர்வதேச டென்னிஸ் 3-வது சுற்றில் ஷரபோவா



இத்தாலியில் நடை பெறும் ரோம் சர்வதேச டென்னிஸ் போட்டித் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு 3-வது சுற்றில் விளையாட, நட்சத்திர வீராங்கனை மரியா ஷரபோவா (ரஷ்யா) தகுதி பெற்றுள்ளார்.

இரண்டாவது சுற்றில் அவுஸ்திரேலியாவின் ஜர்மிளா கஜ்சோவாவுடன் நேற்று மோதிய ஷரபோவா 6-2, 6-1 என்ற நேர் செட்களில் மிக எளிதாக வென்றார்.

இப்போட்டி 53 நிமிடம் மட்டுமே நீடித் தது. உக்ரைன் வீராங் கனை எலினா ஸ்விடோலினா 6-4, 6-2 என்ற நேர் செட்களில் உள்ளூர் வீராங்கனை பிளாவியா பென்னட் டாவை வீழ்த்தினார்.

ஸ்பெயினின் கர்லா சுவாரெஸ், போஜனா ஜோவனோவ்ஸ்கி (செர்பியா), கிறிஸ்டினா மிளாடெனோவிக் (பிரான்ஸ்) ஆகியோரும் 2வது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு 2-வது சுற்றில் சுவிஸ் வீரர் ஸ்டானிஸ லாஸ் வாவ்ரின்கா 4-6, 6-3, 6-2 என்ற செட் கணக்கில் ஜுவன் மொனாக்கோவை (அர்ஜென்டினா) வீழ்த்தினார்.

தாமஸ் பெல்லுச்சி (பிரேசில்), பெலிசியானோ லோபஸ், கார்சியா லோபஸ் (ஸ்பெயின்) அலெக் சாண்டர் டோல்கபோலோவ் (உக்ரைன்) ஆகியோர் 2-வது சுற்றுக்கு முன்னேறி உள்ளனர். (க)

# இங்கிலாந்து அணியில் நிராகரிப்பு! ஐ.பி.எல் போட்டிகளில் இணையும் பீட்டர்சன்



இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் இடம் இல்லை என்ற அறிவிப்பால் கோபம் அடைந்துள்ள பீட்டர்சன் இறுதிகட்ட ஐ.பி.எல். போட்டிகளில் கலந்து கொள்ள இந்தியா வருகிறார்.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம அணியின் சகவீரர்கள் மற்றும் நிர்வாகத்துடன் ஏற்பட்ட மோதல் காரணமாக இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் இருந்து பீட்டர்சன் நீக்கப்பட்டார். அதன்பிறகு மீண்டும் அணிக்கு திரும்புவதற்காக பல்வேறு முயற்சிகள் எடுத்தார்.

இந்திய ஐ.பி.எல். போட்டியை நிராகரித்து விட்டு இங்கிலாந்து கவுண்டியில் போட்டியில் விளையாடி வருகிறார். சுர்ரே அணிக்காக விளையாடும் அவர் கடந்த போட்டியில் முச்சதம் அடித்து அசத்தினார். இதனால் மீண்டும் இங்கிலாந்து அணிக்கு தேர்வு செய்யப்படுவோம் என்ற நம்பிக்கையில் இருந்தார்.

ஆனால் இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கு பீட்டர்சன் மீண்டும் அழைக்கப்படமாட்டார் என்று இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் புதிய இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ள ஆண்ட்ரூவ் ஸட்ராஸ் தெரிவித்துவிட்டார். இதனால் கடும் கோபம் பீட்டர்சன் அடைந்துள்ளார்.

இது குறித்து பீட்டர்சன் கருத்து தெரிவிக்கையில்,

இங்கிலாந்து கிரிகெட் நிர்வாகிகள் எனக்கு துரோகம் இழைத்துவிட்டனர். தற்போது நான் மிகவும் கோபமாகவும், மனதளவில் புண்பட்ட நிலையிலும் உள்ளேன்.

வரும் வெள்ளி அன்று இந்தியாவற்கு செல்ல இருக்கிறேன். ஐ.பி.எல். போட்டிகளில் கலந்து கொண்டு விளையாடுவதன் மூலம் என் மனம் சாந்தமாக்கும்.

மேலும் அடுத்து என்ன செய்வது என்பது பற்றி யோசிக்க முடியும். இங்கிலாந்து அணியின் உடையை அணிந்து கொண்டு விளையாட முடியாததற்காக வருந்துகிறேன் என தெரிவித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெங்களூரினை பந்தாடியது கிங்ஸ் லெவன் பஞ்சாப்

பெங்களூருக்கு எதிரான போட்டியில் பஞ்சாப் அணி 22 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்தியாவில் ஐ.பி.எல்., லீக் தொடர் நடக்கிறது. மொகாலியில் நேற்று நடந்த லீக் போட்டியில் பெங்களூரு, பஞ்சாப் அணிகள் மோதின.



மழை பெய்ததால் உண்டான ..பதம் காரணமாக, போட்டி 2.45 மணி நேரம் தாமதமாக ஆரம்பமாகியது. போட்டி 10 ஓவர்களாக குறைக்கப்பட்டது. நாணயச்சுழற்சி பெங்களூரு அணி தலைவர் ஹோலி முதலில் பந்து வீச்சைத் தேர்வு செய்தார்.

பஞ்சாப் அணிக்கு சகா (31) அதிரடி தொடக்கம் தந்தார். வோரா (11), மேக்ஸ்வெல் (10), மில்லர் (14) உள்ளிட்டோர் விரைவில் வெளியேற, பஞ்சாப் அணி 10 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 106 ஓட்டங்கள் எடுத்தது.

அக்சர் படேல் (20), ரிஷி தவான் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.


பின்னர் களமிறங்கிய பெங்களூர் 10 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 84 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் மண்டீப் சிங் 20, விராட் ஹோலி 19, கிறிஸ் கெயில் 17, டி வில்லியஸ் 10 ஓட்டங்கள் எடுத்தனர்.

பந்து வீச்சில் பஞ்சாப் அணி சார்பில் அனிருத் சிங், அக்ஷர் பட்டேல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், சந்தீப் சர்மா, ஹென்றிக்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக பஞ்சாப் அணியின் ஆஹ்ஷை பட்டேல் தெரிவானார். (க)





© BCCI




## சம்பியன்ஸ் லீக் கால்பந்து: இறுதிப்போட்டியில் பார்சிலோனா

சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் இறுதிப்போட்டிக்கு பார்சிலோனா அணி முன்னேறியது.

அரையிறுதியில் பேயர்ன் முனிக் அணியை தோற்கடித்தது.



ஐரோப்பிய கால்பந்து சங்கங்களின் கிளப் அணிகள் மோதும் சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் அரையிறுதியில் பார்சிலோனா, பேயர்ன் முனிக் அணிகள் விளையாடின.

ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் நடந்த அரையிறுதியின் முதல் போட்டியில் பார்சிலோனா அணி 3-0 என பேயர்ன் முனிக் அணியை வென்றது. பின், ஜெர்மனியின் முனிக் நகரில் நடந்த 2வது போட்டியில் பேயர்ன் முனிக் அணி 3-2 என பார்சிலோனாவை தோற்கடித்தது. பேயர்ன் முனிக் அணி சார்பில் பெனாடியா (7வது நிமிடம்), லெவான்டோ வ்ஸ்கி (59வது), முல்லர் (74வது) தலா ஒரு கோல் அடித்தனர். பார்சிலோனா அணிக்கு நெய்மர் (... 29வது நிமிடம்) இரண்டு கோல் அடித்து ஆறுதல் தந்தார்.

இரண்டு போட்டிகளின் முடிவில் கோல் அடிப்படையில் முன்னிலை வகித்த பார்சிலோனா அணி 5-3 என்ற கணக்கில் வெற்றி பெற்று 8வது முறையாக இறுதிக்கு முன்னேறியது. முன்... விளையாடிய 7 இறுதிப்போட்டியில், 4ல் (1992, 2006, 2009, 2011) வெற்றி பெற்று கோப்பை வென்றது. மூன்றில் (1961, 1986, 1994) தோல்வி அடைந்து 2வது இடம் பிடித்தது. (...)





கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 59-வது ஆண்டு நிறைவையொட்டி அங்கத்தவர்களுக்கிடையே மரதன் ஓட்டப் போட்டியானது நடைபெற்றது. நிலைய அரங்கில் ஆரம்பமாகி கைதடி மத்தி ஊடாக கைதடி வடக்கிற்கு சென்று அதன் வழியே கைதடி தெற்கிற்கு சென்று மீண்டும் நிலைய அரங்கில் நிறைவடைந்தது.

இதில் சு.சுவர்ணன் முதலாம் இடத்தையும், ர.கயன் இரண்டாம் இடத்தையும், சு.எழிலன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். (க)

## ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி தங்கம் வென்ற இலங்கை மாணவி



டோஹாவில் நடைபெற்ற முதலாவது ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளில் பெண்களுக்கான 400 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் யாமனி துலாஞ்சலி தங்கப் பதக்கம் பெற்றுள்ளார்.

டோஹா விளையாட்டரங்கில் இப் போட்டி இடம்பெற்றது.

இதில் அம்பகமுவை பிரதேசத்தை சேர்ந்த யாமினி துலாஞ்ச... நிமிடம் 01.27 செக்கனில் நிறைவு செய்து தங்கப்பதக்கத்தை வென்று இலங்கைக்குப் பெருமை சேர்த்துள்ளார். (...)

# நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 25 வீத இடம் தரப்பட வேண்டும்

## பெண்கள் அமைப்புக்கள் கோரிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் பெண்களின் எண்ணிக்கையை அதிகரிக்க, அரசியல் கட்சிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

20வது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்ற போது பெண்கள் மற்றும் ஊடக கூட்டு அமைப்பு இந்த கோரிக்கையை விடுத்தது.

நல்லாட்சி அரசாங்கத்தின் திட்டங்களின் கீழ் பெண்களுக்கு அரசியல் சமவுரிமை வழங்கப்படுதல் அவசியம் என்று கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் அனைத்து பிரஜைகளுக்கும் இனம், மதம், சாதி என்று பார்க்காமல் சமவுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் கூட்டமைப்பு கேட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 25 வீதமாக அதிகரிக்கப்பட வேண்டும். 1931ஆம் ஆண்டு இலங்கையில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. எனினும் உள்ளூராட்சி சபைகளிலும் நாடாளுமன்றத்திலும் சிறிய தொகை பெண்களே உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படுகின்றனர்.

எனவேதான் பெண்கள் பிரதிநிதித்துவம் தொடர்பான சர்வதேச தரப்பட்டியலில் 153 நாடுகளில் இலங்கை 140 ஆம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் சனத் தொகையில் பெண்கள் 52 வீதமாக உள்ளனர். எனினும் அவர்களுக்கான உரிமைகளும் சலுகைகளும் அனைத்து இடங்களிலும் வழங்கப்படவில்லை.

இந்தநிலையில் நாடாளுமன்ற தேர்தலின் போது தொகுதிவாரி, மாவட்டவாரி மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவ முறைகளின் கீழ் 25 வீதப்பெண்கள் இந்த தடவை நாடாளுமன்றத்துக்கு செல்ல வழியேற்படுத்தப்பட வேண்டும் என்று பெண்கள் மற்றும் ஊடக கூட்டு அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (எ-11)

# புதனன்று...

சரவையில் விவாதிக்கப்பட்டு, எதிர்வரும் 19ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டதும் பாராளுமன்றம் கலைக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

20வது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் சரி, நிறைவேற்றப்படா விட்டாலும் சரி, பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என்பதில் ஐதேக உறுதியாக இருக்கிறது. (எ-11)

## உப பீடாதிபதியின் மணி விழா இன்று

யாழ்ப்பாண கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி (நிர்வாகம்) கலாநிதி செல்வி நல்லையா இன்று சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

இவரின் மணி விழா இன்று யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியில் இடம்பெறும்.

யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரியில் உப பீடாதிபதியாக கடமையாற்றிய செல்வி நல்லையா கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் நீண்ட காலம் விரிவுரையாளராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IELTS இல்லாமல்
ஐரோப்பா போக
பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, நோர்வே உள்ளிட்ட 23 நாடுகளுக்குச் செல்லக்கூடிய செங்கன் விசா
பகுதி நேர வேலைவாய்ப்புடன் பட்டக்கல்வியைத் தொடர்ந்து, வேலைவாய்ப்புடன் விரும்பிய நாட்டில் குடியேறலாம்
க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடச் சித்தி அவசியம்!
அழையுங்கள்
077 36 16 798
SIKARAM
Education Abroad
Work, Migration & Visa Solutions
எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்
Sikaram (Pvt) Ltd.
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
யாழ் பஸ் நிலையத்துக்கு மிக அருகில்
(C-960)

Architectural CAD Centre
Advance Programme in
Auto CAD

Punch
5 in 1 Home Designing
(3D-Animation Software)
077-5116320, 071-8617972
(C-967)

## மகிந்த...

வருத்தமளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்னும் இந்த நாட்டின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறான போராட்டமாக இருந்தாலும், பாராளுமன்றத்தை எந்த நேரத்தில் கலைத்தாலும் நாங்கள் யாரும்பயப்பட போவதில்லை. தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்க நாங்கள் ஆயத்தமாகவே உள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு தொற்றியிருக்கும் நோய் என்னவென்றால் முன்னாள் தலைவர்கள் ஒவ்வொருவராக குற்றப் புலனாய்வு பிரிவிற்கு அனுப்புவதே அந்தநோய்க்கானமருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கிய பின்னரே கொடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## அமைச்சரவைக்கு முழு சுதந்...

களைச் சந்திக்க நேரிட்டதாக அரச தாதியர் சங்கத்தின் தலைவர் இங்கு சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால், கடந்த 5 வருடங்களாக நான் சந்தித்ததுபோல் இவர்கள் அடக்குமுறைகளைச் சந்திப்பார்களா என்ன?

நான் எவ்வளவு விளக்கிக் கூறினாலும், அது அவர்களுக்குப் புரியாது. புரியாது என்பதைவிட கணக்கில்கொள்ள மாட்டார்கள் என்றே கூற வேண்டும்.

இப்படி பல அடக்குமுறைகள். 5 வருடங்களாக சுயாதீனமாக செயற்பட முடியவில்லை. செயலாளர்கள், பணிப்பாளர்களைக் கட்டுப்படுத்த முடியாது.

எனவே, இந்நிலை தற்போது மாறியுள்ளது. முதுகெலும்புடன் செயற்படக்கூடிய வகையில் அமைச்சரவைக்கு முழு சுதந்திரத்தையும் வழங்கியுள்ளேன்.

இதேவேளை, தாதியர்கள் கல்வி பயில்வதற்காக பல்கலைக் கழகமொன்று அமைக்கப்படும். சகல வசதிகளுடனும் இதை விரைவில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்காக சுகாதார அமைச்சருக்கு நான் முழு ஒத்துழைப்பையும் வழங்குவேன். இலவசக் கல்வி, இலவச சுகாதாரத்துக்காக நாம் 5 சதவீத ஒதுக்கீடுகளை செய்வதற்கு உத்தேசித்துள்ளோம் என்று கூறியுள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால. (எ-11)

## வெளிநாட்டு...

அளித்துள்ள முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

அனைத்து இலங்கையர்களினதும் நம்பிக்கையை பெறுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை சுட்டிக்காட்டியுள்ள அவர் காணமற்போனவர்கள் விவகாரத்திற்கு தீர்வை காண்பதற்கும், பொதுமக்களுக்கு உரிய நிலங்களை மீள வழங்குவதற்கும் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்துள்ளார்.

ஊடகங்களுக்கும், வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனும் தொடர்ந்தும் இவ்வாறான சந்திப்பை மேற்கொள்வதற்கு வெளிவிவகார அமைச்சு எண்ணியுள்ளது, அதற்காக பேச்சாளர் ஒருவர் விரைவில் நியமிக்கப்படுவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## பிரேசிலுக்கான தூதுவராக ஜெகத் ஜெயசூரிய

(கொழும்பு)

இலங்கையில் கூட்டுப்படைகளின் தலைமையதிகாரி ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய, பிரேசில் நாட்டுக்கான தூதுவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதன்படி அவர் உயர் பதவிகளுக்கான நாடாளுமன்ற குழுவின் முன்னிலையில் பிரசன்னமாகவுள்ளார்.

தாம், நேற்று முன்தினம் பிரேசிலுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டமை உறுதி செய்யப்பட்டதாக ஜெகத் ஜெயசூரிய குறிப்பிட்டுள்ளார்.

2009-ம் ஆண்டு போர் நிறைவடைந்த பின்னர் சரத் பொன்சேகாவுக்கு பின்னர் ஜெகத் ஜெயசூரிய இலங்கையின் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

வன்னித் தளபதியாகவும் செயற்பட்ட அவர் கூட்டுப்படைகளின் தலைமையதிகாரியாக 2013-ம் ஆண்டு நியமிக்கப்பட்டார். (எ-11)

## கோத்தபாயவை கைது...

மற்றும் சரத் டி ஆப்ரூ ஆகியோரினால் முன்னாள் பாதுகாப்பு செயலாளரின் அடிப்படை உரிமை மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக, ஸ்தாபிக்கப்பட்ட பொலிஸ் நிதி மோசடி ஒழிப்புப் பிரிவின் ஊடாக, தமது கட்சிக்காரரை கைது செய்வதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாக, கோத்தபாய ராஜபக்ஷ சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த வர்த்தமானி ஊடாக அமைச்சரவை உபகுழுவொன்றுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி வாதிட்டார்.

அவ்வாறு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு சட்டத்தில் இடமில்லை என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, அரசியல் அழுத்தம் காரணமாகவே இவ்வாறு இடம்பெறுவதாக சுட்டிக்காட்டினார்.

இந்த வர்த்தமானி அறிவித்தல் அமைச்சரவையின் அனுமதியுடன் வெளியிடப்பட்டதுடன், பொலிஸாரினால் அனைத்து விசாரணைகளும் முன்னெடுக்கப்படுவதாக பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் அர்ஜுன் ஒபேசேகர குறிப்பிட்டார்.

கைது செய்வது தொடர்பில் எவ்வித தீர்மானத்தையும் எடுக்காத நிலையில், இவ்வாறான மனு செல்லுபடியற்றது என அவர் வாதிட்டார்.

இடைக்கிடையே ஏற்படும் தேவைக்கு ஏற்ப விசேட பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்கு பொலிஸ்மா அதிபருக்கு முடியும் என பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயங்களை ஆராய்ந்து பார்த்த உயர்நீதிமன்ற நீதியரசர்கள், ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி மனு மீதான பரிசீலனை முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவித்தனர்.

மனு மீதான விசாரணை நிறைவுபெறும் வரையில் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்வதை தவிர்க்குமாறு இதன்போது நீதிமன்றம் உத்தரவிட்டது. (எ-11)

## ஜனாதிபதி...

இது குறித்து முறைப்பாடு செய்துள்ளார்.

1981-ம் ஆண்டு 15-ம் இலக்க ஜனாதிபதி தேர்தல் சட்டத்தின் அடிப்படையில் தனது வெற்றியை உறுதி செய்து கொள்வதற்காக பதவிகளை வழங்குவதாக உறுதியளித்தல், பதவிகளை வழங்குதல் மற்றும் பதவிகளை பொறுப்பேற்லும் லஞ்ச ஊழலாகவே கருதப்படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெற்றிக்காக பாடுபட்டால் பதவி வழங்குவதாக அறிவித்தமையும் வெற்றியின் பின்னர் பதவியை ஏற்றுக்கொண்டமை காரணமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் லஞ்ச ஊழல் மோசடியில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டம் முடிந்து விட்டது. இனி எங்களது 100 நாள் ஆரம்பமாகியுள்ளது என உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (எ-11)

தென்னிந்திய திரையுலக பாடகர் T.M. சௌந்தரராஜனின் புதல்வர் செல்வக்குமார் மற்றும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் போல் வேடம் கொண்டு உலகையே கலக்கிவரும் நடிகர் "நாமக்கல் எம்.ஜி.ஆர்" அவர்களை உங்கள் இசை நிகழ்வுகளிற்கு அழைத்திட மற்றும் இசைக்குழு தொடர்புகளுக்கு - மோகன் சவுண்ஸ்
0777030234
(C-966)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af

வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்.
உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.
INTERNATIONAL DIPLOMAS.
ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)
வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
(446)

## அடுத்த பாரா...

னர் முன்னெடுக்கப்படும். விரைவில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கு பின்னர் அமைக்கப்படவுள்ள புதிய பாராளுமன்றத்திலேயே வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வுக்காண நடவடிக்கை எடுகப்படும்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கு பின்னர் அமைக்கப்படவுள்ள பாராளுமன்றத்தின் ஊடாக நாட்டுக்கு புதிய அரசியலமைப்பு ஒன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அந்த அரசியலமைப்பின் ஊடாக வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கான தீர்வும் உள்ளடக்கப்படும்.

புதிய அணுகுமுறையின் ஊடாக வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். எனவே அடுத்த பாராளுமன்றத் தேர்தலின் பின்னரே இந்த விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படும் என்றார். (எ-11)

## வீரதுங்க...

கோத்தபாய தாக்கல் செய்த மனு நேற்று புதன்கிழமை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மூன்று நீதியரசர்கள் கொண்ட விசாரணைக் குழுவில் அடங்கும் நீதியரசர் அலுவிகார தனிப்பட்ட காரணங்களுக்காக தாம விலகிச் செல்கிறார் எனத் தெரிவித்துள்ளார். (எ-11)

## மின்சாரம்...

ஊழியரான செல்லத் தம்பி சுதர்சன் (வயது 42) என்பவரே உயிரிழந்தவராவார்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் மின்சார சபை ஊழியரான பிரஸ்தாப குடும்பஸ்தர், நேற்றையதினம் மின்சார திருத்த வேலைகளுக்காக மின்சார சபை வாகனத்தின் ஏணியில் ஏறிய பொழுது மின்சாரம் தாக்கி ஏணியில் இருந்து தூக்கி வீசப்பட்டார்.

உடனடியாக அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் அவர் உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னரே மின்சாரசபையில் ஊழியராக இணைந்துள்ளதாகத் தெரியவருகிறது. (எ-3.60)

தவத்திரு யோகசுவாமிகளின் நற்சிந்தனை பாடல்
இசைத் தேர்வு 2015
பாடசாலை / பல்கலைக்கழக / கல்வியற் கல்லூரி மாணவர்களிடையே நடாத்தப்படவுள்ள இசைத்தேர்வு விண்ணப்ப முடிவுத் திகதி அனேகமானோரின் வேண்டுகோளிற்கிணங்க எதிர்வரும் 20.05.2015 வரை நீடிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவங்கள் சிவதொண்டன் நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
வெற்றியீட்டும் போட்டியாளர்களுக்கு ரொக்கப் பணப்பரிசு, பெறுமதி மிக்க சான்றிதழ், பதக்கம் ஆகியவை வழங்கி கௌரவிக்கப்படுவார்கள்.
இறுதித் தேர்வு இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.
மேலதிக விபரங்களுக்கு 0212222799
பரீட்சை செயலாளர்
சிவதொண்டன் சபை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.